www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**பொன் விழா !**

பொட்டை அழியுந்தப் புடவையினைப் போய்மாத்து
கட்டையில போவாங்கள் கண்டாலும் ! - அட்டை
எடுத்தாச்சோ ? எங்கைபொலிஸ் ரிப்போட் ? சரி இப்ப
நடவின்று பெப்ரவரி நாலு !

— ஈழமோகம்

இதழ் 139 ஜன.29 – பெப்.11 . 1998 விலை ரூபா. 10.00



# தலதா மாளிகைக் குண்டு : அதிர்ந்து போனது யார் ?

# யாருடைய சுதந்திரத்திற்குப் பொன் விழா ?



# இவர்களுக்குச் சுதந்திரம் ! அவர்களுக்குத் தடை ! எங்களுக்கு ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## யாழ்ப்பாணத்திலிருந்து புதிய பத்திரிகைகள் ?

யாழ் குடாநாடு விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டு அரச படைகளினால் அங்குள்ள பொது மக்களும் விடுதலை செய்யப்பட்ட தாகக் கூறுகின்ற இலங்கை அரசு, அங்கு மக்கள் அமைதியாக வாழ்வ தாகப் பல்வேறு வழிகளிலும் காட்டிக் கொண்டிருக்கின்றது. சுமுக வாழ்க் கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இந்த மக்களுக்கு சிவில் நிர்வாகத்தை உருவாக்குவதற்கே யாழ் குடாநாட் டில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவ தாக அரசு அறிவித்தது.

வேதவாக்காக இதனை ஏற்றுக் கொண்ட தமிழ் கட்சிகளும் தடல் புடலாக தேர்தல் பிரசாங்களில் ஈடுபட்டு வாக்கு வேட்டையில் இறங்கினார்கள்.

கடந்த ஞாயிறன்று கண்டி தலதா மாளிகையின் முன்னால் அதி சக்திமிக்க குண்டு ஒன்று வெடித்து நகரமும் அதன் அயல்பகுதிகளும் மட்டுமன்றி கொழும்பு மாநகர பௌத்த சிங்களவர்களும் அல்லோல கல்லோலப்பட்டு அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டார் கள்.

இந்த நிர்ப்பந்தங்களுக்குப் பரிகாரம் காணுவதைப் போல திங்களிரவு இலங்கை அரசு விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக வர்ணித்து தடை செய்யும் உத்தரவையும் வானொலி மூலமாக அறிவித்தது.

இதேவேளையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளின் இறுதித்தினமான திங்களன்று தமிழ் கட்சிகள் உச்சகட்ட பிரசாரத்தை நடத்தின.

இதன் போது ஒருவரை ஒருவர் தோலுரித்து நார் நாராக்கி உண்மைச் சொரூபங்களை அம்மணமாக்கி யாழ் மக்களுக்கு தாம் யார் என்பதை நன்கு இனம் காட்டினார்கள்.

துண்டுப் பிரசுரங்கள் புற்றீசல் போல வெளிவந்தன. போதாக்குறைக்கு (மரண) வாக்கு மூலங்களாக தேர்தல் எதிரிகள் பற்றிய பல்வேறு விடயங் கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலி பெருக்கிகளின் ஊடான பிரசாரமும் நடைபெற்றது.

யாழ் மக்களின் காதுகள் களைத்துப் போதும் போதும் என்ற அருவருப் போடு சலித்துக் கொள்ளும் அளவுக்கு பிரசாரங்கள் அமைந்திருந்தன

யதார்த்தத்தை மறந்து அரசியல் மாயைக்குள் தமிழ் அரசியல் கட்சிகள் யாழ் தேர்தலின் ஊடாக மூழ்கியுள் ளது போதாதென்று, இங்குள்ள பத்திரிகைத் துறையிலும் கட்சிகள் நாட்டம் செலுத்தத் தொடங்கி யுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை வெளிவந்து கொண்டிருப்பது தெரிந்ததே. மிகப் பழம் பத்திரிகை யான ஈழநாடு யாழ் இடப் பெயர்வோடு நின்று போய்விட்டது. அது வன்னியிலிருந்து சிறிய அளவில் வெளிவருவதாகவும் ஒரு தகவல்.

ஆயினும், தமிழ்க் கட்சிகளின் பிரசாரப் பணிகளுக்கு உதயனால் ஈடுகொடுக்க முடியவில்லை (அல்லது இடம் கொடுக்கவில்லை) என்ற காரணத்தினால் இரண்டு கட்சிகள் ஏட்டிக்குப் போட்டியாகப் பத்தி ரிகைகள் வெளியிடுவதற்குரிய பூர் வாங்க ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கியுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

ஈ.பி.டி.பியினர் பத்திரிகை வெளி யீட்டுக்காக அரச வங்கி ஒன்றிடம் பணக்கடன் கேட்டு ஏற்கெனவே விண்ணப்பித்துள்ளனராம்.

பத்திரிகையை எப்படி, எவ்வாறு நடாத்துவது என்பது பற்றி புளொட் முக்கியஸ்தர்கள் மிகத்தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்களாம். இதற்கிடையில் ''சூரியகாந்தி'' என்ற பெயரில் யாழ் வர்த்தகர்கள் சிலர் ஒன்றிணைந்து பத்திரிகை வெளியிடு வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்துமுடித்துள்ளதாகத் தெரிகின் றது. பத்திரிகையின் பெயரும் பதிவு செய்யப்பட்டுவிட்டதாகவும் கூறப் படுகின்றது.

1995ம் ஆண்டு ஒக்டோபரில் வேரோடு இடம்பெயர்ந்த யாழ் மக்க ளில் பலர் வன்னி, வவுனியா, திருகோணமலை, கொழும்பு என பல்வேறு தங்கு மடங்களில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

சொந்த இடங்களுக்குத் திரும்பு கின்றவர்கள் மன்னார், வவுனியா, திருமலை திறந்தவெளி சிறைச்சாலை முகாம்களில் யாழ்ப்பாணத்துக்கான கப்பலுக்காக தவணை முறையில் ஏங்கிக் காத்திருக்கிறார்கள்.

இடிந்து சிதைந்த வீடுகளையும் எல்லைகள் தூர்ந்து போன காணி களையும் எவ்வாறு மீளமைப்பது என்பதற்கான வழி தெரியாமல் சொந்த இடங்களுக்குத் திரும்பிய வர்கள் தலையில் கைவைத்து அழுது கொண்டிருக்கிறார்கள்.

இதனிடையே சுற்றி வளைப்புகள் கைதுகள் துப்பாக்கிப்பிரயோகங்கள், திடீர் மரணங்கள் என வாழ்க்கை குழம்பிப் போயுள்ளது.

இந்தச் சூழ்நிலையிலேயே சுதந்தி ரமான ஜனநாயகத்தின் அடிநாதமான வாக்களிப்பின் மூலம் மக்கள் தமது தலைவர்களைத் தெரிவு செய்வதற் கான தேர்தலும் நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து ஜனநாயகத்தின் இன்னுமோர் அம்சமான சுதந்திரமாக கருத்துக்களைத் தெரிவிப்பதற்குரிய பத்திரிகைகளை வெளியிடுவதற்கான முயற்சிகள்.

வாழ்க யாழ்ப்பாணம்! வளர்க தமிழ் கட்சிகளின் ஜனநாயகம்!!

## புதிய கறுப்புச் சட்டம் !

1997 டிசம்பர் 10ம்திகதி அரச விசேட வர்த்தமானியில் பயங்கரவாத தடுப்புத்சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள கைதிகளை பார்வையிட வருவதை கட்டுப்படுத்துமுகமாக புதிய அறிவுறுத்தல்களை ஜனாதிபதி சந்திரிகா பிறப்பித்துள்ளார்.

இப்புதிய கட்டளையானது பாதுகாப் புக் கட்டளைச் சட்டத்தின் 40வது பிரிவின் கீழ் அவசர மறியற்சாலை சந்திப்புகள் ஒழுங்கு விதிகள் என அழைக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவினால் பிறப்பிக் கப்பட்டுள்ள இப்புதிய ஒழுங்குவிதி கள் தமிழ் பேசும் மக்களை மேலும் மேலும் மூர்க்கத்தனமான முறையில் நசுக்கி ஒடுக்குவதற்கு வழிகோலவே ஏதுவானதாக இருக்கிறது.

இப்புதிய கட்டளைகளானது அவசர காலச் சட்டத்தின் கீழ் அல்லது பயங்கர வாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறைக ளில் அல்லது தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி எழுத்து மூலம் குறிப்பிடும் நபர் ஒருவர் மட்டும் வாரத்தில் ஒரு தடவை மாத்திரமே சென்று பார்வையிட அனுமதியைப் பெறத்தகுதி உடையவ ராகின்றார். தடுத்து வைக்கப்பட்டி ருக்கும் கைதியைப் பார்க்க வருபவர் தான் வசிக்கும் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரியின் கடிதம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் அவர் பற்றிய எந்த அதிருப்தியும் பொலிசாருக்கு இல்லாமல் இருத்தல் வேண்டும். இதனைச் சிறையதிகாரி கள் தெளிவுற அறிந்ததன் பின்னே குறித்த நபர் பார்வையிடும் அனும தியை வழங்குவர். இவ்வாறு பார்க்க வருபவர் பொலிஸ் அதிகாரியின் கடிதத்தை சிறைச்சாலை அதிகாரியி டம் ஒப்படைக்க வேண்டும்.

எவரும் அனுமதிக்கப்பட மாட்டார் கள் என களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சர் அறிவித்துள்ளார்.

எவ்விதக் குற்றச்சாட்டுகளுமின்றி தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக கைது செய்யப்பட்டு தடுப்புமுகாம் களிலும், சிறைச்சாலைகளிலும் அடை த்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான தமிழர்களின் வாழ்க்கை ஒரு பக்கத்தில் சீரழிந்து கொண்டி ருக்க, மறுபக்கம் அவர்களை பார்வை யிடக் கூட உறவினர்களுக்கு அனுமதி மறுக்கப்படும் 'ஜனநாயகம்' அரங் கேறிக் கொண்டிருக்கிறது.

டிசம்பர் 12ம்திகதி களுத்துறைச் சிறையில் கிரிமினல் சிங்களக்கைதிக ளால் திட்டமிட்ட முறையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட குரூரமான தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டும் 17 படுகாய மடைந்தும் உலகின் கண்களிலிருந்து விடுபடாத சில தினங்களுக்குள் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த புதிய கட்டளைகள் அரசின் பாஸிஸத்தை தெளிவாக உணர்த்துகின்றன.

இப்புதிய நடைமுறைகள் தடுப்புக் காவலிலுள்ளவர்களின் உறவினர் களுக்கு எத்தனை சிரமங்களைத் தரப்போகிறது? பொலிஸ் நிலையம் சென்று கடிதம் பெறுவதென்பது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இலகுவான ஒன்றல்லவே?

இதையெல்லாம் விட தாய், தந்தை, சகோதரர்கள், மனைவி, குழந்தைகள் என பலதரப்பட்டோர் இருக்கையில் வடகிழக்கின் வெகுதூரங்களிலிருந்து பலதரப்பட்ட பாதுகாப்பு கெடுபிடி களுக்கு மத்தியில் தென்னிலங்கை வந்து 'சமாதானத்துக்கான ஜனநாயக' அரசில் ஒருவர் மட்டுமாவது பார்க்க முடிந்ததே என்று திருப்திப்பட்டுப் போய்விட வேண்டியது தான் தமிழ் மக்களின் தலைவிதி போலும்.



கைதுகளைப் பார்கக வருபவா சறைச சாலை அதிகாரிகளால் பார்க்க முன் னும் பார்த்த பின்னரும் முழுமையான பரிசோதனைக்குட்படுத்தப்பவார்.

பொலிஸ் அதிகாரி, சிறைச்சாலை அதிகாரி ஆகியோர் முன்பாகவே அவர்களின் முழுமையான கண் காணிப்பின் கீழேயே உரையாடல்கள் சந்திப்புகள் என்பன இடம்பெறும்.

இதைவிட தடுத்துவைக்கப்பட்டுள்ள வரை பார்வையிட வருபவர் பொலிஸ் நிலையத்தில் பெறப்பட்ட கடிதத்து டன் வந்தாலும் சிறைச்சாலை அதிகா ரிக்கு அவர் பற்றிய முழுமையான திருப்தி இல்லாவிட்டால் பார்க்க அனுமதி மறுக்கப்படுவதற்கும் உரிமையுண்டு.

இந்நடைமுறையானது ஜனவரி 19ம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதால், அதற்குப் பின்னர் தடுத்து வைக்கப் பட்டவர்களை பார்வையிடுவதெனில் பொலிஸ் அனுமதியின்றி வரும்

ஜனாதிபதி சந்திரிகாவின் இப்புதிய கட்டளைகள் பொலிஸ் மற்றும் சிறைச் சாலை உத்தியோகத்தர்களை தமிழ் மக்களிடமிருந்து ஆயிரக்கணக்கில் கறக்கவே வழிவகுக்குமேயொழிய வேறெதையும் செய்யப் போவ தில்லை.

பிரிட்டிஷ்காரர்கள் இந்த நாட்டின் மூலவளங்களையும், உழைப்பையும் தான் சுரண்டினார்கள். அவர்களிட மிருந்து கைமாறிய இந்தத்தேசம் இன்று தமிழ் பேசும் மக்களின் உயிர், உடமை, உறையுள் எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டு 'ஒரே நாடு ஒரே தேசம்' என்ற கோஷத்தின் கீழ் 50வது சுதந்திரப் பொன் விழாவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஒரே தேசம் யாருடைய தேசம்? அந்த சுதந்திரம் யாருடைய சுதந்திரம்?

- எம்.பிரவிணா

## வன்முறைகள் !

ஜனவரி 26ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் 35 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக தேர்தல் தொடர் புடைய வன்முறைகளைக் கண் காணிக்கும் நிலையம் அறிவித்துள் ளது.

இறுதியாக இடம் பெற்ற நான்கு சம்பவங்களில் இரண்டு யாழ்ப் பாணத்திலும், இரண்டு நெடுந் தீவிலும் இடம் பெற்றுள்ளன. புளொட்டினால் முறையிடப்பட்ட இரண்டு சம்பவங்களிலும், ஈ.பி.டி.பி க்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டுள் ளது. ஈ.பி.ஆர்.எல்.எப்பினால் முறை-யிடப்பட்ட மற்றைய இரண்டு சம்பவங்களில் ஒன்றில் ஈ.பி.டி.பியும் மற்றையதில் புளொட்டும் குற்றம் சாட்டப்பட்டுள்ளன.

### மறுப்பு

சரிநிகர் 135வது இதழில் வெளியான 'மிஞ்சுமா' என்ற தலைப்பிலான செய்தியில் "15ம் கொலனி அதிபர் ஒருவர் 20.000 ரூபாய் கேட்டிருக்கிறாராம்." என்று இருந்த செய்தி தவறானது என்றும் அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்ட கொலனியைச் சேர்ந்த பாடசாலை அதிபர் மறுப்பு தெரித்துள்ளார்.

## தாமதம் வேண்டாம்!

ஜனாதிபதி

சிவில் நிர்வாக அதிகாரிகள் தங்கள் அலுவல்களுக்கு மிகத் தாமதித்தே வருகிறார்கள். அத்துடன் தங்கள் வேலைகளைப் பாராது, சோம்பிப் போய் அலுவலகக் கதிரைகளில் இருந்து கொண்டிருக்கின்றனர்'' என ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

சிரேஷ்ட சிவில் நிர்வாக அதிகாரிகள் மத்தியில் நிர்வாகச் சீர்திருத்தங்கள் தொடர்பாக நடைபெற்ற கருத்தரங் கொன்றிலேயே மேற்படி குற்றச் சாட்டினை ஜனாதிபதி முன்வைத் துள்ளார். சுமார் 600க்கும் மேற்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கு பண்டாரநாயக்கா சர்வ தேச ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெற்றது. தொடர்ந்து ஜனாதிபதி பேசு கையில் அதிகாரிகள் தமக்கு வழங்கப் பட்டுள்ள பணிகளில் 5% - 10% வரையான வேலைகளையே கவனிக் கிறார்கள். இந்தநிலை மாற வேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

காலாவதியான முறைமைகளுடன் இயங்குகிற அமைச்சுக்களில் எனக்குக் கீழ் இருக்கும் நிதி அமைச்சும் ஒன்று. இங்கும் 'சிவப்பு நாடா' முறைமையே இருக்கிறது. ஓர் அதிகாரியின் அங்கீ காரம் பெற்றால் போதுமான ஆவ ணங்கள் நாலைந்து அதிகாரிகளின் கையொப்பங்களுக்காய் காத்துக் கிடக்கின்றன.

''நாட்டில் ஆட்சி மாற்றம், பொருளா தார மாற்றம், சமூக, அரசியல் மாற்றம் என எவ்வளவு மாற்றங்கள் நடந்தும் நிர்வாக முறைமைகள் மட்டும் மாற்ற முறாது எப்போதும் விமர்சனங்க ளுக்குட்பட்டே வருகிறது. இவ்வா றான விமர்சனங்களில் சில பெறுமதி யற்றதாக இருந்தாலும் பெரும் பாலானவை நியாயபூர்வம் கொண் டவை. அரசியல்வாதிகளின் தவறுக ளின் பாரத்தையும் சிலபோதுகளில் சிவில் நிர்வாக அதிகாரிகள் சுமக்க வேண்டியிருக்கிறது.

'இப்போதெல்லாம் அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் போடப்படுவது சாதாரண நிகழ்வாகி விட்டது எனவும் தெரிவித்த ஜனாதி பதி நாட்டில் நீதித்துறை ஒரு புறத்தி லும், நிர்வாகத்துறை இன்னொரு புறத்திலுமாக சென்று கொண்டி ருக்கிறது'' எனவும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# தலதா மாளிகை – ஜயசிக்குறு – சுதந்திரப் பொன் விழா ?

தம்பு திருநாவுக்கரசு

இலங்கையின் சுதந்திரப் பொன் விழாவுக்கு சில தினங்களே இருக்கும் வேளையில் கண்டி தலதா மாளிகையின் எதிரில் 100 கிலோ எடையையுடைய குண்டு வெடித்து 13 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

பௌத்தர்களின் புராதன புனித தலமாகக் கருதப்படுகின்ற தலதா மாளிகை முற்றத்தில் சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டங்களை நடத்துவதற்குரிய பிரமாண்டமான ஏற்பாடுகளை சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது.

ஆயிரக்கணக்கான இராணுத்தினரும் பொலிசாரும் கண்டியில் குவிக்கப்பட்டு விரிவான, அதே வேளையில் மிகவும் இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தனியார் வாகனங்கள் பயணிகள் வண்டிகள் கூட நகருக்குள் அனுமதிக்கப் படாத அளவு பலமாக இருந்த பாதுகாப்பு நிலைமைகளுக் கிடையிலேயே இந்தப் பாரிய குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

மிகவும் ஆரவாரத்தோடு மிகப் பெரிய அளிவில் சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடவேண்டிய அவசியம் ஏன், என்பதை விட, நாடு அன்னியர்களின் பிடியிலிருந்து விடுபட்டதன் பின் கடந்த 50 ஆண்டுகளில் இந்த சுதந்திரத்தின் மூலம் நாடு அடைந்துள்ள முன்னேற்றமானது சுதந்திரப் பொன் விழா இந்தப் பெரிய அளவில் கொண்டாடு வதற்கு ஏற்றது தானா என்ற வினாவிற்கு இந்த விழா ஏற்பாடுகளுக்கு வித்திட்டவர் கள் திட்டவட்டமான ஒரு விடையை முதலாவதாகத் தேடியிருக்க வேண்டும்.

அப்படித் தேடியிருந்தால் பாரம்பரிய கலாசாரப் பெருமைகளையும் முடியாட்சி காலத்து வீரப்பிரதாப நடைமுறைகளையும் நவீன தொழில் நுட்பங்கள் மிகுந்த விஞ்ஞானயுகமாகிய இருபத்தியோராம் நூற்றாண்டின் பிரவேச வேளையிலும் கைக் கொண்டு நடத்திக்காட்டி அரசின் பெருமையைத் தம்பட்டமடிக்கின்ற ஒரு விழாவுக்கான கொண்டாட்ட ஏற்பாடுகள் இங்கு நடை பெற்றிருக்கமாட்டாது.

இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் நாட்டின் இனப் பிரச்சினையை மையமாகக் கொண்டு மிகமோசமான ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற வேளையில் தலதா மாளிகைக் குண்டுவெடிப்பு போன்ற பாரிய குண்டு வெடிப்பு இலங்கையில் எங்கேயும் நிகழ்ந்திருக்க மாட்டாது என்று மறுத்துக் கூற முடியாது தான்.

ஆயினும் 2500 ஆண்டு பழைமை வாய்ந்த பௌத்த மத கலாசாரப் பெருமைக்கு குறைந்தபட்சம், 408 ஆண்டுகள் பழைமையான சிறி தலதாமாளிகையின் முன் முற்றத்தில், கறைபடிந்திருக்க மாட்டாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஒரு வருட காலத்தில் முன்னைய ஆட்சியாளர்களினால் நினைத்துக் கூடப்பார்க்க முடியாதிருந்த ஒரு சாதனையை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகாவை முப்படைத் தளபதியாகக் கொண்ட இலங்கையின் அரசபடைகள் செய்து முடித்தன. விடுதலைப் புலிகளின் தலைமைக் கோட்டையாக விளங்கிய யாழ் குடாநாட்டை அவர்களிடமிருந்து இராணுவ்ம் கைப்பற்றியதன் மூலமே இந்தச் சாதனை செய்யப்பட்டது.

யாழ் குடாநாட்டைக் கைப் பற்றியதும் இலங்கையை அரசர்கள் ஆண்ட காலத்தில், கோட்டை இராச்சியத்தைச் சேர்ந்த இளவல் ஒருவன் தமிழர்களின் இராச்சியமாகிய யாழ்ப்பாண இராச்சியத்தின் கோட்டை கொத்தளங்கள் மிகுந்த தலை நகரையும் ஆட்சியையும் கைப்பற்றி விட்டதைப் போன்ற வெற்றிப் பிரதாப விழா இந்த யுத்த சாதனையையடுத்து கொழும்பிலே நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தை எதிரிகளிடமிருந்து வெற்றி கொண்டதைப் பிரகடனப்படுத்துகின்ற வெற்றி ஓலை அடங்கிய பேழைச் சுருளை தளபதியும் இளவலுமாகிய பிரதி பாதுகாப்பு அமைச்சர் நாட்டின் ஜனாதிபதியாகிய அரசியிடம் கையளிப்புச் செய்தார்.

வடகிழக்கு யுத்தத்தின் எதிர் முனைச் செயற்பாடுகளை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளாத மிதவாதிகளான தமிழர்கள் கூட, தேசிய விழாவாக எடுக்கப்பட்ட இந்த வெற்றி விழாவினால் சிறுமையடைந்து மனம் கூசிப் போனார்கள். இந்த நிலைமையில் பல்வேறு பேச்சுவார்த்தை களையும் ஒப்பந்தங்களையும் கண்டு கடந்து ஒற்றையாட்சியின் கீழ் ஐக்கிய இலங்கையின் உள்ளே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதெனத் தீர்மானித்து பிரிந்து வாழத் துணிந்து போராடிக் கொண்டிருப்பவர்களின் மனோ நிலைமையை இலகுவில் எழுத்தில் வடித்து விடமுடியாது.

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி நடந்தே தீரும் என்று தலதா மாளிகைக் குண்டுவெடிப்ப அலங்கோலங்களின் பின்பும் சூளுரைக்கப்பட்டுள்ள சுதந்திரப் பொன் விழா கொண்டாட்டங்களில் மீண்டும் ஒரு வெற்றிப்பிரதாப நிகழ்வுக்கு மிகப்பலமான அடித்தளம் இடப்பட்டிருந்தது என்பதும் கடந்த 1995 ஆம் ஆண்டில் நடந்ததை விட மிகமோசமான தொரு மனப்பிரதிபலிப்புகள் தமிழ் மிதவாதிகள் மத்தியில் ஏற்படுவதற்குரிய வாய்ப்பும் உருவாக்கப்பட்டிருந்தது. என்பதும் நிச்சயமானதாகும்.

இராணுவத்தின் மேலாதிக்க நிர்வாகத்தின் கீழுள்ள யாழ்குடா நாட்டுக்கான தரைவழிப் பாதையை வவுனியாவிலிருந்து கிளிநொச்சிகுத் திறப்பதன் மூலம் ஜயசிக்குறு என்ற வெற்றியை நிச்சியித்திருந்த இராணுவ நடவடிக்கையின் வெற்றி விழாவையே சுதந்திரப் பொன் விழாக் கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கருதி இருந்தார்.

ஆகக் கூடியது 3 மாத காலத்தினுள் வவுனியா நொச்சி மோட்டையிலிருந்து கிளிநொச்சி வரையிலான வடபகுதிக்கான தரை வழிப்பாதையைத் திறந்து விநியோகச் செயற்பாடுகளையும் பொதுப் போக்குவரத்தையும் ஸ்திரமாகச் செயற்படுத்தத் தொடங்கிவிட வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்ட வெற்றியை நோக்கிய இராணுவ நடவடிக்கைப் பயணம், மாங்குளம் நகரப் பகுதியைக் கூட அண்மிக்க முடியாத நிலையில் தளர் நடை போட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த இராணுவ நடவடிக்கைக்கான இறுதித் தவணை களை பலதடவை நிர்ணயித்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் 1997ஆம் ஆண்டு இறுதியுடன் யுத்தம் முடிக்கப் பட்டுவிடும் என்று அடித்துக் கூறினார். பின்னர் டிசம்பர் மாதம் பிறப்பதற்கு முன்பே வன்னிப்போர் முனைகளுக்குச் சென்ற அமைச்சர், "என்ன செய்வீர்களோ தெரியாது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திரப் பொன்விழாவுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கான பாதை திறக்கப்பட்டு பொது மக்களின் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும்" என்று ஒருபோதும் இல்லாதவாறு மிகக் கடுமையான உத்தரவை இராணுவத்தினருக்குப் பிறப்பித்தார்.

நேரடியாக போர்முனைப் பகுதிகளுக்குச் சென்றது மட்டுமல்லாது தொடர்ச்சியாக இரு தினங்களை செலவழித்துப் பகுதி பகுதியாக முன்னணி போர்க்களத் துருப்புக் களைச் சந்தித்து நேரடியாகவே கட்டளையிட்டார். இதன் மூலம் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் இலக்கை பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னதாக அடைந்து விடவேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த தீவிரத்தன்மை தெளிவாகத் தெரிகிறது.

அது மட்டுமல்லாமல் வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கான விருந்து வைபவத்தில் சுதந்திரப் பொன்விழா நாளாகிய பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத் துக்கான தரை வழிப்பாதை திறக்கப்பட்டு விடும் என்று உலகத்திற்கே பறைசாற்றி சூளுரைத்தார்.

அத்துடன் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் மூலம், புலிகளின் தலைவராகிய பிரபாகரனைத் தோற்கடித்து அவருடன் கைகுலுக்கி, அரசாங்கம் அவருடன் பேச்சு வார்த்தைகளை நடாத்தும் என்றும் மிகவும் மனோதிடத்துடன் தெரிவித்திருந்தார்.

ஆனால், மிக இறுக்கமான பாதுகாப்பு வலையங்களுக் குள்ளே கண்டி தலதா மாளிகையில் சுதந்திர பொன்விழாக் கொண்டாட்டங்களை நடாத்து வதற்கான இறுதி ஏற்பாடுகளில் மூழ்கியிருந்த வேளையில் இடியிறங்கியது போல மாளிகையின் முன்னால் நிகழ்ந்த குண்டுத் தாக்குதலின் மூலம் கட்டிடங்களும், கூரைகள் கதவுகள், யன்னல்கள் மட்டுமல்ல இராணுவ முனைப்புக் கொண்ட பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மீது பொது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை, இந்த அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வக் காணும் என்னும் மக்களின் எதிர்பார்ப்பு என்பனவும் வெடித்துச் சிதறிப்பறந்துள்ளன.

நாட்டில் சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காக மேற் கொள்ளப் பட்ட அரசின் யுத்த நடவடிக்கையானது சமாதானத் தின் நிழலைக் கூட மிதிக்க முடியாமல் வட-கிழக்கு போர் முனை எல்லைகளையும்' மீறிநாட்டின் ஏனைய பகுதிகளின் பொதுவான பாதுகாப்புக்களையும் இன்று கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

நாளுக்கு நாள் யுத்தத்தில் தீவிரத்தைக் கூட்டி யுத்தத்திற்கு அடிப்படையான பிரச்சினைக் குரிய தீர்வு மையத்திலிலுருந்து தூரத் தூர விலகிச் சொன்று கொண்டிருக் கின்ற இலங்கை அரசாங்கமானது சுதந்திரப் பொன் விழாவை எப்படிக் கொண்டாடப் போகிறது ,அதற்கு அடுத்ததாக என்ன செய்யப் போகிறது என்பது இப்போதுள்ள கேள்விகளாகும்.

○

# 'புலிகளின்' தாகம் உடும்பு பிடித்தல் !

இலங்கைப் பாதுகாப்புப் பிரிவினர் சில சமயங்களில் மிகவும் இலகுவாகப் பலரும் வியக்கும் வண்ணம் புலிகளை வளைத்துப் பிடித்து விடுவார்கள். ஆயுதங்களுடன் வளைக்கப்பட்ட புலிகள், பிடிக்கப்பட்ட பின் தெரிவித்த தகவல்கள் மூலம் ஆயுத மறைவிடங்களைக் காட்டி மாட்டிக் கொள்ளும் புலிகள் என்று பல கோணங்களிலும் பாதுகாப்புத் தரப்பார் வேட்டையைத் தொடர, அரச சார்பு ஊடகங்கள் 'சத்தியமாக அவர்கள் புலிகளே' என்று அடித்துச் சொல்லிவிடும். ஆனால் விசாரணைகளின் போது இவற்றுள் பல புஸ்வாணமாகி விடுவதும், நீதிமன்றில் எஞ்சியவை நிருபணமின்றிப் போவதும் அப்படியே அமுங்கிப் போவிடுகிறது. மொத்தத்தில் பிடிபட்டவர்கள் சித்திரவதைக்குள்ளாகுவதும், மாதக் கணக்கில், வருடக் கணக்கில் தடுப்புச் சிறையில் வாடுவதும் தான் கண்ட மிச்சமாகின்றன.

இப்படியான சில புலிகள் அண்மையில் பாலம்போட்டாறு என்ற இடத்தில் கைதாகியுள்ளன. இந்தப்புலிகளிடம் பயங்கர ஆயுதங்களைப் பாதுகாப்புத் தரப்பினர் கைப்பற்றியுள்ளதாக அரச செய்தி ஊடகங்கள் அறிவித்துள்ளன.

ஆனால், இந்தப் புலிகளின் தாகம் தமிழும் அல்ல; தமது உணவக்கு உடும்பு பிடிப்பதே என்ற விடயம் ஊருக்கு மட்டுமல்ல பிடித்த வீரர்களுக்கும் தெரிந்து தான் இருக்கும். நல்ல வேளை அவர்களுடன் வந்திருந்த நாய்கள் பிடிபடாமல் ஓடி விட்டன. பிடிபட்டிருந்தால், ''வாகனங்களும் கைப்பற்றப்பட்டன'' என்று சொல்லப்பட்டிருக்கும். பாலம்போட்டாறு திருகோணமலையிலிருந்து கண்டி வீதியில் பத்தாவது மைல்கல்லில் அமைந்துள்ளது. இங்கு நீண்ட காலச் சரித்திரமுடைய பத்தினி அம்மாள் ஆலயம் இருக்கிறது. இதை அண்டி 1968ல் குடியேறிய மக்கள் பத்தினிபுரம், பாரதிபுரம் என்ற இரண்டு கிராமங்களை உருவாக்கினார்கள்.

பத்தினிபுரத்தில் 75 தமிழ்க்குடும்பங்களும், 50முஸ்லிம் குடும்பங்களுமாக 506 பேர் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். பாரதிபுரத்தில் 245 குடும்பங்களைக் கொண்ட 1013 பேர் வாழ்கிறார்கள். சுமார் 800 ஏக்கர் மெட்ரிக்காணி இவர்களது ஜீவனோபாயமாக இருந்து வருகிறது.

1985 ஒகஸ்டில் வன்செயல் காரணமாக இக்குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக அங்கும் இங்கும் அலைந்து மீண்டும் குடியேறி, 1990ல் திரும்பவும் அகதிகளாகி 1994ல் குடியேற்றப்பட்டனர்.

இரண்டு தடவைகள் தொடர்ச்சியாக வேளாண்மை பொய்த்து விட்டதால் ஒடிந்து போன [illegible]ம் மக்கள் விறகு வெட்டுதல் [illegible]ட்டைக்குச் செல்லுதல் ஆ[illegible]கியவற்[illegible]கள் தொழிலாகக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இவர்[illegible] உண்மையான நிலை அந்தப் [illegible]தியிலுள்ள பாதுகாப்புத் தரப்பாருக்கு நன்கு தெரியும். இருந்தும் ஜனவரி 6ம் திகதி வழமைபோல உடும்பு பிடிப்பதற்காகப் பகலில் காட்டுக்குச் சென்ற எஸ்.நடராசா (48), நா. கிருஷ்ணமூர்த்தி (25), மு. திருவாசகம், (42), ஆ. தவேந்திரராசா (22) என்ற நான்கு குடும்பஸ்தர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் நடராசாவும், திருவாசகமும் நான்கு குழந்தைகளின் தந்தையாவார்கள். ஏனைய இருவருக்கும் ஒவ்வொரு குழந்தைகள் உளர்.

கல்வியறிவாலும், பொருளாதாரத்தாலும் பிற்பட்ட இக்கிராம மக்கள் இராணுவத்தை நம்பியே குடியிருக்கிறார்கள். நல்ல இதயம் உள்ள அதிகாரிகள் இவர்கள் விடயத்தில் கரிசனை எடுத்து விரைவில் உண்மையைக் கண்டறிந்து விடுதலை செய்வார்கள் என்று இன்னமும் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

-திரிபுரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுப்பப்படாத கேள்விகளும், அளிக்கப்படாத பதில்களும்

# அரை நூற்றாண்டுச் சுதந்திரம் : இலக்கு இதுவல்ல !

சிராஜ் மஷ்ஹூர்




*"இதுவல்ல!*

*கறை படிந்த வெளிச்சம்*

*இரவு குதறித் துப்பிய விடியல்*

*இதுவல்ல*

*எனது தோழர்கள் தாகங்கொண்டு தேடியலைந்த*

*தெளிந்த விடியல்*

*இதுவல்ல"*

- பைஸ் அஹ்மத் பைஸ்

இலங்கையின் அரை நூற்றாண்டுச் சுதந்திரம் குறித்த கருத்தாடல்களும் விவாதங்களும் ஆழம்பெறும் ஒரு சூழலில் இந்தக் கவிதை வரிகளை நினைவிற் கொள்வது தகும்.

சுதந்திரப் பொன்விழாவுக்கான ஏற்பாடுகள் அமர்க்களமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், சுதந்திரம் என்பதன் உண்மையான அர்த்தம் என்ன? அது சென்றடைய வேண்டியவர்களை அதனது முழுமையான அர்த்தத்தில் போய்ச் சேர்ந்துள்ளதா என்பன போன்ற கேள்விகளை நாம் அவசியம் எழுப்பியாக வேண்டும்.

ஆங்கிலேயஏகாதிபத்தியவாதிகள் சுதேசிகளின் கையில் அரச இயந்திரத்தை ஒப்படைத்த போது ஒரு புதிய இலங்கை உருவாகும் என்ற கனவுகளில் சாமான்ய மக்கள் திளைத்திருந்தனர். ஆயினும், இது அப்பாவித்தனமானதொரு கனவே என்பதை, அப்போதே இலங்கையின் அரசியல் போக்கை நுட்பமாக அவதானித்து வந்த படித்த சிறுபான்மைக் குழுவொன்று நன்குணர்ந்திருந்தது.

1948 பெப்ரவரி 04ம் திகதி இலங்கையின் அரசியல் வரலாற்றில் நிகழ்ந்த திருப்பம், ஒரு கொள்கை சார்ந்த ஆட்சி மாற்றமன்று. உண்மையில் இங்கு ஆட்கள் மட்டுமே மாறினர். ஆங்கிலேய காலனித்துவ நரிகள் அமர்ந்திருந்த இடத்தை, அவர்களது தொண்டரடிப் பொடிகளாக இருந்த சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையுள்ள படித்த உயர் குழாமொன்றே மாற்றீடு செய்தது. இதன்மூலம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் தொடர்ச்சி முற்றுப் பெறாமல் பாதுகாக்கப்பட்டது. துரைத்தனங்களும், பிரபுத்துவத்தின் அரைகுறை எச்சங்களும் எவ்வித இடையூறுமின்றி இலங்கை அரசியலில் தனக்குரிய இடத்தை வலுப்படுத்திக் கொண்டது. கருத்தியல் ரீதியாக முதலாளித்துவம் தனது இருப்பை நன்கு ஸ்தாபித்துக் கொண்டது.

பிரித்தானிய ஏகாதிபத்திய நலன் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நலனால் மாற்றீடு செய்யப்பட்டது. இங்கு சுதந்திரம் என்பது பெரும்பான்மை சிங்கள மக்களது சுதந்திரமாக மட்டுமே இருந்தது. பல்லின மக்கள் வாழும் ஒரு நாடான இலங்கையின் சனத்தொகையில் ஏறத்தாழ காற்பங்கினராக இருந்த சிறுபான்மை மக்கள் பற்றிய எந்த அக்கறையுமில்லாத அதிகாரக் கைமாற்றலே 1948 பெப்ரவரி நாலாம் திகதி நிகழ்ந்தது.

நியாயமான அதிகாரப் பகிர்வுக்காக சிறுபான்மை மக்கள் குறிப்பாக தமிழ் அரசியல் தலைமைத்துவம் கடுமையாகப் போராட வேண்டி ஏற்பட்டது. ஆயினும் சிங்கள பௌத்த பேரினவாதிகள் சிறுபான்மை மக்களது குரலை, அவர்களது இருப்பிற்கான போராட்டத்தை அற்ப விடயமாகக் கருதிப் புறந்தள்ளினர். சிறுபான்மை மக்களை எவ்வெவ் வழிகளிலெல்லாம் நசுக்க முடியுமோ, அடக்கி ஒடுக்க முடியுமோ அவ்வவ் வழிகளிலெல்லாம் முனைப்போடு ஈடுபடத் தொடங்கினர். எனினும், வரலாற்றின் இயங்கு விதிகள் அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு முரணாகவே சென்று முடிந்தன. சமரச மேசைகளில் கைகுலுக்க வேண்டிய சகோதர இன மக்களை போர்க் களங்களில் துப்பாக்கி வேட்டுக்களின் அதிர்வுகளிடையே அவர்கள் எதிர்கொள்ள வேண்டி வந்தது. கடந்த ஒன்றரைத் தசாப்தங்களாக முடிவுறாது தொடரும் ஈழப்போர்கள் கொண்டு வந்த இழப்புகள் நம் கண் முன்னே நிதர்சனமான இரத்த சாட்சியங்களாக நிலை கொண்டுள்ளன. இந்தப் போரின் முடிவு குறித்தோ அல்லது எதிர்கால மாற்றம் குறித்தோ எந்தவொரு முடிவுக்கும் வரமுடியாத தடுமாற்ற நிலையே பரவலாகக் காணப்படுகிறது. இந்த அரைநூற்றாண்டுச் சுதந்திரம் - நம்மை நாமே ஆட்சி செய்தது நமக்குத் தந்த மிகப் பெரிய வெகுமதி இதுதான்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக பௌத்த சிங்கள மேலாதிக்கம் தெளிவான நிறுவனமயப்பட்ட சக்தியாக இயங்குவதற்கான பலமான அடித்தளம் இடப்பட்டு வந்துள்ளது. இலங்கை ஒரு சிங்கள நாடு என்று காலாகாலமாகச் சொல்லப்பட்டு வந்த புனைவுக்கு புத்துயிரளிக்கப்பட்டது. ''சிங்கத்தின் புத்திரர்களாக'' சிங்கள மக்களை உருவகிக்கும் மற்றொரு புனைவுக்கு தேசியக் கொடி என்ற பெயரால் உத்தியோகபூர்வ அந்தஸ்து அளிக்கப்பட்டது. அரச இயந்திரத்தினுள் சிறுபான்மை மக்களது உரிமைகளை நசுக்குவதற்கான நிறுவனமயப்பட்ட அதிகார சக்தியொன்று உற்பத்தியாகியது. இது தனக்கிருந்த அரசியல் பலத்தினூடாக படிப்படியாக தன்னை விஸ்தரித்து நிலைநிறுத்திக் கொண்டது.

இந்த சிங்களப் பேரினவாத விஸ்தரிப்பு வலைக்குள் சில சுயநல சிறுபான்மை அரசியல்வாதிகளும் உள்வாங்கப்பட்டனர். இதற்குள் உடனடியாகச் சிக்கிக் கொண்டோர் அப்போதைய முஸ்லிம் அரசியல் தலைவர்களே. ஒரு சில தமிழ்த் தலைவர்கள் கூட இதற்குப் பலியாகினர். எனினும் முஸ்லிம் தலைமையே இதற்குக் கணிசமாகப் பலியாகியது. தமது அரசியல் இலாபமும், சிதறிய சிறுபான்மையாக வாழும் தாம் சிங்களத் தலைமையோடு அணி சேர்வதே தமக்குப் பாதுகாப்பானது என்ற கருதுகோளுமே இந்தச் சிங்களப் பேரினவாத மேலாதிக்க சக்திகளுடனான அணி சேர்தலுக்கு முதன்மைக் காரணங்களாக அமைந்தன. இந்த இணைவு வெறும் சந்தர்ப்பவாத அணி சேர்தலே என்பது காலத்துக்குக் காலம் நிரூபிக்கப்பட்டு வந்துள்ளது. முஸ்லிம் அரசியலில் குறிப்பிடத்தக்க மாற்றமான தனிக் கட்சி அரசியலும் இந்தப் பேரினவாதப் பொறிக்குள் சிக்கிக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆயினும், இவ்விடயத்தில் முன்னைய முஸ்லிம் தலைமைக்கும் இதற்குமிடையே சில அடிப்படை வேறுபாடுகள் இருந்தன என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.


தமிழ்த் தலைமையோ இதைத் தெளிவாக இனங்கண்டு உடனடியாக எதிர்க்கத் தொடங்கியது. சத்தியாக்கிரகம், சட்ட ரீதியான நடவடிக்கைகள் என்பன மூலம் தமது சாத்வீக எதிர்ப்பு இயக்கத்தை அவர்கள் முன்கொண்டு சென்றனர்.

ஆனால், முஸ்லிம் தலைமைத்துவமோ இதற்கு மாறாகப் பாரதூரமான வரலாற்றுத் தவறுகளை இழைத்தது. அவர்கள் இழைத்த பாரதூரமான தவறுகளின் எதிர்வினைகளை இன்றைய முஸ்லிம் தலைமுறை அனுபவிக்கிறது.

முஸ்லிம் தலைமைத்துவத்தின் தவறான அரசியல் நிலைப்பாடு மற்ற சிறுபான்மை மக்களுக்கு எதிராகச் செயற்படுமளவுக்கு தூரநோக்கும் ஆழமும் அற்றிருந்தது. 1940களில் தமிழ்த் தலைவர்கள் முன்வைத்த ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை, 1950களில் முன்வைக்கப்பட்ட சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை என்பவற்றை முஸ்லிம் தலைமைத்துவம் நிராகரித்தது. மேலும், 1948ல் மலையகத் தமிழர்களது பிரஜாவுரிமையும் அதனைத் தொடர்ந்து வாக்குரிமையும் தேசிய இனப்பிரச்சினையை ஆழப்படுத்திய விடயங்களிலெல்லாம் முஸ்லிம் தலைவர்களது நிலைப்பாடு சகோதர சிறுபான்மை மக்களுக்கு எதிராகவும் சிங்களப் பேரினவாதத்திற்குத் துதிபாடுவதாகவுமே இருந்தது.

முஸ்லிம்கள் மாறி மாறி ஆட்சி பீடமேறிய ஐ.தே.க, பொஐ.மு. போன்ற கட்சிகளுக்கு ஆதரவாகவே இயங்கினர். அதிலும் பெரும்பான்மையானோர் ஐ.தே.கவுக்கு சார்பானவர்களாகவே இருந்தனர். தெளிவான கொள்கையற்ற வலதுசாரி சிங்களக் கட்சிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் தமது வணிக நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதே முஸ்லிம்களது பொதுவான அரசியல் போக்காக இருந்தது. அவர்களுக்கென்று வரையறுத்த அரசியல் கொள்கையோ, நோக்கமோ இருக்கவில்லை.

சிங்கள பௌத்த பேரினவாதம் ஒரு நிறுவன வடிவமெடுத்திருப்பதை முஸ்லிம்கள் மிகத் தாமதமாகவே உணரத் தலைப்பட்டனர். சிங்களப் பேரினவாதம் சிறுபான்மை மக்களது குடியிருப்புகளை, அவர்களது பாரம்பரிய வாழிடப் பெரும்பான்மையைச் சிதைப்பதற்கும் ஏனைய அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கும் முயல்வதை உணரத் தலைப்பட்ட ஒரு புதிய தலைமுறை, பிந்திய தசாப்தங்களிலேயே அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றது. குறிப்பாக தமிழ் இயக்கங்களின் துப்பாக்கிகள் தம்மை நோக்கித் திருப்பப்பட்ட பின்பே இது ஒரு எதிர்ப்பு வடிவமாக வெளிக் கிளம்பியது. தாம் இரு பேரினவாதங்களிடையே 'சிக்கி நசுக்கப்படுவதை அவர்கள் தெளிவாக அடையாளம் கண்டு கொண்டனர். இதற்குப் பரிகாரம் காண வேண்டும் என்ற எண்ணமும் முனைப்பும் அவர்களுக்கு ஏற்பட்டது.



கடந்த ஒன்றரைத் தசாப்தங்களாக இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு உள்ளிட்ட சகோதர முஸ்லிம் மக்கள் மீதான தமிழ் இயக்கங்களின் ஒடுக்குமுறை ஒரு புதிய அச்சுறுத்தலாக எழுச்சி பெற்று வருகிறது. இதன் மூலம் தமது இருப்பை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக முஸ்லிம்கள் போராட வேண்டி ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில் தற்பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டு இயங்கிய 'ஜிஹாத்' குழுக்கள் தவறான நிலைப்பாடுகளையும் எடுத்தன. அவை அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்தமை வரலாற்றின் அழிக்க முடியாத கறையும் துரோகமுமாகும். மறுபுறம் அரசியல் ரீதியாகத் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ள உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் இன்று திசைமாறிச் சென்றுவிட்டது.

மொத்தத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக இலங்கை முஸ்லிம்களது அரசியல் பாதை தெளிவின்றியும் போராட்ட வேகமுமின்றியே நகர்ந்து வந்துள்ளது. கவனமானதும் நுட்பமானதுமான ஓர் அர்சியல் அணுகுமுறை பற்றிய கருத்துபரிமாற்றங்களோ, முஸ்லிம்கள் பற்றிய ஆழமான ஆய்வுகளோ போதியளவு செய்யப்படவில்லை. இந்த இடைவெளியை சென்ற தலைமுறை போதியளவு நிறைவு செய்யவில்லை. புதிய தலைமுறையின் முன்னே மிகப் பெரும் சவால்களும் பொறுப்புகளும் உள்ளன. புரிந்துணர்வுடன் கூடிய ஜனநாயகபூர்வ சூழலில் கூட்டு முயற்சியின் மூலமே இதைச் சாதிக்க முடியும். இதற்கு முஸ்லிம் இளைஞர்கள் களத்தில் உடனடியாக இறங்கியாக வேண்டும். ஒதுங்கும் மனோபாவம் நம்மை, நாம் வாழும் சூழலிலேயே தனிமைப்படுத்தி அழித்து விடும் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் 'மீள்பார்வை' பத்திரிகைக்கு அளித்த நேர்காணலின் ஒரு பகுதியை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமாக அமையும்.

''முஸ்லிம்களில் எதற்கும் தயாரான Redical இளைஞர் கூட்டமொன்று இல்லாமை பெரும் குறையாகும். பாரம்பரியத் தலைவர்களுக்குப் புறம்பாகக் குரலெழுப்பி பிரச்சினைகளை எடுத்துக் காட்டும் இளைஞர்கள் வெளிவந்த சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு. அதே போன்றவர்கள் இருக்கிறார்கள் தான். ஆனால், அவர்கள் வெளியில் வருவதில்லை. பத்திரிகைகளுக்கு மட்டும் பிரச்சினைகளைச் சொல்லிப் பிரயோசனமில்லை. முஸ்லிம் மக்களுக்கு மட்டும் கேட்கும்படி பேசுவதால் ஒன்றும் நிகழப் போவதில்லை. உங்களது குரல்கள் மற்றவர்களுக்கும் கேட்க வேண்டும்.

மீண்டும் பைஸ் அஹ்மத் பைஸின் கவிதை வரிகளுடனேயே இதை நிறைவு செய்வோம்.

*''இதயமும் மனதும் விடுதலையடையும்*

*நேரம் இன்னும் வரவில்லை.*

*தேடிய பயணம் தொடரட்டும்*

*இலக்கு இதுவல்ல.''*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








# தலதா மாளிகை, புலித்தடை: வெற்றி யாருக்கு?

இந்தப் பத்தியை எழுத ஆரம்பிக்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்யும் தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டு விட்டது. அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தை ஏனைய மாகாண அரசாங்கங்களும் ஏற்றுக் தீர்மானம் நிறைவேற்றும் என்று தெரிவிக்கப் படுகிறது.

விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட கண்டி தலதா மாளிகை மீதான த்ற்கொலைத் தாக்குதலைக் கண்டித்து அலரி மாளிகையை நோக்கி ஐந்நூறுக்கும் அதிகமான புத்தபிக்குகள் நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் புலிகளை உடனடியாகத் தடை செய்யுமாறு கோசமெழுப்பப்பட்டது. ஜாதிக சங்க சபாவினால் நடாத்தப்பட்ட இந்த ஊர்வலத்திற்கு கோட்டே நாகவிகாரையின் பிரதான சங்க நாயக்கரான மாதுளுவாவே சோபித்த தேரோ தலைமை தாங்கினார்.

இந்த ஊர்வலத்தின் போது ...ன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் சுதந்திரவிழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளை உடனடியாக கைவிட்டு விட வேண்டும், தலதாமாளிகை திருத்த வேலைகளை அவசர அவசரமாக செய்யாது உலகம் முழுவதும் பார்க்க விட்டு வைக்க வேண்டும், உடனடியாக அரசியல் தீர்வுப் பொதியை உடைப்பிலே வீசிவிட வேண்டும், விடுதலைப் புலிகளை உடனடியாகத் தடைசெய்ய வேண்டுமென்பனவும் உள்ளடங்கும்.

அவர்களது இந்தக் கோரிக்கைகளை இறுதிக் கோரிக்கையான புலிகளை உடனடியாக தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் இப்போது நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளது.

தமிழ்ப் பயங்கரவாதிகள் எவ்வளவு மோசமானவர்கள் அவர்கள் எவ்வாறு சிங்கள பௌத்தர்களின் சுதந்திரத்தை இல்லாமல் செய்துள்ளார்கள் என்பதை எடுத்துக் காட்டும் விதத்தில் அரசாங்கம் இந்தத் தாக்குதலை பரவாலாகப் பிரச்சாரம். செய்ய வேண்டும் எனவும் இவ்வூர்வலத்தின் முடிவில் பேசிய சோபித்த தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

'புலிகளை தடைசெய்ய வேண்டும்' என்ற கோரிக்கை ஒன்றும் புதிய கோரிக்கை அல்ல. இது ஏற்கனவே பல இனவாத சக்திகளால் எழுப்பப்பட்ட ஒரு கோரிக்கை தான். ஆயினும் அரசாங்கம் இதற்குப் பதிலாக, எதிர்காலத்தில் ஒரு பேச்சுவார்தையை நடாத்துவதற்கு இது தடையாக அமைந்து விடக் கூடாது என்பதாலேயே நாம் இந்தத் தடையை இங்கு கொண்டுவரவில்லை என்று கூறி வந்தது. அதுவும் முக்கிய அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், ஜி.எல்.பீரிஸ் ஆகியோராலேயே பல தடவைகளில் திரும்பத் திரும்ப இது கூறப்பட்டது.

ஆயினும் தலதாமாளிகைத் தாக்குதலையடுத்து அரசாங்கம் புலிகளை தடைசெய்வதற்கான முடிவை அறிவித்திருக்கிறது. இனிமேல் புலிகளுடன் என்றென்றைக்கும் பேச முடியாது என்று திட்டவட்டமாக இதன் மூலம் அரசாங்கம் தெரிவித்திருப்பதாக கொள்ளளாமா?

ஜனாதிபதி சந்திரிக்காவின் இந்த அரசாங்கம் இப்படித் திடீரென ஒரு முடிவை எடுப்பது அதுவும் ஏதாவது ஒரு அதிர்ச்சியான சம்பவம் நடந்தவுடன் இப்படி ஒரு முடிவு எடுப்பது இது முதல் தடவை அல்ல. ஆட்சிக்கு வந்த நாள் முதல் பல தடவைகளில் இவ்வாறான முடிவுகளை எடுத்துள்ளது.

உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்லலாம்.

புலிகளின் திருமலைத் தாக்குதலை அடுத்து அது வடக்குக் கிழக்குக்கான உணவு மற்றும் அத்தியவசிய பாவனைப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு திடீரென தடை விதித்தது. அதற்கு முதல் நாள் வரை வடக்கு மக்களுக்கு உணவு அனுப்பப்படுவதன் அவசியம் பற்றி பேசிக் கொண்டிருந்த அரசாங்கம் பேச்சுவார்த்தை முறிந்த அன்றே உணவு விநியோகத்தை நிறுத்தியது.

இப்போது தலதாமாளிகைத் தாக்குதலுடன் புலித்தடையை விதித்து விட்டது.

பௌத்த சிங்கள பேரினவாத குரல்களின் தாளத்திற்கு அரசாங்கம் எப்படித் நடமாடுகிறது என்பதற்கு இன்னும் பல உதாரணங்களைக் கூறலாம். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல அரசாங்கத்தின் தீர்வுப்பொதி வெற்றுப்பொதியாகிப் போனது இதற்கு மிகச்சிறந்த உதாரணம்.

சமாதானம் தேவை என்று தான் மக்கள் கோருகிறார்கள் என்று கூறி அவர்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அம்மையார் யுத்தவாத பௌத்த பேரினவாதிகளுக்குப் பயந்து யுத்தம் மூலம் சமாதானம் என்று கீறுப்பட்ட இசைத்தட்டைப் போல முணுமுணுப்பதும் ஒன்றும் தெரியாத விடயம் அல்ல.

ஆனால் பாவம் அரசாங்கம் புலிகளைத் தடைசெய்வது புதிதாக எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை - ஒரு சில இனவாத சக்திகளது ஆத்திர உணர்வை அடக்க உதவுவதைத் தவிர என்பதை நிதானித்து புரிந்து கொள்ள சக்தியற்றதாய் இனவாத அலையில் அள்ளுப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த அள்ளுப்படல் காரணமாக அது திட்டமிட்டுக் கட்டிய கோட்டைகள் சரிந்து நொருங்கப் போகின்றன.

தலதாமாளிகையின் மீதான புலிகளது தாக்குதல், பௌத்த பேரினவாத அரசியல் மீதான அவர்களது ஆத்திரத்தை வெளிக் காட்டுவதாகக் கொள்ளப்படலாம் என்பது உண்மையே. ஆனால் இந்தத் தாக்குதல் புலிகளுக்கு அரசியல் ரீதியில் வெறும் தற்காலிக பரபரப்பிற்கு மேல் எதையும் சாதிக்கப் போவதில்லை. மாறாக நீண்டகால அரசியல் நோக்கில் அவர்களுக்கு மாபெரும் சரிவைக் கொண்டுவரக் கூடியது. அனுரதபுரத்தில் அவர்களால் செய்யப்பட்ட படுகொலைகளின் பாவம் இன்னமும் கழுவப்படவில்லை, அன்றைய அரசியல் தவறுக்கு இன்று வரை இரத்தத்தால் பதில் சொல்ல வேண்டிய நிலை மக்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. இந்தத் தாக்குதல் நிகழ்ச்சி வெறும் பௌத்த பேரினவாதத்தை மட்டும் தாக்கவில்லை. பௌத்த மதத்தினையும் புத்த பெருமானையும் அவரது புனித தந்தம் வைக்கப் பட்டிருப்பதாக நம்பும் சாதாரண சிங்கள மக்களினது நம்பிக்கையையும் கூட இது தாக்கியிருகிறது. வணக்கஸ்தலங்கள் அவை என்னதான் அதிகார வர்க்கத்தின் நலன்களுக்காக பயன்படுத்தப்பட்டாலும் அவை பல லட்சக் கணக்கான மக்களின் நம்பிக்கையாகவும் இருப்பதை யாரும் மறந்து விடக்கூடாது. அவாறு மறப்பவர்களின் தாக்குதல்கள் அந்த மக்கள் மீதான தாக்குதல்களாகவே கொள்ளப்படும் இந்த வகையில் இந்தத் தாக்குதல் புலிகளது தீர்க்க தரிசனம் அற்ற ஒரு மோசமான நடவடிக்கை என்பதில் ஐயமில்லை. இலங்கை அரசபடைகள் மாவீரர் துயிலும் இல்லத்தை அழித்தது அல்லது கிட்டு பூங்காவை கிட்டுவின் பெயர் இருந்ததற்காகவே அதை நொருக்கியது அல்லது வடக்கின் ஆலயங்கள் மீது குண்டுகளைப் பொழிந்தது ...னபனவற்றுக்கும் இதற்கும் ...ந்த வேறுபாடும் கி...டயாது. ...ந்த இரண்டும் இரு இனங்களின் சராசரி மக்களின் மீது செய்யப்பட்ட அவமரியாதையாகும்.

இதன் மூலம் புலிகள் மீண்டும் ஒரு முறை கரியைப் பூசிக்கொண்டுள்ளனர்.

புலிகள் சுதந்திரப் பொன் விழாவை எதிர்ப்பதை, அதை நடத்த விடாமல் குழப்பமுயல்வதை விளங்கிக் கொள்வது ஒன்றும் கடினமானது அல்ல. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றை, அவர்களது உரிமைகள் பிடுங்கப்பட்ட வரலாற்றை தெரிந்தவர்களுக்கு இது ஒன்றும் கடினமானது அல்ல. ஆனால் இந்த தலதாமாளிகைத் தாக்குதல் விளங்கிக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

உண்மையில் அரசாங்கத்திற்கு இது அரசியல் ரீதியில் ஒரு வெற்றி என்றே செல்லவேண்டும் அதுவும் சுதந்திரப் பொன்விழாவிற்காக பிரிட்டிஸ் இளவரசர் இங்கு வரப்போவதாக கூறப்படு வதால் உலகமனைத்தினதும் கவனம் இங்கு குவிக்கப்ப ட்டிருக்கின்ற ஒரு நேரத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருப்பது அரசாங்கதிற்கு ஒரு நல்ல வாய்ப்பு என்றே சொல்ல வேண்டும். ஆனால் அரசாங்கம் தனது அதிர்ச்சி அவசரத்தில் தன். உண்மைச் சொருபத்தை வெளிப்படுத்தி விட்டது.

யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடாத்தி வடக்கில் சமாதான நிலை மீண்டும் வந்து விட்டதாக உலகிற்கு அறிவிக்க வேண்டும் என்ற நோக்குடன் உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதியை சுதந்திர தினத்திற்கு சற்று முன்பாக நாள் குறித்தது, நீங்கள் போட்டியிடாவிட்டால் நாம் போட்டியிடுவோம் என்று மிரட்டி தமிழ்க் கட்சிகளை தேர்தலில் போட்டியிட வைத்தது, தீர்வுப் பொதியை நடமுறைக்கு கொண்டுவருவதற்கு யு.என்.பியே இப்போதுள்ள ஒரு தடை என்று நிறுவியது, யாழ்ப்பாணத்தில் அன்று எரியூட்டப்பட்ட நூலகத்தை புனருத்தாரணம் செய்து (படிப்பதற்கு யாரும் இல்லாவிட்டாலும்) திறந்து வைத்தது என்று எல்லா விதத்திலும் சுதந்திரப் பொன்விழாவை ஒட்டி தனக்கு சாதகமாக அரசாங்கம் செய்து வந்த அனைத்து நடவடிக்கைகளையும் இந்த ஒரு அறிவிப்பின் மூலம் தவிடுபொடியாக்கி விட்டது.

புலிகளுக்கு எதிரான தடைவிதிப்பென்பது அவர்களுக்கு புதிதாக எதையும செய்யப் போவதில்லை. அவர்கள் சர்வதேச ரீதியாக தாம் தமக்கு ஏற்படுத்தியுள்ள பெயருக்கு இது ஒன்றும் புதிய பரிமாணத்தை தந்துவிடப் போவதில்லை. ஆனால் அரசாங்கம் சமாதானத்தில் அக்கறையாக இருக்கிறது என்ற ஒரு படத்தைக் காட்ட விரும்பியதே, அதை இந்த நடவடிக்கை உடைத்து விட்டது.

நெருக்கடியான நிலமையின் போதும் துாக்கத்தில் இருக்கும் போதும் தான் ஒருவர் உண்மையாக நடந்து கொள்கிறார் என்று ஒரு நாடோடிப் பழமொழி உண்டு.

அரசாங்கம் இப்போது நெருக்கடியான நிலையில் இருக்கிறது. பௌத்த பேரினவாதிகளால் கொடுக்கப்படுகின்ற நெருக்கடி அது. இதனால், அதன் உண்மைச் சொருபம் வெளிப் பட்டு விட்டது.

இனி என்ன அரசாங்கம் சோபித்த தேரரின் அடுத்தடுத்த கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டியது தான் பாக்கி.

பொதியை உடைப்பிலே போடுவது.

சமாதானத்திற்கு சுதந்திரப் பொன்விழாவுடன் சமாதி கட்டி விடுவது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமையாவது கத்தரிக்காயாவது என்ற பௌத்த பேரினவாதத்தின் தாரக மந்திரத்தை தேசிய கீதமாக்கி விடுவது....

வாழ்க சந்திரிகா மார்க ஜனநாயகம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வவுனியா : மர்மக் கொலைகளும், சுற்றிவளைப்பும் !

இராணுவம், பொலிஸ், ஆயுதம் தாங்கிய தமிழ் இயக்கங்கள் ஆகியோரின் முழுமையான ஆளு-கைக்குள் உட்பட்டிருக்கும் வவுனியா நகரம், சிவில் நிர்வாகம் என்ற ஒருவகை மாயைக்குள் இருந்தாலும், தொடரும் மர்மக் கொலைகள், ஆட்கடத்தல்கள், கைதுகள் திறந்த வெளிச் சிறைகளில் மக்களை அடைத்து வைத்தல், பாஸ்கெடுபிடிகள் திடீர்ச் சோதனைகள் என அச்சமும் பயமும் இராணுவக் கெடுபிடிகளும் நிறைந்ததாகவே இன்னும் காணப்படுகின்றது.

1994 தேர்தலுக்குப் பின்னர் தொடங்கிய மர்மக் கொலைகள், ஆட்கடத்தல்கள் என்பன இற்றை வரை 35 பேரைப் பலியெடுத்துள்ளது. புது வருட ம் பிறந்து இந்த 3 வாரங்களில் மட்டும் 5 பேர் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதனை விட புது வருடத்திற்குப் பின்னரான ஒவ்வொரு நாட்களும் திடீர்திடீரென சுற்றிவளைப்புகளும் தேடுதல்களும் மேற்கொள்ளப் படுகின்றன. இதனால் பல தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப் படுவதுடன், வவுனியா நகரின் அன்றாட நடவடிக்கைகளும் சீர்குலைகின்றன.

18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மட்டும் நகரம் முழுவதும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட படையினர் 400க்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளைக் கைது செய்து கோழிக் கூட்டு முகாமில் விசாரணைக்காக அடைத்து வைத்திருந்தனர்.

இதே மாதிரி நலன்புரி நிலையமொன்றில் கைது செய்யப்பட்ட ஒரு யுவதி முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு அன்றிரவு முழுவதும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அடுத்த நாள் முகாமில் கொண்டு வந்து விடப்பட்டு அவரின் சகோதரர்விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டார்.

21ந் திகதி இரவு இராசேந்திர குளம் பகுதி சுற்றி வளைக்கப்பட்டு 11பேரை விசாரணைக்காக படையினர் கொண்டு சென்றனர். இவர்களில் ஒரு தாயும் அவரின் 10,12 வயது பிள்ளைகளும் அடங்குவர்.

இப்போது வவுனியாவில் படையினரால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கைகளும், தேடுதல்களும், சுற்றி வளைப்புகளும் பொது மக்களின் அன்றாட நடவடிக்கைகளைச் சீர்குலைப்பதாகவே உள்ளன.

இதை விட படையினரின் தேடுதல்கள்,சுற்றி வளைப்புகள், சோத-னைச் சாவடிகள், கண்காணிப்புகள் இவற்றுக்கு மத்தியிலும் தொடரும் மர்மக் கொலைகள் பொது மக்கள் மத்தியில் அச்சத்தையும், பயப்-பிராந்தியையும் ஏற்படுத்தியுள்ள-தோடு வவுனியாவின் பாதுகாப்பு நிலவரத்தையும் கேள்விக் குள்ளாக்கியுள்ளது.

வவுனியா சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பாதுகாப்பு உத்தியோகத்தர் ஞானப்பிரகாசம் ரவீந்திரன் கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து இவ் வருடத்தின் முதல் மூன்று வாரங்-களுக்குள் 5 மர்மக் கொலைகள் இடம்பெற்றுள்ளன.

1ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 1மணியளவில் நாக-ராஜா ரவீந்திரன் (19) இனந்தெரியா-தோரால் வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஞாயிறு 4ம் திகதி வ்வுனியா பூந்தோட்டப் பகுதியில் பொன்னுத்துரை புவனேந்திரன் (24) வீட்டில் வைத்து இரவு 8.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். 7ம் திகதி.புதன் கிழமை வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடியில் வைத்து இராணுவப் பொலிசைச் சேர்ந்த சம்பத் பிரியந்த திலகரட்ண (25) துவிச்சக்கர வண்டியில் வந்தோரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

12ம் திகதி வவுனியா ஹொரவப் பொத்தானை தினச்சந்தை அருகே மரக்கறி வாங்கச் சென்ற பத்ம குமார (25) என்ற பொலிஸ் சப்இன்ஸ்பெக்ரர் பிஸ்ரல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

15ந் திகதி வெள்ளிக் கிழமை நெலுக்குளத்தில் வைத்து பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் பிஸ்ரல் குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டார். ○

## மட்டு : கைதிகள் பூசாவுக்கு !

அண்மைக்காலங்களில் ஓரளவு சகஜ நிலைமை காணப்பட்ட மட்டக்களப்பு நகரம் மீண்டும் படையினரின் கடுமையான கெடுபிடியுள் சிக்கித் தவிக்கிறது.

கல்லடி, கோட்டைமுனை, புதிய பாலம் ஆகிய நுழைவாயில்களில் நகருக்குள் செல்லும் வாகனங்கள் நீண்டநேரம் துருவித் துருவி சோதனையிடப்பட்ட பின்னரேஉள்ளே செல்ல அனுமதிக்கப்படுகிறது.

அதே போல் பொது மக்களும் படையினரின் சொல்லொணாச் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். குறிப்பாக பாடசாலை மாணவர்களும், யுவதிகளும் படையினரால் கூடுதலாகக் கண்காணிக்கப்படுகிறார்கள்.

மீண்டும் மட்டக்களப்பு நகருக்குள் வதியும் பொதுமக்களின் முழுவிபரங்களும் படையினரால் திரட்டப்படுகிறது. பெயர், தங்கியிருப்போர் எண்ணிக்கை, வாகனங்கள் தொலைபேசி இலக்கம் என்பன திரட்டப்படுகின்றன.

நகருக்குள் வரும் எவரையும் வீடுகளில் தங்கியிருக்க அனுமதிக்க வேண்டாமெனவும் பொலிசாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இக்கைதிகளுக்கும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் ஏற்பட்ட சச்சரவில் இரு சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் நான்கு கைதிகளும் காயமடைந்தனர். இத்தாக்குதல்களின் பின்னரே இவர்களைப் பூஸாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இவர்களில் அனேகமானோர் எவ்வித குற்றச்சாட்டுகளுமின்றி நீண்ட நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களாவர். இவர்களுக்கான வழக்குகளும் மட்டக்களப்பு நீதிமன்றத்திலேயே பாரப்படுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் இவர்களுக்கான வழக்குகள் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவது சாத்தியமா என்பது தெரியவில்லை.

கைதிகள் அனைவரும் சங்கிலியால் தொடராகப் பிணைக்கப்பட்டவாறு பஸ்சில் ஏற்றப்பட்டு பூஸாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். ஒரு முழுநாள் பயணத்தில் இவர்களுக்கு இடையில் வைத்து ஒரு தடவை மட்டுமே ஒரு துண்டுப் பாணும் கொஞ்சம் தண்ணியும் கொடுக்கப் பட்டுள்ளது.

இதேநேரம் இவர்களைக் கூட்டிச் சென்ற பொலிசாரும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் போதையில் இருந்துள்ளனர். ஒரு பொலிஸ்காரர் போதையில் நிட்டம்புவையில் வைத்து பஸ்ஸில் இருந்து தவறி விழுந்து தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இக்கைதிகளில் அனேகமானோர் திருமணமானவர்கள். இனி இவர்களின் மனைவி, பிள்ளைகள் உறவினர்கள் தென்னிலங்கையிலுள்ள பூஸா முகாமுக்கு பார்வையிடச் செல்வதெனில் கஸ்டங்களையும் சிரமங்களையும் அனுபவிக்க நேரிடும். கூடவே, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் படுகின்ற கைதிகளை பார்வையிடுவதற்கு விதித்துள்ள புதிய கட்டுப் பாடுகளும் சேர்ந்து கொண்டுள்ளன. ○

## அரசுக்கு எதிராக வழக்கு !

அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றும் முயற்சியாக அரசு மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப் பொன்றை நடத்தத் தீர்மானித்தால் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய மக்கள் ஐக்கிய முன்னணி (எம்.ஈ.பீ.) தயாராகிறது.

தம் கட்சி இதற்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை உள்நாட்டு, வெளிநாட்டுச் சட்ட வல்லுனர்களிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளதாக ம.ஐ.மு.வின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ம.ஐ.மு. இப்போதைய அரசு, அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்காக, சட்ட பூர்வமான நடைமுறைகளுக்குப் புறம்பாக கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்றின் ஊடாக மட்டுமே அந்நோக்கத்தை நிறைவேற்ற முயல்வதாகத் தெரியவருவதாலேயே இவ்வாறான நடவடிக்கையொன்றை எடுக்க வேண்டியுள்ளதாக அது தெரிவிக்கிறது.

அரசின் உயர் சட்ட அதிகாரிகள் இது தொடர்பாகப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும் அதற்குத் தேவையான சட்ட பூர்வ அதிகாரம் எதனையும் தற்போதைய அரசு கொண்டிருக்கவில்லை எனக் கூறிய அவர் அரசியலமைப்பினூடாக மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் அவ்வாறான செயற்பாடொன்றுக்கு எதிராகத் தாம் உறுதியாகவே சட்ட நடவ்டிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இதே சமயம் வட - கிழக்கில் நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவும், இந்த யுகத்தின் தேவைகளுக்குப் பொருத்தமான விதத்திலான புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிக்கும் முயற்சியை ம.ஐ.முன்னணி ஆரம்பித்துள்ளது. ○

## யாழ்ப்பாணம்: கிருஷாந்தி, ரஜனி, சரஸ்வதி.

வெட்ட வெட்டத் தளைக்கிற சூரபத்மனின் தலைபோல பொ.ஐ.மு. அரசாங்கத்திற்கும் பிரச்சினைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டே இருக்கின்றன.

கிருசாந்தி பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தோண்டி எடுக்கப் பட்டதோடு இது ஆரம்பமாகியது. பிறகு ரஜனி மலக்குளியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டார். கிழக்கில் கோணேஸ்வரி வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்ட பின் கிரனைற் வெடிக்க வைத்துக் கொல்லப் பட்டார். இவற்றோடு இப்போது இன்னொரு விடயமும் சேர்ந்து கொண்டுள்ளது.

97 நவம்பர் 28ம் திகதி யாழ்ப்பாணம் அச்சுவேலி தெற்கு வாதரவத்தை பகுதியில் வீதித் தடையில் கடமையில் இருந்த படையினர் சரஸ்வதி செளந்தரராஜன் (வயது 21, சுந்தரபுரம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி) , செல்வரட்ணம் ஜெய-சீலன் (வயது 24, சுந்தரபுரம், மட்டு-வில் தெற்கு, சாவகச்சேரி) என்ற இருவரையும் கைது செய்திருக்-கிறார்கள்.

இராணுவத்தால் விசாரணைக்காக வாதரவத்தை இராணுவ முகாமுக்-குக் கூட்டி சென்ற பின்னர் இவ்விருவர் பற்றிய எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

இவ்விருவரும் காணாமல் போனது தொடர்பாக உறவினர்கள் தொடர்ச்சியாக முறையிட்டு வந்ததைத் தொடர்ந்து ஜனவரி 19ம் திகதி பலாலியில் உள்ள வடபகுதிப் படைத் தலைமையகம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

"இராணுவத்தால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவர் தொடர்பாகவும், கைது மற்றும் விசாரணைகளின் போது கடைப்-பிடிக்க வேண்டிய நடைமுறைகளை விசாரணை நடாத்திய படையினர் மீறியதால் இவர்கள் இருவரும் மரணமடைந்தனர்" என்கிறது அறிக்கை. வாதரவத்தை இராணுவ முகாமிற்-குப் பொறுப்பான ஒரு அதிகாரியும் சம்பந்தப்பட்ட ஒன்பது சிப்பாய்களும் இச்சம்பவத்தை மூடி மறைக்க முயன்றுள்ளனர். இப்போது இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

லெப்டினன் ஜஸால குமார வீரசிங்க, மஞ்சுல சமன்குமார, ஜெலயகுமார, பிரேமதிலக, சனத் துஜானந்த றுல்நாயக், பிரேம ஜானக், சுஸந்த உதயகுமார பீரிஸ்,டொன் சுனில், திலகரட்ண, சமன் சுஸா, ஹேரத் ஆகியோரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளோராவர்.

இதே வேளை இக்கொலைகள் தொடர்பாக தடயங்களைத் தேடும் நோக்கில் யாழ் பதில் நீதிவான் தலைமையிலான குழு ஒன்று சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படும் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டது.

யாழ் பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டியிலுள்ள இராணுவ முகாமில் முதலில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அங்கு பாழ-டைந்த நிலையில் இருந்த மலசல-கூடக் குழி திறந்து சோதனையிடப்-பட்டது. அதனுள் தடயம் எதுவும் கிடைக்காத போதும். மலசல கூடக் குழியின் மேல் மூடியின் உட்பக்கத்-தில் கரும்புகை படர்ந்திருந்தது. அத்துடன் எரிந்த குறையில் சில தென்னை மட்டைகளும் காணப்-பட்டன. மலசல குழியின் மேல் எரிந்த சாம்பலும் அருகில் ஓர் ரயரும் காணப்பட்டன.

பின்னர் சமையலறையை இக்குழுவினர் பார்வையிட்டனர். அங்கிருந்த வளையிலேயே இவர்கள் இருவரும் தூக்கில் போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் வாதரவத்தை விரைவாணி ஏரியையும் பார்வையிட்டனர். அந்த ஏரியிலேயே இறந்தவர்களது எரிந்த எலும்புகள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் எந்தத் தடயத்தையும் இக்குழுவினால் மீட்க முடியவில்லை எனினும் இக் குழுவி-னர் நீர்வேலி கண்ணாடித் தொழிற்-சாலைக்கு அருகில் இருந்த கேணி ஒன்றிலிருந்து இறந்தவர்களது எனக் கருதப்படும் சைக்கிள் உதிரிப்-பாகங்கள் சிலவற்றை மீட்டுள்ளனர்.

வழமை போல இவ்வழக்கின் விசாரணையும் நீளும் தாமதித்த நீதி, இல்லை என்றல்லவா அர்த்தம்! ○

## அ.செ.மு.: சிரஞ்சீவி

பழம்பெரும் எழுத்தாளரும் பத்திரிகையாளருமான மதிப்பிற்குரிய அ.செ.மு.அவர்கள் காலமாகி விட்டார் என்ற செய்தியும் அதைத் தொடர்ந்து அவர் பற்றிய குறிப்புக் களும் சரிநிகரில் வெளிவந்தது வாசகர்கள் அறிந்ததே.

யாழ்ப்பாணத்தில் இருந்து அவரது உறவினர் ஒருவர் மூலமாக கிடைத்த செய்தி ஒன்றை அடிப் படையாகக் கொண்டு சரிநிகர் இத்தகவலை வெளியிட்டிருந்தது. கரவெட்டி முதியோர் இல்லம் ஒன்றில் வாழ்ந்து வந்த அ.செ.மு. அவர்களும் இன்னும் அங்கு வாழ்ந்த



பலமுதியோர்களும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக அங்கிருந்து வேறு இடங்களுக்கு மாறிமாறி மாற்றப் பட்டனர். இவ்வாறு மாற்றப் படுகையில் நோய்வாய்ப்பட்ட ஒரு சில முதியவர்கள் இறந்தும் போயினர். இவ்வாறு இறந்தவர்களில் அ.செ.மு.அவர்களும் ஒருவர் என்ற செய்தியே சரிநிகருக்குக் கிடைத்த செய்தியாகும்.

ஆனால் அ.செ.மு. அவர்களில் ஒருவர் அல்ல, அவர் இன்னமும் திருமலை உப்புவெளி முதியோர் இல்லம் ஒன்றில் அவர்களின் பராமரிப்பில் இருக்கிறார் என்ற தகவல் இப்போது கிடைத்துள்ளது. அ.செ.மு. அவர்கள் இன்னமும் நம்முடன் இருக்கின்றார் என்பது சந்தோசமளிக்கின்ற ஒரு செய்தியாகும்.

"இன்று உலகில் எனக்கு ஒருவருமே இல்லை. நான் தனிமரம் ஆகி விட்டேன்" என்று அவர் தெரிவித்ததாக வார இதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது. அவர் நீடூழி வாழ வாழ்த்தும்அதே வேளை தவறான செய்தி ஒன்றை பிரசுரிக்க நேர்ந்தமைக்காக சரிநிகர் அவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறது. ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுபான்மையோரை ஒழிக்க அரசியல் யாப்பு வகுத்த வழி

செம்பாட்டான்




இலங்கையில் 50ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்ட ஏற்பாடுகள் தடல் புடலாக நடைபெற்று வருகின்றன. இதற்காக கண்டி மாநகரம் பல்வேறு வகைகளிலும் அலங்கரிக்கப்பட்டு வருவதோடு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் அங்கு மேற்கொள்ளப்படுகின்றன. வழக்கம் போலவே சிங்கள மக்கள் இதில் ஆரவாரமாக பங்கு பற்றுவதும் தமிழ் மக்கள் அந்நியப்பட்டு நிற்பதும் தொடர்கிறது. சுதந்திர தின விழா பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற போர்வையில் தமிழ் மக்கள் மிக மோசமாக இம்சிக்கப்படும் நிலைமையும் தோன்றியுள்ளது. "சுதந்திர தின விழா" என்ற பெயரில் எங்களை இம்சிப்பதை விட விழா முடியும்வரை எங்களை எங்காவது அகதிகள் முகாமில் வைத்துவிட்டு விழா முடிந்தபின் எங்களை இருப்பிடங்களில் இருக்கச் செய்யுங்கள்! என கண்டி மாநகர தமிழ்மக்கள் கேட்கும் அளவுக்கு இம்சைகள் வளர்ந்துள்ளன.

இலங்கைக்கு கிடைத்த சுதந்திரம் என்பது உண்மையில் அனைத்து மக்களுக்குமுரிய சுதந்திரமல்ல. மாறாக சிங்கள மக்களுக்குரிய சுதந்திரமே. இதனையே சுதந்திர தின விழா தொடர்பில் தமிழ் மக்கள் படும் அல்லல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இது ஒரு பொதுப்படையான கருத்துத்தான். சுதந்திரத்தின் இன ரீதியான அம்சத்தைக் காட்டவே இவ்வாறு குறிப்பிடுகின்றேன். மற்றப்படி 1948ல் கிடைத்த சுதந்திரம் அனைத்து சிங்கள மக்களுக்கும் கிடைத்த சுதந்திரம் என்று சொல்வது சரியானதல்ல. ஒருவகையில் இதை சிங்கள பௌத்தத்திற்கான சுதந்திரம் என்று சொல்வதே பொருத்தமானது. சிங்கள பௌத்த இனவாத வளர்ச்சிக்கு வழி கோழியது இச் சுதந்திரம் என்று சொல்லலாம். உண்மையில் சுதந்திரத்தின் பின்னரே தமிழ் மக்கள் மோசமாக ஒடுக்கப்பட தொடங்கினர். இதனால் தான் இந்த சுதந்திரத்தை பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை ஒடுக்குவதற்குப் பெற்றுக் கொண்ட அனுமதிப்பத்திரம் (லைசன்ஸ்) என்று குறிப்பிடப்படுகின்றது.

சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் வரலாறு என்பதே தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்ட வரலாறுதான். இவ் ஒடுக்கு முறைகள் 'பாதி சுதந்திரம்' கிடைத்த டொனமூர் அரசியல் திட்டத்(1931)துடனேயே ஆரம்பித்துவிட்டன. எனினும் 1948ல் கிடைத்த 'முழுமையான சுதந்திரம்" பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான சகல கதவுகளையும் திறந்து விட்டது. இலங்கை ஆட்சிமுறை அரசியல் யாப்பிற்கு உட்பட்ட ஆட்சிமுறை என்ற வகையில் ஒடுக்கு முறைகள் அனைத்தும் அரசியல்யாப்புகளின் மூலம் கிடைக்கப் பெற்ற அதிகாரங்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் இவ் ஒடுக்கு முறைகளுக்கு சுதந்திரத்திற்குப்பின்னரான அரசியல் யாப்புகளின் பங்கு எவ்வாறு இருந்தது? அவ்வதிகாரங்களைக்கொண்டு பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை எவ்வாறு ஒடுக்கினர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அரசியல் யாப்புகளின் வளர்ச்சியும் அதிகார கைப்பற்றலும்

நவீன ஆட்சிமுறையில் அரசியல் யாப்புகளினூடாகவே அரசாங்கத்தின் அதிகாரங்கள் பெறப்பட்டு பிரயோகிக்கப்படுகின்றன. மக்களின் அரசியல் அபிலாசைகளும் அரசியல் யாப்புகளினூடாகவே வெளிப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் பிரித்தானியரிடமிருந்து இலங்கையர்களுக்கு அரசியல் அதிகார கைமாற்றம் அரசியல் யாப்பு மாற்றங்களினூடாகவே மேற்கொள்ள ப்பட்டது. 1833ல் அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் இதனை முதன் முதலாக தொடக்கி வைத்தது அச்சீர்த்திருத்தம் மூலம் உருவாக்கப்பட்ட சட்ட சபையில் இலங்கையருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதன் மூலம் இது தொடக்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து குறூ மக்கலம் சீர்திருத்தம்(1912), மானிங், சீர்திருத்தம் (1921),, மானிங் டிவன்சையர் (1924) என்பவற்றினூடாக சட்ட சபையில் இலங்கையரின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டதோடு அதிகாரக் கையளிப்பிலும் சிறுசிறு முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தொடர்ந்து 1931 டொனமூர் அரசியல் திட்டத்துடன் "பாதிச் சுதந்திரமும்" 1947 சோல்பரி அரசியல்திட்டத்துடன் "முழுச் சுதந்திரமும்" வழங்கப்பட்டன.

இவ்வாறு அரசியல் யாப்புகளினூடாக அரசியல் கைமாற்றங்கள் நடைபெற்ற போது இலங்கையின் பல்லினத் தன்மை கவனத்திலெடுக்கப்பட்டு சமத்துவமாக இணைக்கப்பட்ட கூட்டிடம் அதிகாரங்கள் கையளிக்கப்படவில்லை. மாறாக எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பான்மையாக உள்ளனர் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக சிங்கள இனத்திடமே அதிகாரங்கள் கையளிக்கப்பட்டன. இதனை டொனமூர் அரசியல் திட்டத்திலேயே தெளிவாக அடையாளம் காணக்கூடியதாக இருந்தபோதும் சுதந்திரத்தின் பின்னரான அரசியல் யாப்புகளிலேயே இதன் முழுமையை தரிசிக்க முடிந்தது.

## சுதந்திரத்தின் பின்னர்-அரசியல் யாப்பு

சுதந்திரத்தின் பின்னரான அரசியல் யாப்புகளாக சோல்பரி அரசியல் யாப்பு (1972), இரண்டாவது குடியரசு அரசியல்யாப்பு (1948) என்பன கொள்ளப்படுகின்றன. சோல்பரி அரசியல்யாப்பு சுதந்திரத்திற்கு சற்று முன்னர் உருவாக்கப்பட்ட போதும் சுதந்திர இலங்கையின் அரசியல் யாப்பாக இதுவே ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் சுதந்திரத்தின் பின்னரான யாப்பாகவே இதனையும் கொள்ளுதல் வேண்டும். சுதந்திரம் பெற்ற ஏனைய நாடுகளைப்போல புதிய யாப்புகள் எவற்றையும் சுதந்திர இலங்கை உருவாக்கவில்லை.

## சோல்பரி யாப்பு(1947-1972)

இவ் யாப்பின் மூலமே பிரித்தானிய மாதிரியிலான ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சி முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனூடாக "பெரும்பான்மை மக்களின் விருப்பிலான அரசு" என்ற எண்ணக்கரு இலங்கை அரசியலில் புகுத்தப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பான்மை மக்களின் அரசு என்பது "சிங்கள மக்களின் அரசு" என்ற அர்த்தத்தினையே கொண்டிருந்தது. இதன் மூலம் ஏனைய இனங்களின் அரசியல் அபிலாசைகள் புறக்கணிக்கப்படுவதற்கு அரசியல் அமைப்பு ரீதியாகவே வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

பெரும்பான்மை இனத்தினை வழிநடாத்தும் அரசியல் சிந்தனையாக பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனையே நிலவியமையால் அரசும் இச் சிந்தனையை செயற்படுத்தும் அரசாக மாறியது. அரசின் செயற்பாட்டு நிறுவனங்களான சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பன மிக விரைவாகவே பேரினவாத சிந்தனை கொண்ட நிறுவனங்களாக மாறின. யாப்பு ரீதியாக அரசியல் அதிகாரங்கள் இந் நிறுவனங்களுக்கு கிடைத்ததைத் தொடர்ந்து அவை மேலும் மேலும் பேரினவாத சிந்தனைகளினால் இறுகிச் செல்லும் நிலை வளர்ச்சியடைந்தது. தமிழர்களினதும் இந்திய அரசினதும் வேண்டுகோள்களினால் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட சிறுபான்மையோர் காப்பீடுகள் பேரினவாத அலைக்கு முன்னால் நின்றுபிடிக்க முடியாமல் மூலையில் ஒதுங்கிக் கொண்டன. தமது பேரினவாத விஸ்தரிப்புக்கு அரசியல் யாப்பு இருந்த போதும் பேரினவாத சக்திகள் அதனை மீறியும் நடைமுறையில் செயற்பட்டன.

## சோல்பரி அரசியல் யாப்பில் சட்டத்துறை

சோல்பரி அரசியல் யாப்பில் சட்டத்துறையாக மக்கள் பிரதிநிதிகள் சபை, செனற் சபை என்ற இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் விளங்கியது. இதில் மக்கள் பிரதிநிதிகள் சபையே சட்ட ஆக்கத்தினைப் பொறுத்தவரை அதிகாரம் கொண்ட சபையாக விளங்கியது. இது 101 உறுப்பினர்களைக் கொண்டது இதில் 95 பேர் தேர்தல் தொகுதிகளில் இருந்து ஐந்து வருடத்திற்கு ஒரு முறை நடை பெறும் பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப் பட்டனர். மீதி 6 பேர் சிறுபான்மை இனங்களிலிருந்து மகா தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டனர்.

தேர்தல் தொகுதிகளை காலத்திற்கு காலம் உருவாக்கப்படும் தொகுதி நிர்ணய ஆணைக்குழு தீர்மானித்தது. இவற்றைத் தீர்மானிக்கும் போது 75,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதி அல்லது 1000 சதுர மைலுக்கு ஒரு பிரதிநிதி என்ற வகையில் தீர்மானிக்க வேண்டும்எனக் கூறப்பட்டது. பல இனங்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் பல அங்கத்தவர் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இதன்படி ஆரம்பத்தில் கொழும்பு மத்தி மூன்று அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டதோடு, கொழும்பு தெற்கு பதுளை, பலாங்கொடை என்பன இரட்டை அங்கத்தவர் தொகுதிகளாக ஆக்கப்பட்டன. ஆனால் நடை முறையில் பல இடங்களில் தமிழ் மக்களின் பிரதேசங்களை ஊடறுத்து தொகுதிகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன. உதாரணமாக கொழும்பு மத்தி அங்கு வாழும் மூன்று இன மக்களும் தமது பிரதிநிதிகளைச் தெரிவு செய்யும் வகையில் மூன்று அங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட்டது. ஆனால் சோல்பரி அரசியல் திட்ட காலம் முழுவதும் ஒரு தமிழ்ப்பிரதிநிதி கூட அங்கிருந்து தெரிவு செய்யப்பட வில்லை காரணம், அங்கு தமிழ்ப் பிரதேசம் இரு கூறாக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. கொழும்பு மத்தி தேர்தல் தொகுதியின் எல்லையாக கொச்சிக்கடையையும், செல்லமஹால் தியேட்டர் சந்தியையும் இணைக்கும் ஜம்பட்டா வீதியே நிர்ணயிக்கப்பட்டது. இதனால் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கொட்டாஞ்சேனை பிரதேசம் கொழும்பு மத்தி தேர்தல் தொகுதியிலிருந்து தவிர்க்கப்பட்டது.

**1948இல்**

**கிடைத்த சுதந்திரம் அனைத்து சிங்கள மக்களுக்கும் கிடைத்த சுதந்திரம் என்று சொல்வது சரியானதல்ல. ஒருவகையில் இதை சிங்கள பௌத்தத்திற்கான சுதந்திரம் என்று சொல்வதே பொருத்தமானது. சிங்கள பௌத்த இனவாத வளர்ச்சிக்கு வழி கோழியது இச் சுதந்திரம் என்று சொல்லலாம். உண்மையில் சுதந்திரத்தின் பின்னரே தமிழ் மக்கள் மோசமாக ஒடுக்கப்பட தொடங்கினர்.**

வெள்ளவத்தைப் பகுதி தமிழர்களை உள்ளடக்கிய கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியிலும் இதுவே நடை பெற்றது. அங்கிருந்தும் தமிழர் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. இப் போக்கு மக்கள் பிரதிநிதித்துவத்தினை வெகுவாகக் குறைத்தது. 1947 தேர்தலில் வடக்குகிழக்கிலிருந்து 12 தமிழரும் மலையகத்திலிருந்து 7 தமிழருமாக 19 தமிழரே தெரிவு செய்யப்பட்டனர்.

பேரினவாத சக்திகளுக்கு இக் குறைவான எண்ணிக்கை கூட கண்ணைக் குத்தியது. தொடர்ந்து வந்த காலங்களில் தமிழர் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நடவடிக்கைகள் மூன்று வகைகளில் மேற்கொள்ளப்பட்டன. முதலாவது வகையின் மலையக மக்களுக்கு எதிராக பிரஜாவுரிமைச் சட்டமும், வாக்குரிமைச் சட்டமும் கொண்டு வரப்பட்டு அவர்களின் பிரதிநிதித்துவம் அனைத்தும் பறிக்கப்பட்டன. சுதந்திரம் கிடைத்து ஒரு சில மாதங்களிலேயே இது மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாவது வகையில் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் சிங்களத் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. அம்பாறை தேர்தல் தொகுதி 1959ம் ஆண்டும், சேருவில தேர்தல் தொகுதி 1977 இலும் உருவாக்கப்பட்டன.

மூன்றாவது வகையின் படி தேர்தல் தொகுதிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போது புதிய சிங்கள தேர்தல் தொகுதிகள் அதிகளவில் உருவாக்கப்பட்டன. 1959 ம் ஆண்டு தேர்தல் தொகுதி சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பிரதிநிதிகளின் எண்ணிக்கை 151 ஆக அதிகரிக்கப்பட்ட போது சிங்களப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரித்த அளவுக்கு தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வில்லை.

## நியமன உறுப்பினர்கள்

தேர்தலின் மூலம் போதிய பிரதிநிதித்துவத்தை பெறாத சிறுபான்மை இனங்களுக்கு பிரதிநிதித்துவத்தினை வழங்கும் முகமாகவே நியமன உறுப்பினர் முறை கொண்டுவரப்பட்டது. ஆரம்பத்தில் இதன் மூலம் சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டாலும் பிற் காலத்தில் அரசியலமைப்பு ஏற்பாடுகளை மீறி பெரும்பான்மை இனத்தவர்களும் இதன் மூலம் நியமிக்கப்படும் நிலை தோன்றியது. 1956-1960 காலப்பகுதிக்கு N.H.A.M. கருணாரத்னவும், 1960-1965 காலப்பகுதிக்கு L.A. அபயரத்னாவும், 1970-1977 காலப்பகுதிக்கு M.D.S.ஜெயவர்தனா S.S.குணத்திலக்கா என்பவர்களும் இவ்வாறு பெரும்பான்மை இனத்திலிருந்து நியமிக்கப்பட்டனர். (1972 முதலாவது குடியரசு அரசியல் யாப்பு மூலம் நியமன உறுப்பினர் முறை நீக்கப்பட்டாலும் பழைய உறுப்பினர்கள் தொடர்ந்திருந்தனர்)

வடக்கு- கிழக்கு தமிழர்களில் இருந்து 1970-1977 காலப்பகுதிக்கு மாத்திரம் M.C.சுப்பிரமணியம், செல்லையா குமார சூரியர் ஆகிய இருவர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் உண்மையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக செயற்படவில்லை. மாறாக அரசின் பொம்மைகளாகவே செயற்பட்டனர். தமிழ்ப்பிரதிநிதிகளும் தங்களோடு உள்ளனர் எனக்காட்டவே இவர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களைக் கொண்டு தமிழ் மக்களுக்கு எதிரான செயல்களே முடுக்கி விடப்பட்டன. 1972 ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் யாப்பினை முழுச்சமூகமும் நிராகரித்த போது இவர்கள் இருவரும் அதனை ஆதரித்தனர். உண்மையில் தமிழ் நியமன உறுப்பினர்கள் அன்று தொட்க்கம் இன்றுவரை தமிழர் உரிமைகளைக் காட்டிக் கொடுப்பதற்கே பயன்படுத்தப்பட்டனர். குமார சூரியரிலிருந்து இன்று தேசியப்பட்டியல் நியமன உறுப்பினர் லக்ஸ்மன் கதிர்காமர் வரை இதுவே தொடர்கின்றது.

## செனற்சபை

பாராளுமன்றத்தின் 2வது சபையாக செனற் சபை விளங்கியது. இச் சபை தமிழர்களுக்கு போதிய பிரதிநிதித்துவத்தையும் பாதுகாப்பையும் வழங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த வகையில் சிறுபான்மையோர் காப்பீடுகளில் ஒன்றாகவும் கருதப்பட்டது. ஆனால், நடைமுறையில் இது போதிய பிரதிநிதித்துவத்தையும் வழங்கவில்லை. பாதுகாப்பையும் வழங்கவில்லை.

இச்சபையில் 30 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். இவர்களில் 15 பேர் மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டனர். மிகுதி 15 பேர் பிரதமரின் சிபரிசின் பேரில் மகா தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டனர்.

1947ஆம் செனட் சபையின் ஆரம்ப காலத்தில் எஸ்.நடேசன் ஈ.எம்.பி.நாகநாதன் என்பவர்களும் 1951இல் பி.நாகலிங்கமும் வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து மக்கள் பிரதிநிதிகள் சபையினால் தெரிவு செய்யப்பட்டனர். சீ.குமாரசுவாமி சிற்றம்பலம், கார்டினன் முதலியார், ஏ.பி.ராஜேந்திரா, எஸ்.ஆர்.கனநாயகம் என்போர் பிரதமரின் சிபாரிசின் பேரில் நியமிக்கப்பட்டனர். முதலாம் அரசாங்க காலத்தில் தமிழர்களின் ஆதரவு ஆட்சியிலிருந்த ஐ.தே.க.வினருக்கு தேவையாக இருந்தமையினாலேயே ஓரளவு அங்கத்துவம் கிடைத்தது. பின் வந்த காலங்களில் இது வெகுவாகக் குறைந்தது.

1952 தொடக்கம் 1956 காலப்பகுதியில் கந்தையா வைத்தியநாதனும் 1956-1960 காலப்பகுதியில் ஜீ நல்லையாவும் 1960-1965 காலப்பகுதியில் க.மாணிக்கமும் 1965-1970 காலப்பகுதியில் ஜே.நீதிராஜா, எஸ்.நடராஜா என்போரும் பிரதநிதிகள் சபையில் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மக்கள் பிரதிநிதிகள் சபையில் அங்கம் வகித்த தமிழரசு கட்சி உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

முதலாம் அரசாங்கக் காலத்தின் பின்னர், நியமனம் என்ற வகையில் எஸ்.பரராஜசிங்கம் (1954) மு.திருச்செல்வம் (1965), ஆர்.ஜேசுதாசன் (1965) என்போர் மட்டுமே நியமிக்கப்பட்டனர்.

மேற்கூறிய வகையில் பார்க்கும் போது பிரதிநிதித்துவம் என்ற வகையில் செனட் சபையில் போதிய பிரதிநிதித்துவத்தை தமிழர்களுக்கு வழங்கவில்லை என்றே கூற வேண்டும். பாதுகாப்பைப் பொறுத்தவரையிலும் கூட இது தமிழர்களுக்கு உதவவில்லை. தமிழர்களுக்கு எதிரான பிரஜாவுரிமைச்சட்டம் (1948) வாக்குரிமைச் சட்டம் (1951), தனிச் சிங்களச் சட்டம் (1956), சிறிமா சாஸ்திரி அமுலாக்கச் சட்டம் (1967) என்பன கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட போது இச்சபையும் தனது சம்மதத்தை வழங்கியது. சாராம்சத்தில் இச்சபையும் பேரினவாதமயப் படுத்தபட்ட சபையாகவே காணப்பட்டது.

## சட்டவுருவாக்கம்

சட்டவுருவாக்கத்தின் போது சிறுபன்மையினருக்கு எதிரான சட்டங்கள் உருவாக்கப்படக்கூடாது என்பதற்காகவே அரசியலமைப்பில் 29ஆவது பிரிவு எனும் ஒரு பகுதி சேர்க்கப்பட்டது. இதன்படி ஒரு இனத்தையோ மொழியையோ மதத்தையோ பாதிக்கின்ற சட்டங்களை பாராளுமன்றம் இயற்றக் கூடாது என்றும் அவ்வாறு இயற்றினால் மகாதேசாதிபதி அதற்கு கையெழுத்திட மறுக்கலாம் எனவும் கூறப்பட்டது.

ஆனால் நடைமுறையில் இவ்வேற்பாடுகள் தூக்கி வீசப்பட்டது. இது அமுலிலிருக்கத்தக்கதாகவே தமிழர்களுக்கு எதிராக முன்னர் கூறப்பட்ட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மகா தேசாதிபதியும் மறுப்பேதுமன்றி கையொப்பமிட்டார். இது பற்றி நீதிமன்றத்துக்கு முறையிட்ட போதும் அவை எவையும் வெற்றியைத் தரவில்லை. இது விடயத்தில் நீதி மன்றங்கள் எவ்வாறு நடந்து கொண்டன என்பதை பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

## சோல்பரி யாப்பில் நிர்வாகத் துறை

சோல்பரி அரசியல் யாப்பின்படி பிரதமர் தலைமையிலான மந்திரி சபை நிர்வாகத்துக்கு பொறுப்பாக இருந்தது மந்திரிமாரை நியமித்தல் நீக்குதல் மாற்றுதல், மந்திரிமார்களுக்குரிய அமைச்சுக்களை ஒதுக்குதல் மாற்றுதல் என்பவற்றில் பிரதமரே பூரண அதிகாரம் வாய்ந்தவராக விளங்கினார். தமிழர்களையும் மந்திரி சபையில் சேர்க்க வேண்டும். என்ற கட்டாயம் எதுவும் அரசியல் அமைப்பில் சேர்க்கவில்லை. பிரதமர் விரும்பினால், சேர்க்கலாம் விருப்பமில்லாவிட்டால் விடலாம். என்ற நிலையே இருந்தது.

முதலாம் அரசாங்கக் காலத்தில் பிரதான தமிழ்க் கட்சியாக அப்போது விளங்கிய அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முக்கியமான சுயேட்சை உறுப்பினர்களும் அரசாங்கத்தில் சேர்ந்தமையினால், கணிசமானளவு தமிழர்கள் மந்திரி சபையில் சேர்க்கப்பட்டடிருந்தனர். சிற்றம்பலம் தபால் தந்தி அமைச்சராகவும்,

→8

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'98 சுதந்திரப் பொன் விழா ஆண்டு :

# நடுவு நிலைப் பத்திரிகைகள் மலையக மக்கள் மீது காட்டும் மிலேச்சத்தனம் !

இலங்கை வாழ் பல்வேறுபட்ட மக்களினங்களிடையே இனவெறியை தூண்டி அதன் மூலம் 'கொழுந்து விட்டெறியும்' முரண்பாட்டை மட்டுமே முதலீடாகக் கொண்டு அரசியல் நடத்துகின்ற அரசியல் வாதிகளைப்போன்றே சிங்கள, ஆங்கில பேரினவாதச்சார்பு பத்திரிகைகளும், மக்களின் இன உணர்வுகளைத்தூண்டிவிடுவதில் வரலாறு படைத்திருக்கின்றன. இவ் வரலாற்றில் இடதுசாரி இயக்கப் பத்திரிகைகள் உட்பட இன்றைய முதலாளித்துவ சந்தைப்பொருண்மமியத்தின் ஏவல் நாய்களான பேரினவாத பத்திரிகைகள் வரை உள்ளடங்குகின்றன.

இவ் வரலாற்றுத் தொடர்ச்சியின் ஒரங்கமாக1994ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரத்தின் உடனடி விளைவாக 500க்கும் மேற்பட்ட மலையக இளைஞர்கள் மலையகத்தில் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்கள் தடுத்துவைக்கப்பட்டு, வதைக்கப்பட்டபின்பு எவ்வித சாட்சிகளும், சான்றுகளும் இல்லாமல் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருந்தபோது இராஜதந்திரம், அரசுடனான உறவை காத்தல் என்ற பெயரில் வாய்மூடி மௌனித்திருந்த தலைமைகள் தேர்தல் காலங்களிலும் தோட்டங்களில் சங்கத்துக்கு ஆட்சேர்க்கும் காலங்களிலும் மட்டுமே எழுப்புகின்ற கோஷங்களில் ஒன்றாக மலையக இளைஞர் மீதான பொலிஸ் ஒடுக்குமுறை நீக்கப்பட வேண்டுமென்பது அமைவதுண்டு. இவ்வகையில் பேச்சுக்களும், ஊர்வலங்களும், கருத்தரங்குகளும் நடைபெறும் இத் தறுவாயில் மலையகத்தின் நகரங்களான பண்டாரவளை, பதுளை, அட்டன் நகரங்களில் ஏற்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல்கள் அதன் பின்னணியில் உள்ள அரசியல் - பொருளாதார காரணிகள், சக்திகள் யார் என்பன இனம் காணப்படாமலேயே மீண்டும் ஒரு பயங்கரமான வெறியூட்டும் பிரச்சாரம் சிங்கள - ஆங்கில தினசரிகளால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் நோக்கம் அரசியல் விழிப்புற்றுவரும் மலையக சக்திகளை, இளைஞர்களை அடக்கி ஒடுக்குவதன் மூலம் சிங்கள பேரினவாதத்திற்கு அடிபணியச் செய்வதுதான்.

சிங்கள - ஆங்கிலப் பத்திரிகைகளின் நிருபர்கள் நேரடியாக பொலிஸ், புலனாய்வு பிரிவுடன் தொடர்பு கொண்டவர்களாக இருப்பதோடு மறுபுறம் பொலிசாரும், உளவுப் பிரிவினருமே பெரும்பாலும் பயங்கரவாத பூச்சாண்டி காட்டும் செய்திகளை இனவாத பத்திரிகைகளுக்குக் கொடுக்கின்றனர். 1994ம் ஆண்டு மலையக இளைஞர்கள் கைது செய்யப்பட்டவுடன் கொடுக்கப்பட்ட செய்திகள் யாவும் நுவரெலியா சிறப்புப் புலனாய்வுப் பிரிவினாலேயே கொடுக்கப்பட்டன. டிக்கோயா மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான செய்திகளும் இவ்வாறே கொடுக்கப்பட்டன.

கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் மட்டும் ஒரு டசினுக்கும் மேலான தலைப்புச்செய்திகள் சிங்கள - ஆங்கில பத்திரிகைகளில் மட்டும் வெளிவந்துள்ளன. இவை மலையகம் பயங்கரமான ஒரு பிரதேசமாக மாறிவருவதாக ஊளையிடுகின்றன. லேக்ஹவுஸ், வியாபார வெளியீடுகள், உபாலி செய்திப்பத்திரிகைகள் இப்பிரச்சாரத்தின் முன்னணியில் திகழ்கின்றன.

1. லங்காதீப 19.11.1997 இல் வெளியிட்ட தலைப்புச்செய்தி, ''இரண்டு புலி அணிகள் தோட்டத்துறையில் ஒழிந்துள்ளன. தாக்குதல்கள் தொடர்பாக திட்டமிடுவதற்காக மரக்கறித் தோட்டங்களில் சந்திக்கின்றனர்''

''தோட்டத்தொழிலாளர்கள் 80, 000 பேருக்கு இலங்கை பிரசாவுரிமை''.

2. 19.11.1997 திவயின தலைப்புச் செய்தி ''பண்டாரவளையில் குண்டு வெடிப்பு''.
3. 27.12.1997 லங்காதீப தலைப்புச் செய்தி, ''சிங்களம் தெரிந்த 25 தமிழ்ப்புலிகள் தோட்டப்பகுதியில் ஒழிந்துள்ளனர்.''
4. 19.12.1997 லங்காதீப தலைப்புச்செய்தி ''பண்டாரவளையில் இரண்டு மின்மாற்றிகளில் குண்டு வெடிப்பு''.
5. 19 12.1997 ஜனத்தா தலைப்புச் செய்தியில் ''மலையகத்தில் இரண்டு புலி அணிகள் ஒழிந்துள்ளன''.
6. 24.12.1997 லங்காதீப தலைப்புச் செய்தியில் ''மலையக இளைஞர்கள் இருந்தவாக்கில் காணாமல் போகின்றனர்'', ''புலிகளின் முகாம்களில் பயிற்சி பெறுவதாக சந்தேகம்''.

27.11.1997 லங்காதீப தலைப்புச் செய்தியில் ''லொறியில் தேயிலைப்பெட்டிக்குள் ஒழிந்து கொழும்புக்கு வந்த 16 புலிகள் கைது''.

ஆங்கிலப்பத்திரிகைகளில்...

8. 19.12.1997 The Observer தலைப்புச்செய்தியில்''புலிகள் அணி இரண்டு, மலையகத்தில் ஊடுருவியுள்ளன. தோட்டப் புறங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.''
9. 21.12.97 சண்டே ஒப்சேவர் தலைப்புச்செய்தியில்,
10. புலிகள் தேயிலை தொழிற்சாலைகளை இலக்கு வைத்துள்ளனர்.
11. 08.12.1997 த ஒப்சேவர் தலைப்புச்செய்தியில் ''மலையக இளைஞர்கள் புலிகளிடம் பயிற்சிபெற்று திரும்பியுள்ளனர்''

இப்பிரச்சாரத்தின் பின்னணியில் இயங்குகின்ற இராணுவ - பொலிஸ், புலனாய்வுத் துறையினர் அரசாங்கத்தையும், சிங்கள மக்களையும் மலையகத்தின் தொடை நடுங்குகின்ற அரசியல் தொழிற்சங்க தலைமைகளையும் பயங்கொள்ளச்செய்து, அச்சத்தில் உறைய வைத்துவிட்டு மனிதவேட்டையாடும் போது எவரும் வாய் திறக்க முடியாதபடி செய்து விடுகின்றனர்.

மலையக நகரங்களிலும், தோட்டங்களில் போதைவஸ்து, கசிப்பு, விபச்சாரம், மர்ம மரணங்கள் என குற்றச்செயல்கள் பெருகிவருகின்ற போதும் கைகட்டிக்கொண்டிருக்கிற பாதுகாப்புத்துறையினர், பல இடங்களில் கொடிய கிரிமினல்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர். சாராயம், கசிப்பு, போதைவஸ்து விற்பனை, விபச்சாரம் என்பவற்றில் நேரடியான பங்காளர்களாகவும் இருக்கின்றனர். தோட்டங்கள் சிலவற்றுக்கு பொலிஸ் வாகனங்களிலேயே சாராயம் கொண்டு செல்லப்படுகின்றது. பொலிஸ் நிலையங்களில் கெசியர்கள், புரோக்கர்கள் தினசரி மக்களை உறிஞ்சி கொண்டிருக்கின்றனர். லஞ்சம் ஊழல் தலைவிரித்தாடுகின்றது.

இவ்வாறான பின்னணிகளினூடாக மண்போட்டு மூடவும், குடியேற்றங்கள், தோட்டத்துறையின் நெருக்கடிகள், அரசின் துரோகத்தனங்கள் தொழிற்சங்கக் காட்டிக்கொடுப்புக்கள், தொண்டர் நிறுவன பகற்கொள்ளைகள் என்பனவற்றை மூடி மறைப்பதற்காகவும் பயங்கரவாத பூச்சாண்டி காட்டப்படுகிறது.

பொலிஸ் நிலையங்கள், தோட்ட நிர்வாகங்கள், அஞ்சல் நிலையங்கள், மருத்துவ மனைகள், போக்குவரத்து சேவை, உள்ளூராட்சி புறக்கணிப்பு பற்றி கேள்வி கேட்பவன் பயங்கரவாதியாக்கப்படுகின்றான்.

இப்போதைய பிரச்சாரங்களின் உச்சக்கட்டமாக பொன்விழா ஆண்டு இருக்கப்போகிறது. ஏனெனில், கண்டி, பதுளை, நுவரெலியா, கம்பளை, வத்தேகம நகரங்கள் உடனடியாக சுத்திகரிக்கப்பட்டு வருகின்றன.

அட்டன் - கொழும்பு நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒரு வீதித்தடை முகாமில் கேட்கப்படும் கேள்விகள் ஆம் என்றாலும் இல்லையென்றாலும் பயங்கரவாதியாக்கப்படக்கூடிய வகையில் கேட்கப்படுகின்றன. இவையெல்லாம் நாடு சுதந்திரம் பெற்றது தான், நாங்கள் சுதந்திரம் பெறவில்லை என்பதை தத்ரூபமாக காட்டுகின்றன.

இவ் அடக்குமுறைகளை கைகட்டி பார்த்துக்கொண்டே பேரினவாதிகளின் கால்களை நக்கிப்பிழைக்கின்ற மலையகத் தலைமைகள், ஆயுட்கால அமைச்சராக இருக்க விரும்பும் தொண்டமான், பாராளுமன்ற பட்ஜெட்டை ஆதரித்துக்கொண்டு வீதியில் ஊர்வலம் போகும் மலையக மக்கள் முன்னணி, தமிழ்க் கட்சிகள் வரலாற்றில் என்றுமே மன்னிக்க முடியாத தவறுகளைத்தான் செய்து கொண்டிருக்கின்றன.

மலையக இளைஞர்கள் புதிய உத்வேகம் பெற்று எழும்வரை மரணப் பொறியில் தான் இருக்க நேரிட்டுள்ளது.

**பிரான்சின் ஐயா.**

---

# சிறுபான்மையோரை..

> சுதந்திரத்தின் பின்னரான முதலாவது அரசியல் யாப்பே தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான வழிகளை திறந்துவிட்டது. என தெளிவாக பார்க்க முடிகிறது. இதற்கு பின்னர் வந்த அரசியல் யாப்புகள் இரண்டும் மேற்கொண்ட பணி தமிழ் மக்களை ஒடுக்குவதற்க்கு சோல்பரி அரசியல் யாப்பில் பெயரளவில் காணப்பட்ட தடைகளையும் நீக்கியதோடு மேலும் மேலும் ஒடுக்குவதற்கும் அவற்றிற்கு அரசியல் யாப்பு அந்தஸ்துகளை வழங்குவதற்கும் வழிவகைகளை தேடிக் கண்டுபிடித்தமை தான்.

7→

சி.சுந்தரலிங்கம் வர்த்தக அமைச்சராகவும், ஜி.ஜி.பொன்னம்பலம் கைத்தொழில் மீன்பிடி அமைச்சராகவும் இவ்வாறு சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்களில் சி.சுந்தரலிங்கம் பிரஜாவுரிமைச்ச சட்டம் தொடர்பாக அரசாங்கத்துடன் முரண்பட்டபடியால் ஒரு வருடத்திலேயே இராஜினாமாச் செய்தார். ஏனையவர்களில் ஜி.ஜி.பொன்னம்பலம் இரண்டாம் அரசாங்கக் காலத்திலும் பதவியைத் தொடர்ந்தார். இவரது காலத்திலேயே, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச் சேனை காகிதத் தொழிற்சாலை என்பன உருவாக்கப்பட்டன.

1952 தொடக்கம் 1956 காலப்பகுதியில் ஜி.ஜி.பொன்னம்பலம் கைத்தொழில் மீன்பிடி அமைச்சராகவும் ப.நல்லையா தபால் தந்தி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர். எனினும் இவர்கள் இருவரும் 1952-1953 காலப்பகுதியில் இராஜினாமா செய்தனர். தொடர்ந்து 1953இல் பிரதமராக கொத்தலாவல பொறுப்பேற்ற போது எஸ்.நடேசன் தபால் தந்தி அமைச்சராகவும் சேர் கந்தையா வைத்தியநாதன் வீடமைப்பு சமூக சேவைகள் அமைச்சரகவும் நியமிக்கப்பட்டனர். 1956 ஐ.தே.க. தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக்கொண்டமையினால் இவர்கள் இருவரும் ஐ.தே.க.விலிருந்து விலகியதோடு அமைச்சர் பதவியையும் இராஜினாமா செய்தனர்.

1956-1965 காலப்பகுதியில் ஸ்ரீ.ல.சு.க. ஆட்சியிலிருந்தது. இக்காலத்தில் ஒரு தமிழராவது மந்திரி சபையில் சேர்க்கப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தம்முடன் சேராவிட்டால் நியமன உறுப்பினர் மூலமோ செனட் சபையின் மூலமோ சிலரைத் தெரிவு செய்து மந்திரி பதவிகளை வழங்கியிருக்கலாம். அரசாங்கம் விருப்பமற்று இருந்தமையினால் இதனை மேற்கொள்ளவில்லை.

1965-1968 காலப்பகுதியில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்திருந்தமையினால் மு.திருச்செல்வத்திற்கு மட்டும் உள்ளூராட்சி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. 1970-1977 காலப்பகுதியில் செல்லையா-குமாரசூரியருக்கு தபால் தந்தி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. அமைச்சர் பதவிகளை வழங்கும்போது கூட ஜி.ஜி. பொன்னம்பலத்திற்கு பின்னர் தமிழ்ப்பகுதிகளை அபிவிருத்தி செய்யக்கூடிய முக்கிய அமைச்சுப் பதவிகளை வழங்குவதை ஆட்சியாளர்கள் தவிர்த்துக்கொண்டனர். அமைச்சர்களாக இருந்தவர்களில் கூட ஜி.ஜி.பொன்னம்பலம் மு.திருச்செல்வம் என்போர் மட்டுமே தமக்குப் பின்னால் கட்சியினதும் மக்களினதும் பலம் இருந்தமையினால் சுயாதீனமாக தொழிற்பட்டனர். ஏனையவர்கள் அரசாங்க கட்சியின் உறுப்பினர்களாக இருந்தமையினால் சுயாதீனமாக செயற்படவில்லை. அரசாங்கத்தின் வெறும் பொம்மைகளாகவே செயற்பட்டனர்.

மந்திரி சபைப்பதவிகள் ஒரு புறமிருக்க நிர்வாகத்துறையின் கட்டமைப்பு அனைத்தும் இவ் அரசியல் திட்ட காலத்தில் பேரினவாதமயப்படுத்தப்பட்டன. இது அமைச்சுக்கள் திணைக்களங்கள் அரசாங்க செயலகங்கள் என்ற வகையில் தொடர்ந்தது. இதனால் முழு நிர்வாக இயந்திரமும் தமிழர்களுக்கு எதிரான செய்ற்பாடுகளை முடுக்கிவிட்டன. விவசாய அமைச்சு தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை முடுக்கிவிட்டது. விளைவு டொனமூர் திட்ட காலத்தில் மெதுவாக நடைபெற்று குடியேற்றத் திட்டங்கள் சுதந்திரத்தின் பின்னர் விரைவாக செயற்பட்டது. திருகோணமலையில் அல்லை கந்தளாய் மொறவேவாத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. வவுனியாவில் பாவற்குள குடியேற்ற திட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழ்பிரதேசங்களில் சிங்கள நிர்வாக மாவட்டங்களை உருவாக்கும் முயற்சி நடைபெற்றது. இதன் நிமித்தம் 1959 இல் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு தெற்கு பிரதேசம் பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. இம்மாவட்டத்திலும் தமிழ் முஸலிம் மக்கள் பெருபான்மையாக இருந்த போதும் சிங்கள குடியேற்ற மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் அம்பாறையே அம் மாவட்டத்தின் தலைநகராக்கப்பட்டது. மாவட்ட அரச அலுவலகங்கள் அனைத்தும் சிங்கள மொழியில் மட்டும் மேற்கொள்ளப்பட்டன.

அரச வேலைவாய்ப்புக்களை பொறுத்தவரை இன ரீதியான பாராபட்சம் காட்டக் கூடாது என்பதற்காக சோல்பரி அரசியல் யாப்பில் அரசாங்க சேவை ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. சிறுபான்மையோர் காப்பீடாகவும் இது கருதப்பட்டது. 1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கான விதிகள் மூலைக்குள் தள்ளப்பட்டன. வேலை வாய்ப்புகளில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்களவர்கள் அதிகளவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பல சந்தர்ப்பங்களில் அரசியலமைப்பு சட்டம் மாத்திரமல்ல பாராளுமன்ற சட்டங்கள் காற்றில் பறந்தன. உதாரணமாக 1958ஆம் ஆண்டு தமிழ் மொழி உபயோகச் சட்டம் கொண்டுவரப்பட்டது. எனினும் நடைமுறையில் இதனை செயற்படுத்துவதற்கான முயற்சிகளில் நிர்வாகத்துறை ஊக்கமெதனையும் மேற்கொள்ளவில்லை.

## சோல்பரி யாப்பில் நீதித்துறை

சட்டத்துறையும் நிர்வாகத்துறையும் மக்களுக்கு தீங்கிழைக்கின்ற போது தடுத்து நிறுத்தும் நிறுவனமாகவே ஒரு நாட்டின் நீதித்துறை தொழிற்பட வேண்டும்

இலங்கையைப் பொறுத்தவரை இது தலை கீழாக இருந்தது. நீதித்துறையும் பேரினவாத மயப்பட்டிருந்தால் இதிலிருந்தும் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

விசாரணைகளின் போது சட்ட ஏற்பாடுகளுக்கு விளக்கம் அளிக்கும் பொறுப்பு நீதி மன்றங்களிடமிருந்தது. இங்கு இலங்கை நீதி மன்றங்கள் ஒரு போதும் தமிழர்களுக்கு சார்பாக நடந்து கொள்ளவில்லை. இது பற்றி ஒரு தடவை நிலன் திருச்செல்வம் "சட்டங்களுக்கு விளக்கம் அளிப்பதில் இல்ங்கை நீதிமன்றங்கள் தமிழர்களுக்கு சார்பாக நடந்துகொள்வதில்லை" என குற்றம் சாட்டியிருந்தார்.

உதாரணத்திற்கு தனிச் சிங்கள சட்டம் சம்பந்தமான வழக்கினை குறிப்பிடலாம். தனிச்சிங்கள சட்டத்தினால் பாதிக்கப்பட்ட கோடீஸ்வரன் என்னும் எழுதுவினைஞன் யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அரசியலமைப்பின் 29 ஆவது பிரிவினை மீறியதாக தனிச் சிங்களச் சட்டம் இருப்பதனால் அது செல்லுபடியற்ற சட்டம் என்று வாதிடப்பட்டது. வாதத்தினை ஏற்றுக் கொண்ட நீதிபதி கோடீஸ்வரனுக்கு சார்பாகக் தீர்ப்பு வழங்கினார். அரசாங்கம் கொழும்பு உயர் நீதி மன்றத்தில் வழக்கினை மேன் முறையீடு செய்தது. அங்கு அரசாங்கத்திற்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது. மக்களினால் உருவாக்கப்பட்ட பாராளுமன்றம் மக்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்குத் தேவையான சட்டங்களை உருவாக்கும் உரிமையை உடையது என்றே அங்கு அரச தரப்பினால் வாதிடப்பட்டது. இறுதியில் வழக்கு பிரித்தானிய கோமறைக் கழகத்திற்கு சென்றது. அங்கு திரும்பவும் கோடீஸ்வரனுக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்ட போது அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போட்டது. அது விடயத்தில் சிறுபான்மையினரின் காப்பீடாக கருதப்பட்ட கோமறைக்கழகமும் போதிய பாதுகாப்பினை தமிழ் மக்களுக்கு கொடுக்கவில்லை.

எனவே மேற்கூறியவைகளைக் கொண்டு பார்க்கும் போது சுதந்திரத்தின் பின்னரான முதலாவது அரசியல்யாப்பே தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான வழிகளை திறந்துவிட்டது. என தெளிவாக பார்க்க முடிகிறது. இதற்கு பின்னர் வந்த அரசியல் யாப்புகள் இரண்டும் மேற்கொண்ட பணி தமிழ் மக்களை ஒடுக்குவதற்க்கு சோல்பரி அரசியல்யாப்பில் பெயரளவில் காணப்பட்ட தடைகளையும் நீக்கியதோடு மேலும் மேலும் ஒடுக்குவதற்கும் அவற்றிற்கு அரசியல்யாப்பு அந்தஸ்துகளை வழங்குவதற்கும் வழிவகைகளை தேடிக் கண்டுபிடித்தமை தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1948-1998




# நாடு சுதந்திரம் பெற்றது...நாங்கள்?

பொன்வேந்தன்



"நாடு சுதந்திரம் பெற்றதடா நாங்கள் சுதந்திரம் பெற்றோமா?" - (ஒரு மலையக கவிஞன்)

வாழ்வுரிமை மறுக்கப்பட்ட மலையக மக்கள் சுதந்திர நாட்டின் அடிமைக்குடிகளாக நடத்தப்படும் நிலையில் நாட்டின் சுதந்திரப் பொன்விழாவை எப்படிக் கொண்டாடுவது?

மலையக மக்களில் 56% மானோர் நாடற்றவர்களாக இருக்கின்ற நிலையில், அடிமை சாசனங்கள் மூலம் நாடுகடத்தப்பட்ட மக்கள் தாயகமான தமிழகத்தில் வாழ்வுரிமையற்று வதைபடும் தருவாயில், அடிமேல் அடிபட்டு அகதிகளாகப்புலம் பெயர்ந்து மண்ணில் போர்க்காலச் சூழலால் நரகவாழ்வை எதிர்கொள்ளும் தருவாயில், 50வது சுதந்திர தின கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன. இருத்தலுக்கான அடையாளங்களை அழித்துவிடத் துடிக்கும் திட்டமிட்ட பேரினவாதத்துக்கு, சேவகம் புரிகின்ற துரோகத்தனமிக்க தலைமைகளாலும் அமைப்புகளாலும் வஞ்சிக்கப்பட்ட நிலையில், நவகாலனித்துவமயப்படுத்தல் மூலம் தொண்டர் நிறுவனங்களும், மத காலனியவாதமும் மலையகத் தமிழரின் முகங்களுக்கு போலி முகவரிகளை எழுதுகின்ற நாட்டின் போர்க்கால பொருளாதார நெருக்கடியில் அன்றாட வாழ்வுக்கே அவஸ்தைப்படுகிற ஒரு மக்கள் குழுமம் எந்தச் சுதந்திரத்தைக் கொண்டாடுவது?

சுதந்திர நாட்டில் வாழ்வுரிமை சனநாயகவுரிமைகள் பறிபோன நிலையில் நவீன இலங்கைக்கான பொருளாதார அடித்தளத்தை இட்ட மக்கள் 21ம் நூற்றாண்டில் அடிமைத்தனத்துக்கு உதாரணமாக திகழப்போகும் மக்களினம் வருகிற நூற்றாண்டையும், சுதந்திர தின நினைவுகளையும் எவ்வாறு எதிர்கொள்வது?

மலையக மக்கள் இந்நாட்டு மக்களாக ஏற்கப்படுவார்களென்ற நடைமுறைப்படுத்தப்படாத ஒரு பிர்ச்சாரத்தையே எதிர்த்து முரண்டுபிடிக்கிற பேரினவாத சக்திகள் எவ்வாறு ஒரு மக்களினத்தின் அரசியல் சமூகத்தின் இருத்தலை அங்கீகரிக்கப் போகிறது?

சட்டங்களால் சிதைக்கப்பட்டு, ஒப்பந்தங்களால் கருவறுக்கப்பட்டு, வன்முறைகளால் வதைக்கப்பட்டு, குடியேற்றங்களால் குறுக்கப்பட்டு, அறிவுக்கண் குருடாக்கப்பட்டு, அரசியல் - தொழிற் சங்கவாதிகளால் விலைபேசப்பட்டு நாட்டு நிலைமைகளால் நையப்புடைக்கப்பட்ட இம் மக்களின் வரலாற்றில் இந்த 50 ஆண்டுகள் (1948-1998) ஏற்படுத்திய கோர வடுக்கள் இந்த நூற்றாண்டின் மானிடத்தை வெட்கச் செய்வனவாக இருந்து வருகின்றன.

ஆம் இந்த நூற்றாண்டு மலையகத் தமிழரின் இரத்தத்தையும், வியர்வையையும் பிழிந்து அந்த காற்றில் வளர்ந்த வளமான மண்ணில் எழுதப்பட்ட துயரங்களின் நூற்றாண்டு, பொன்விழாக் கேள்விகளை மட்டுமே விட்டுச்செல்லக்கூடும், விடைகளை தேடிய நெடும் பயணம் தொடராத போது எதிர்காலமென்பது மக்களின் வேதனையாலும், விம்மல்களாலும் மட்டுமே எதிர்கொள்ளப் படுவதாக இருக்க முடியும்.

சுதந்திரத்தின் 50 ஆண்டுகளை திரும்பிப் பார்ப்போமானால், சட்டரீதியாக ஒப்பந்த வழியாக, சரித்திர ரீதியாக வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுச் சுவடுகளை திரும்பிப் பார்க்கிறோம்.

இந்த 50 ஆண்டுகளில் இழந்தவைதான் அதிகமாக இருப்பதுபோல் தெரிகிறது. இந்நாட்டின் நவீனத்துவத்தின் சிற்பிகள் எவ்வாறெல்லாம் சீரழிக்கப்பட்டார்கள். துறைமுகங்கள், வீதிகள், புகையிரதப் பாதைகள், மலைகளை குடைந்து சுரங்கங்கள், கானகத்தை மாற்றி காவியமாக்கிட கொடுத்த மனித உழைப்பு, மலையக மண்ணின் ஒவ்வொரு குருணிமண்ணையும், கல்லையும் செதுக்கிய கைகள் கைகட்டி. வாய்மூடி, மௌனத்தின் தலையசைப்பால் எல்லாவற்றையும் இழந்தபோதும் இருத்தலுக்கும், வாழ்தலுக்கும் விடாப்பிடியாக தெருத் தெருவாக ஓடியபோதும் எல்லாவிதமான அழித்தலுக்கும் மேலான இருத்தலை தக்க வைத்த சாதனை, சுதந்திர இலங்கையின் பொன்விழா கொண்டாடும் கனவான்களுக்கு விடப்படும் சவால். அதுதான் எல்லாவிதமான எகிறல்களையும் மீற ஒரு தேசம் இருக்கிறதே இது எப்படி சாத்தியமானது?

- 1948இல் பிரசாவுரிமை பறிப்பு.
- 1949இல் வாக்குரிமை மறுப்பு.
- 1954இல் முதலாவது அடிமை சாசனம்.
- 1958இல் மொழியுரிமை மறுப்பு.
- 1964இல் இரண்டாவது அடிமை சாசனம்.
- 1974 மூன்றாவது அடிமை சாசனம்

அனைத்தையும் மீறி ஒரு மக்கள் திரள் வாழ்கிறது என்றால் அதன் உள்ளர்த்தத்தில் ஒரு தேசம் தன் இருத்தலுக்காக மௌனமாக போராடுகிறது என்றுதானே அர்த்தம்!

ஆண்டுக்கொருதடவை அடிக்கப்பட்ட போதும் அசையாதிருக்கும் ஒரு இனம் உலகில் இருக்கிறது என்றால் அது மலையக தமிழ் மக்கள் மட்டுமாகத்தான் இருக்க முடியும்.

ஆனால் அவமானகரமான கடந்தகாலம் எம்மை விட்டுச்சென்றிருக்கிறது. நாளைய பொழுதை நம்பிக்கையோடு எதிர்கொள்ள தயாராகிவரும் ஒரு தலைமுறைக்கு அதன் ஆற்றலுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பணி காத்திருக்கிறது.

- மக்களை ஒரு அரசியல் சக்தியாக கட்டியெழுப்புவது.
- மலையகத்தின் பிற்போக்கு சக்திகளை அம்பலப்படுத்துவது.
- துரோக சக்திகளை தூர விரட்டுவது.
- மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
- மக்களது இருத்தலுக்கான போராட்டத்தைத் தொடங்குவது.
- ஏகாதிபத்தி காலனித்துவ சக்திகளிடம் இருந்து மக்களை மீட்டெடுப்பது.
- கலாசார ஆக்கிரமிப்பிற்கெதிராக அடையாள அழிப்பிற்கெதிராக அணிதிரட்டுவது.
- பிரச்சினையை உலகமயப்படுத்துவது.
- பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தை துடைத்தெறிவது.
- இருக்கின்ற கடைந்தெடுத்த பிற்போக்குத் தனங்களுக்கு எதிராக மாற்றுவழி தந்திரோபாயங்களை முன்வைப்பது.

என எத்தனையோ சிரமமான ஆனால் அவசியமான, தீர்க்கமான பணிகள் ஒரு தலைமுறையின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

''தன் ஒடுக்குமுறைக்கெதிராக போராடாத இனம் என்றுமே தன் விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியாது'' என்பதை வரலாறு மெய்ப்பித்திருக்கிறது.

ஐந்து தசாப்தங்களாக பேரினவாத ஆட்சியாளர்களால் திட்டமிட்டு கட்டவிழ்க்கப்பட்ட அனைத்து அடக்கு முறை வடிவங்களையும் எதிர்த்து மக்கள் தம் சக்திக்கும் உட்பட்ட வகையில் போராடினார்கள். தலைமைகளின் நயவஞ்சகமும், காட்டிக்கொடுப்பும் மக்களை பின்தள்ளின; தள்ளிக்கொண்டிருக்கின்றன.

ஆனால் வரலாறு ஒரு போதும் பின்நோக்கி நகர்வதில்லையே!

பாராளுமன்ற சமரசவாதத்தையும், சந்தர்ப்ப வாதத்தையும் நம்பி நாம் ஏமாற்றப்பட்ட 50 ஆண்டுகள் கொடுமைமிக்கவைதான். ஆனால் எதிர்காலத்திற்கான படிப்பினைகளை அது தந்திருக்கிறது.

பிரசாவுரிமை பறிபோனபோதும், வாக்குரிமை இழந்தபோதும், பாராளுமன்ற கோசங்களுடன் அடங்கிப்போன இடதுசாரிகளையும், பிற்போக்கு சக்திகளான தலைமைகளையும் தம் இருத்தல் கேள்விக்குள்ளான போதுமட்டும் சத்தியாக்கிரகமிருந்த வீரர்களையும் வரலாறு எமக்கு காட்டிக்கொடுத்திருக்கிறது. வாக்குரிமை பறிபோனமையோடு மக்களை அநாதைகளாக விட்டுவிட்டு ஓடிப்போனவர்கள், வரலாற்று நிர்ப்பந்தமும், சூழ்நிலையும் வரவே பிரசாவுரிமையும், வாக்குரிமையும் வந்தவுடன் பரிவோடு பேசுகிற கயமையைக் காண்கின்றோம். தோட்டத்தொழிற்துறை தனியார் மயமாக்கப்பட்டதை நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரித்து நின்ற நிற்கின்ற சக்திகளையும், அவர்களின் இரட்டை வேடங்களையும் கண்முன்னே கண்டு வருகிறோம். வரலாறே வஞ்சிக்கப்பட்ட வரலாறாக இருக்கிறது.

இந்தியா எமது தாய் நாடு. நாம் இந்தியத் தமிழரென முழங்குகிற வெற்று கோசத்தினையும், அதனூடாக ஒரு மிக நீண்ட அரசியல் சேற்றில் எம்மை புதைப்பதற்கு எடுக்கப்படும் எத்தனத்தையும் காண்கின்றோம்.

''இந்தியா சுதந்திரமடைந்தபோது ஏகாதிபத்தியத்தின் நண்பரான நேரு இந்தியா பலம் பெ ம்போது அது உலகெங்கினும் உள்ள தன் மக்களைக் காப்பாற்றும்'' என குரல் கொடுத்தார்.

ஆனால், இந்தியா உலக வல்லாட்சிகளில் ஒன்றான பின்பும் பர்மாவில், பிஜியில், இலங்கையில் உதைமேல் உதைபடும் தமிழரை காக்க முயன்றதில்லை. அவர்களுக்கு சுருக்குக் கயிறு மாட்டிக்கொண்டே பிராந்திய நலனை விஸ்தரித்தது என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது.1954, 1964, 1974 இல் நயவஞ்சகமான துரோகத்தனமான நாடுகடத்தல் ஒப்பந்தங்களை இலங்கையுடன் மேற்கொண்டு ஆறாம் வர்க்கங்களின் நலன்களைப் பங்கிட்டுக் கொண்டது இந்தியா. இந்த நூற்றாண்டின் மிக கொடிய அடிமை சாசனங்களாக அவை எம்மீது திணிக்கப்பட்டன.

தாயகம் திரும்பிய மலையக மக்களை நிலப்பிரபுக்களிடம் கூட்டம் கூட்டமாய் விற்று கொடைக்கானல், அஸ்ஸாம், கர்னாடக பகுதிகளில் மீண்டும் கொத்தடிமைகளாக்கியது. ஆயிரம் ஆயிரமாய் விபச்சாரம் செய்யவும், பிச்சை எடுக்கவும் மலையக மக்கள் நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். தோட்டக்காட்டான், சிலோன்காரன் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டார்கள், குடியுரிமையற்றவர்களாக வதைக்கப்பட்டு வருகின்றார்கள்.

## பொன்விழா ஆண்டில் மலையகத் தமிழர் வரலாற்றுத் தடயங்கள்

1815 -கண்டி இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றல்
1823 -முதல் இந்திய தமிழர் குழு வருகை.
1824 -கண்டி சிங்கப்பிட்டியில் ஜோர்ஜ்பேர்ட் கோப்பியை பரீட்சார்த்தமாக பயிரிடல்.
1825 - கண்ணொருவவில், எட்வர்ட் பான்ஸ் கோப்பி தோட்டம் ஆரம்பித்தல்.
1827 -16,000 தொன் கோப்பி ஏற்றுமதி செய்யப்படல்
1837 -தும்பரையில் கரும்புத் தோட்டம் தொடங்கப்படல்.
1841 -புசல்லாவை பகுதியில் தேயிலைப் பயிரிடப்படல்.
1854 -பெருந்தோட்ட நிர்வாகிகளின் முதல் கூட்டம் கூடல்
1866 -அசாம் தேயிலை அறிமுகம். ஒப்பந்த முறிவு சட்டப்படி மீறும் தொழிலாளியை கைது செய்து சிறையிட ஏற்பாடு.
1867 -ஜேம்ஸ் டெய்லர் லூல்கந்தலா தோட்டத்தில் முதல் தேயிலை பயிரிடல்.
-கொழும்பு கண்டி புகையிரத பாதை திறக்கப்படல்
1869 -கோப்பி அழிவுறல்.
1872 -தோட்டத் தொழிலாளருக்கு மருத்துவ வசதி கட்டளை வெளியிடப்படல்
1873 -முதல் தொகுதி தேயிலை லண்டனுக்கு ஏற்றுமதி.
1883 - கொழும்பில் முதல் தேயிலை ஏலவிற் பனை.
1886 -ஊவா மாகாணம் பிரகடனம்
1888 -புகையிரதப் பாதை அப்புத்தளைக்கு விஸ்தரிப்பு
1889 -தோட்டத்தொழிற்சட்டம்.
1892 -கூலியாள் பதிவு கந்தோர்கள் திறக்கப்படல்
1894 -கொழும்பில் தேயிலை தொழிலாளர் பணியம் ஆரம்பம்
1897 -தரிசு நில சுவீகரிப்பு சட்டம். இராகமையில் கூலி குடியிருப்பு முகாம் தொடங்குதல்
1901 -கண்டி மாகாண பெருந்தோட்ட நிர்வாகிகள் சங்கம் அங்குரார்ப்பணம்.
1904 -தேயிலை வரிச்சட்டம் அமுலாக்கப் படல்.
1910 -வாக்குரிமை மசோதா சட்டமாக்கப்படல்.
1919 -இரப்பர் செடி நியுகின்னியாவில் இருந்து கொண்டு வரப்படல்.
1920 -தோட்டப்பகுதியில் கட்டாய கல்லாயபுருத சட்டம்.
1921 -துண்டு முறை ஒழிக்கப்படல்
1923 -கடவுசீட்டு சட்டம் நிறைவேற்றப்படல்
1925 -தேயிலை ஆராய்ச்சி நிலையம் திறபடல்.
1927 -மகாத்மா காந்தி இலங்கை வருகை. மாத்தளை பாக்கியா வித்தியாலயத்திற்கு அடிக்கல் நாட்டுதல்.
-சம்பளம் தொழிலாளரிடம் நேரடியா வழங்கப்பட சட்டம்.
1928 -தோட்டத்தொழிலாளர் வாக்குரிமை சட்டம்
1931 -தோட்டத் தொழிலாளியின் வாக்குரிமைக்கு கட்டுப்பாடு விதிக்கப்படல்.
-அட்டன் பெரிசுந்தரம், தலவாக்கெல்லை வைத்தியலிங்கம் சட்டசபைக்கு தெரிவு.
-நடேச ஐயர் முதலாவது தொழிற்சங்கத்தைத் தொடங்குதல்
-இந்தியன் எஸ்டேட் லேபர் ஆங்கில ஏடு தொடக்கம்.
1937 -அகில இலங்கை பெரிய கங்காணிமார் சங்கம் தொடக்கம்
-நேரு இலங்கை வருகை
1939 -தோட்டப்பாடசாலையில் பாடத்திட்டம் தாய்மொழியில் நடத்தப்படல்
1940 -இலங்கை - இந்திய காங்கிரஸ் உதயம்.
-இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் ல.ச.ச. கட்சியால் உருவாக்கப்படல்
-முல்லோயா, வேலைநிறுத்தம், கோவிந்தன் படுகொலை.
1946 -பிரிட்டிஷ் பிரசைகள் 6 மாதங்களுக்கு மேல் இருப்பின் வாக்குரிமை வழங்கப்படல்.
1948 -"பிரசாவுரிமை சட்டம்". மலையக தமிழர்களின் சனநாயக கண்களை பறித்தல்.
1949 -தேர்தல் திருத்தச்சட்டம் தமிழரின் வாக்குரிமையை பறிப்பு.
1950 -இ.இ.கா., இ.தொ.கா. என பெயர்மாற்றம்.
1951 -இ.தொ.கா. பாராளுமன்றத் தேர்தல் சட்ட பகிஸ்கரிப்பு
1952 -இ.தொ.கா. சத்தியாக்கிரக போராட்டம்.
1956 -சனநாயக தொழிலாளர் காங்கிரஸ் உதயம்.
1956 -சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறுதல்
-தமிழ் மக்கள் மீதான வன்செயல்கள்.
1957 -பண்டா செல்வா ஒப்பந்தம்.
1958 -பண்டா- செல்வா ஒப்பந்தம் நிராகரிப்பு.
-வன்செயல்கள் கட்டவிழ்க்கப்படல்
1964 -மலையக தமிழர் மீதான முதலாவது அடிமை சாசனம் கைச்சாத்திடப்படல்.
1972 -காணி சீர்த்திருத்தம் மூலம் 10,000 தோட்டக் காணிகளில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம்.
-தோட்டத்துறை அரசுடமையாக்கப்பட்டது.
1974 -கடும்பஞ்சம். இலட்சக்கணக்கான மலையக தமிழர் பட்டினியால் வாடுதல், பல ஆயிரம் பேர் மடிதல்.
1977 -இரண்டாவது அடிமை சாசனம் நிறைவேற்றம்.
-டெவன் காணி சுவீகரிப்பு - சிவலெட்சுமன் கொலை.
-ஐ.தே.க. அரசாங்கத்தில் தொண்டமான் அமைச்சராதல் - கலவரத்தால் மலையகத் தமிழர் பாதிப்பு.
1979 -பயங்கரவாத தடைச் சட்டம் பிரகடனம். மலையகத்தில் வன்முறைகள்
1981 -வன்செயல்களில் மலையக தமிழர் மீது தாக்குதல்
1983 -ஜூலை வன்செயல்களால் மலையகம் எங்கும் அகதிகளாக தமிழர் விரட்டப்படுதல்
1984 -தோட்டதொழிலாளர் ஒன்றுபட்ட போராட்டம். ஆண் - பெண் சமசம்பளம் வென்றெடுக்கப்படல்
1985 -திம்பு பேச்சில் பிரசாவுரிமை கோரிக்கை
1986 -மலையக தமிழரில் 94,000 பேருக்கு குடியுரிமை வழங்க இணக்கம்.
1988 -நாடற்றவர்களுக்கான பிரசாவுரிமை சட்டம்.
1989 -மலையக மக்கள் முன்னணி உதயம்.
1992 -பெருந்தோட்டங்கள் இரகசிய பேரம் மூலம் தனியார் மயம்.
1994 -தோட்டத்துறையை 50 வருட குத்தகையில் தனியாருக்கு விற்க பொதுசன முன்னணி அரசு முடிவு.
-சந்திரசேகரன் அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினராதல்.
-10,000 ஹெக்டர் தோட்டக் காணிகள் சுவீகரிப்பு.

→20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net













# 50

# 1948-1998

50வது ஆண்டு சுதந்திரப் பொன் விழா கொண்டாட்டம் அமோகமான முறையில் நடாத்த ஏற்பாடுகள் நடாத்தப்படுகின்றன. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்கள் முழுவதும் சீரழிக்கப்பட்ட நிலையில், இருப்பதும் இழக்கப்பட்ட, அகதிகளாக, கைதிகளாக, நாடோடிகளாக, காலம் கடத்தி வருகின்றனர். ஒவ்வொரு நிமிடமும் மரண பயத்தில் மனோ பயத்தில் வாழ்ந்து வருகின்றனர். ஒட்டு மொத்தத்தில் அடிமை வாழ்வை அனுபவித்து வருகின்றார்கள்.

இந்த அடிமை சாசனத்துக்கு வயது 50. இலங்கை காலனித்துவத்துக்கு முன் தமிழ், சிங்கள அரசுகளாக இருந்த நிலையில் காலனித்துவவாதிகள் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்து பின் விட்டுவிட்டுப் போகும் போது அதிகாரத்தை சிங்கள பௌத்தர்களிடம் வழங்கி விட்டுப் போனதே வரலாறு. இந்த வரலாறுக்குத் தான் 50 வயது. சிங்கள-பௌத்த-ஆணாதிக்க-சுரண்டும் வர்க்கத்திடம் ஆட்சி கிடைக்க, அவர்களல்லாதவர்கள், அதிகாரத்துக்கு பலியாக்கப்பட்டு வந்ததற்கு தான் 50 வருடங்கள். இந்த 50 வருட காலம் என்பது ஒடுக்கு முறையின் மீது தான் வந்துள்ளது. பொன் விழா என்பது அந்த ஒடுக்கு முறையின் கரி நாளாகத் தான் தமிழ் மக்களுக்கு இருக்கப் போகிறது. வடகிழக்கெங்கும் இது வரைகாலம் பெப்ரவரி 4 என்பது ஒரு கரிநாளாகத் தான் அனுட்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த தினத்தில் அங்கு கறுப்புக்கொடிகள் பறக்கவிட்டு, சிங்கள பௌத்த அடக்குமுறையின் சின்னமான தேசியக்கொடி (சிங்கக்கொடி) எரிக்கப்பட்டு தமிழ் கீதம் இசைக்கப்பட்டு வந்திருக்கிறது. அடக்குமுறையின் அளவு கொஞ்சமும் குறைந்ததில்லை மாறாக நாளுக்கு நாள் மோசமாக்கப்பட்டு வந்து இன்று தமிழ் மக்கள் தங்கள் தலையெழுத்தை தீர்மானிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அடக்கு முறையின் உச்ச கட்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையில் 50வது சுதந்திர விழா கொண்டாடப்படுகின்றது. யாரால் யாருக்கு வழங்கப்பட்ட சுதந்திரம்? எவருக்கு கிடைத்திருக்கிற சுதந்திரம்? நிச்சயமாக தமிழ் மக்களுக்கோ அல்லது இங்கு வாழும் ஏனைய சிறபான்மை இனக் குழுமங்களுக்கோ அல்ல.

அதிகாரம் கைமாற்றப்பட்ட பின் சிங்கள பௌத்த அதிகார சக்திகள், கொடுக்கும் தரப்பாகவும் ஏனைய தரப்பினர் கையேந்தி தமதுரிமைகளைக் பிச்சை கேட்கும் தரப்பினராகவும் மாறியது. தொடர்ச்சியாக இரங்கிப் போய் கோரினர். தமது சந்தர்ப்பவாத நலன்களின் போது மட்டும் (அதாவது தமிழ் தலைமைகளினால் அரசியல் லாபம் கிடைக்கக்கூடிய நிலைகளில் மட்டும்) தமிழ்த் தலைமைகளுடன் பேச முற்படுவது வாக்குறுதிகள் வழங்குவது, ஒப்பந்தம் செய்து கொள்வது, தங்கள் நலன்கள் முடிந்ததும் தூக்கி யெறிந்து விடுவது என இவை ஒன்றும் வரலாற்றில் ஒரு முறை ஏற்பட்டதல்ல. அந்த நம்பிக்கைத் துரோகங்களின் வரலாறு நீண்டது. தமக்கான உரிமைகள் சிங்கள பௌத்த அதிகாரத் தரப்பினால் ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை என்பது ஸ்தூலமாக நிருபிக்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழ் மக்கள் தமது விடுதலையைப் பெறுவதைத் தவிர வேறு மாற்று இல்லையென்பது மீள மீள உறுதி செய்யப்பட்டு வந்திருக்கிறது. சிங்கள அதிகாரத் தரப்பினால் அடுத்தடுத்து வழங்கப்படும் எந்த உத்தரவாதத்தையும் சந்தேகிக்க, மறுக்க, எதிர்க்க, எச்சரிக்கை கொள்ள வைத்து விட்டிருக்கிறது.

இந்த 50 வருட வரலாறு என்பது சிங்கள பௌத்த சக்திகளினால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாறு தான். அது இந்த அதிகாரம் கைமாறப்பட்ட 50 வருடங்களுக்குள் மட்டுப்பட்டதல்ல. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலந்தொட்டு அந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து- தொடக்கப்பட்டாகி விட்டது. அதனை இங்கு பார்ப்போம்...

## முதலாவது நம்பிக்கைத் துரோகம்

1915ஆம் ஆண்டு இனக்கலவரம் மற்றும் அன்றைய ஆங்கிலேய அரசு அறிமுகப்படுத்த விளைந்த இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பு என்பவற்றைத் தொடர்ந்து சிங்கள தமிழ் முஸ்லிம் தலைவர்கள் ஒரு இயக்கத்தை அமைக்க முனைந்தனர். இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த இந்திய தேசிய காங்கிரஸ் போலவே இலங்கையிலும் ஒரு இயக்கத்தை அமைத்துக் கொண்டனர்.பூரண சுயாட்சிக்கான முயற்சிகளை செய்யாத இந்த அமைப்பு வெறும் சீர்திருத்தவாத கோரிக்கைகளை பெறுவதற்கூடாக தனது நோக்கங்களைத் தணித்துக் கொண்டது. இவ்வாறான சீர்திருத்தக் கோரிக்கையை முன்னெடுப்பதற்கான ஒரு இயக்கமே இவர்களுக்கு அப்போது தேவைப்பட்டிருந்தது. இவ்வமைப்பைத் தொடங்குவதற்கு முன்னர் சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டனர். யாழ்ப்பாணச் சங்கம் "தமிழ் மக்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப பிரதிநிதித்துவம்" என்ற கோரிக்கையை முன் வைத்திருந்தது. அதன்படி முடியுமானவரை தமிழ் விகிதாசாரத்திற்கிணங்க பிரதிநிதித்துவமும், மேல்மாகாணத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவமும் வழங்கப்படுவதற்கு தொழிற்படுவதாக 1918இல் இலங்கை தேசிய சங்கத்தின் சார்பில் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் இலங்கை சீர்திருத்த கழகத்தின் சார்பில் ஈ.ஜே.சமரவிக்கிரமவும் யாழ்ப்பாண சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய சேர்.பொன்.அருணாசலத்திடம் எழுத்தில் உறுதியளித்தனர்.

1919ஆம் ஆண்டுடிசம்பர் 11ஆம் திகதியன்று இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தினூடாகவே இலங்கையின் படித்த உயர் மேட்டுக்குடித் தலைவர்கள் எல்லோருமாக இலங்கைக்கான சீர்திருத்த கோரிக்கைகளை விடுத்தக் கொண்டிருந்தார்கள். இ.தே.கா.வின் முதற் தலைவராக சேர்.பொன் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால் மனிங் சீர்திருத்தத்திற்கான முயற்சிகளை ஆங்கிலேய அரசு முயன்று கொண்டிருந்தபோது தமிழ் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவதை இலங்கை தேசிய காங்கிரஸிலிருந்த தலைவர்கள் கண்மூடித்தனமாக இருப்பதைக் கண்ட அருணாசலம் முரண்படத்தொடங்கியதுடன் அதற்கெதிராகவும் நின்றார். சிங்களத் தலைவர்கள் வாக்குறுதியை மீறியதைத் தொடர்ந்து 1921ஆம் ஆண்டு அருணாசலம் இ.தே.கா.விலிருந்து வெளியேறி தமிழர் மகா சபையை அமைத்துக் கொண்டார். இதன் பின்னர் இ.தே.கா. ஒரு சிங்கள அமைப்பாகவே படிப்படியாக மாறியது. இந்த முதலாவது முறிவு தமிழ் மக்கள் தங்களைப் பற்றி தனித்து சிந்திக்க வைத்தது.

இந்த முதலாவது துரோகத்தனத்தைத் தொடர்ந்து இ.தே.கா.வினர் சமரச முயற்சிகளுக்கு முயற்சி செய்தாலும் கூட தமிழர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்த சமரச முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தன.

## தமிழ்-சிங்கள ஒப்பந்தம்

1921இல் தமிழ் தலைவர்களின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து கண்டியச் சிங்களவர்களும் (இ.தே.கா.வினரால்) ஏமாற்றப்பட்டதைத் தொடர்ந்து 1924இல் வெளியேறினர். இவ்விரு தரப்பினருடனும் ஒரு பொது உடன்பாட்டைக் காண வட்டமேசை மாநாடொன்றைக் கூட்டுவதற்கான யோசனை கொரயா அவர்களால் 1924 டிசம்பர் 9ஆம் திகதி முன்வைக்கப்பட்ட போதும் இ.தே.கா.வினருக்கும் கண்டியச்சிங்களத் தலைமைகளுக்குமிடையில் இருந்த முறுகல் நிலை காரணமாக இது உடனடியாகச் சாத்தியப்படவில்லை.1925 யூன் 28ஆம் திகதியன்று தமிழர் மகா சபைக்கும் இ.தே.கா.வினருக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் வைத்து ஒரு வட்டமேசை மாநாடு நடத்தப்பட்டது. இதன் போது தான் "சிங்கள-தமிழ் ஒப்பந்தம்" எனப்படும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன்படி

1.வடக்கு-கிழக்கு பிரதேசத்திலும், மேல் மாகாணத்திலும் வழங்கப்படும் பிரதிநிதித்துவத்தில் மூன்றில் இரண்டு பங்கு தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

2. இ.தே.க.வின் முன், வைக்கப்படும் சகல யோசனைகளையும் பாசீலிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கை 1925ஆம் ஆண்டு வருடாந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் 3வதாக இருந்தது. ஆனாலும் இவ் ஒப்பந்த விடயங்கள் அடுத்த வருடாந்த மாநாட்டுக்கு ஒத்தி போடப்பட்டது. கட்டாயமாக 1926ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் மாநாட்டில் இது முன்வைக்கப்படுமென பிரான்ஸிஸ் டி சொய்ஸாவால் கொரயாவுக்கு உறுதியளிக்கப்பட்டபோதும் அம் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் கூட இது சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. தேசிய காங்கிரசினர் நம்பிக்கைத் துரோகிகள் என தமிழ் மக்கள் கருதுவார்கள் என அப்போது 'கொரயா' வால் சொல்லப்பட்டது. அதன்படியே நடந்தது. தமிழ் தலைமை இரண்டாவது முறையும் ஏமாற்றப்பட்டார்கள். இதன் விளைவு தமிழ் அரசியல் தேசிய அரசியலிலிருந்து தனித்துச் செல்லத் தொடங்கியது.

## பண்டா-செல்வா ஒப்பந்தம்

இந்த இடைக்காலத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடந்து முடிந்திருந்தன. டொனமூர் (1931), சோல்பரி(1947) ஆகிய அரசியல் திட்டங்கள் பெயரளவில் சில ஏற்பாடுகளை செய்திருந்தபோதும் நடைமுறையில் அவை தமிழ் மக்களுக்கு எந்த பாதுகாப்பையும் அளிக்கவில்லை. டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் தான், தனிச்சிங்கள மந்திரி சபை அமைக்கப்பட்டது. இந்திய வம்சாவழி மக்களைப் பாதிக்கக் கூடிய பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதற்கிடையில் 1948இல் "சுதந்திரமும்" வழங்கப்பட்டது. சோல்பரி அரசியல் திட்டம் தொடர்ந்து (1972 குடியரசு அரசியலமைப்பு வரை) அமுலிலிருந்தது சுதந்திரம் கிடைத்ததுமே மலையகத் தமிழர்களின் உரிமை பறி போனது. 1948இல் பிரஜாவுரிமைச் சட்டத்தின் மூலம் மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்திய பாகிஸ்தானிய சட்டமும் கொண்டு வரப்பட்டது. 1952ஆம் ஆண்டு வாக்குரிமைச் சட்டம் கொண்டு வந்ததன் மூலம் இறுதியாக மலையக மக்களின் வாக்குரினமயும் பறிக்கப்பட்டது. தேசியக் கொடி அமைக்கப்பட்ட போது அது சிங்கள பௌத்தர்களின் தேசியக் கொடியாக அமைக்கப்பட்டது. விவசாய அபிவிருத்தித் திட்டம் என்ற பேரில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. இந்திய வழ்சாவழி மக்களுக்கெதிரான நாடு கடத்தும் ஒப்பந்தம் (நேரு-கொத்தலாவல-1954) செய்து கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் 1956ஆம் ஆண்டு தேர்தற் பிரச்சாரத்தின் போது ஐ.தே.க.தமது களனி மாநாட்டில் சிங்களம் மட்டும் அரச கருமமொழி தீர்மானத்தை நிறைவேற்றியது. தாம் அதனை விட தீவிர சிங்கள பௌத்தர் என்பதைக் காட்டுவதற்கு ஸ்ரீ ல.சு.க. தாம் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்தது. அதே போல் தேர்தலில் வெற்றி பெற்றதும் பண்டாரநாயக்காவால் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனை எதிர்த்து சத்தியாக்கிரகம் இருந்த தமிழரசுக் கட்சியினர் கொடூரமாக தாக்கப்பட்டு கலைக்கப்பட்டதுடன் அது கலவரத்தில் வந்து முடிந்தது. 150க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 1957 சுதந்திர பகிஷ்கரிப்பு செய்து, கறுப்புக் கொடியேற்ற முனைந்த நடராசன் எனும் இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் 1957 யூலை 20 திகதியன்று ஒரு மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கான எற்பாடுகளை செய்து கொண்டிருந்த வேளையில் தான் பண்டாரநாயக்கா தமிழ் மக்களின் எதிர்ப்பை கண்டு சமரசத்துக்கு வரத் தொடங்கினார்.

1957ஆம் ஆண்டு யூலை 27ஆம் திகதி நள்ளிரவு பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஆகியோருக்கிடையில் காணப்பட்ட இடைக்காலத்திற்கு தீர்வு தரக்கூடிய இவ் உடன்படிக்கையின் படி குறிப்பாக...

1. சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தம்

2. தேசிய சிறுபான்மை மொழியாக தமிழ் உத்தியோக அங்கீகாரம் பெறும்.

3. தமிழ் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாக இருக்கும்.

4. நாட்டில் தமிழ் மக்கள் தம் கருமங்களை தமிழில் ஆற்றவும் தமிழில் தமது பண்பாட்டை வளர்க்கும் உரிமையும் பாதுகாக்கப்படும்.

5. பிரதேச சபைகள் சட்டத்தின் மூலம் பெருமளவு "பிரதேச சுயாட்சி" மக்களுக்கு வழங்கப்படும்.

என்ற இவ்வொப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி நடாத்தவிருந்த மாபெரும் ஹர்த்தால் நிறுத்தப்பட்டது. இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டவுடன் தென்னிலங்கையில் ஆங்காங்கு தாக்குதல்கள் நடந்தன. ஒக்டோபர் 4இல் ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.ஆர்.ஜெயவர்தனா தலைமையில் கண்டிக்கு பேரினவாத யாத்திரை சென்ற போது அது இம்புல்கொடவில் வைத்து அரச சக்திகளினால் முறியடிக்கப்பட்டது. ஒன்பது மாதங்களாக இவ்வொப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதில் இழுத்தடிக்கப்பட்டது. 1958 ஏப்ரல் 8 அன்று பண்டாரநாயக்காவின் றோஸ்மீட் பிளேஸ் இல்லத்துக்கு முன் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் பிக்கு எக்ஸத் பெரமுனவைச் சேர்ந்த பிக்குமாரும் சத்தியாக்கிரகம் இருந்ததைத் தொடர்ந்து அவர்களின் முன்னால் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதுடன். ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டதாக அன்றே பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இந்த துரோகத்தனம் சிங்கள அரசாங்கத்தின் முதற் துரோகமாகவும் அமைந்தது. இவர்களை நம்பிப் பயனில்லை என்ற நிலைக்கு இது கொண்டு சென்றது. மேலும் 1957இல் "ஸ்ரீ" சட்டம் கொண்டு வரப்பட்டது. இவற்றை எதிர்த்து சாத்வீக முறையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்களைத் தொடர்ந்து 1958 இனக்கலவரம் நடந்தேறியது தமிழ் மக்களுக்கெதிரான பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. பல தமிழர்கள் இதில் கொல்லப்பட்டனர். வீடுகள் கொழுத்தப்பட்டன. அகதிகளாக்கப்பட்டனர். தமிழரசுக் கட்சி தடை செய்யப்பட்டதுடன் தொண்டர்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டனர், சுதந்திரன் பத்திரிகையும் தடை செய்யப்பட்டது.

இதற்கிடையில் பண்டாரநாயக்காவு[illegible]கு-வால் கொலைசெய்யப்பட்டு 1960 மார்ச் தோதலுக்கான ஆயத்தங்கள் நடந்தன. தமிழரசுக் கட்சி இரு பெரும் கட்சிகளிடம் நான்கம்சக் கோரிக்கைகளை முன்வைத்தது. இவ்வொப்பந்தம் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

## தமிழரசுக்கட்சி-ஸ்ரீ.ல.சு.க. உடன்படிக்கை

1.பிரதேச சபைகளை அமைத்தல், குடியேற்றங்களை நிறுத்தல், 2.தமிழ் மொழிக்கு சட்ட அந்தஸ்து, 3.பிரஜாவுரிமைச் சட்டத் திருத்தம், 4.குடியுரிமைப் பிரச்சினை தீரும் வரை 6 நியமன உறுப்பினர்களில் 4ஐ மலையகத் தமிழர்களுக்கு வழங்குவது. இவ்வாறு ஏற்றுக்கொண்ட விடயங்கள் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெற வேண்டும்.

இதனை எழுத்தில் பெற்றுக் கொண்ட டட்லி பின்னர் நிராகரித்தார்.

ஆனால் ஸ்ரீ.ல.சு.க. ஏற்றுக் கொண்டது. அக்கோரிக்கைகள் பண்டா செல்வா ஒப்பந்தத்தை ஒட்டியிருப்பதால் அதனை தாம் ஏற்பதாக சிறிமா தமது பிரதிநிதிகளின் மூலம் அறிவித்தார். இவ்வுடன்படிக்கையின்படி சிம்மாசனப் பிரசங்க[illegible]ன் போது தமிழரசுக் கட்சி எதிர்த்து வாக்களித்[illegible]த் தொடர்ந்து அரசாங்கம் பதவி விலகியது.

ல.ச.ச.க. கம்யூனிஸ்ட் கட்சி என்பவற்றுடன் சேர்ந்து ஸ்ரீ.ல.சு.க. ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்து மகாதேசாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட போதும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1960 யூலை தேர்தலுக்கு வழிவகுத்தது. தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க. வெற்றி பெற்றதும். உடன்பட்ட விடயங்களை அமுல் நடாத்துவதற்கான பேச்சுவார்த்தை பிரதமர் சிறிமாவின் தலைமையில் நடந்தது. இப்பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும் போதே எவ்வித முன்னறிவிப்புமின்றி சிங்களம் நாடு முழுவதும் நீதிமன்ற மொழியாக்குவதற்கான சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையிலான உறவு முறிவடைந்தது. இது தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாற்று சம்பவங்களில் ஒன்றாக சேர்ந்து கொண்டது.

அது மட்டுமன்றி 1961ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதும் தனிச்சிங்களச் சட்டம் பூரணமாக அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து த.க.வினால் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்கள் இராணுவம் கொண்டு அடக்கப்பட்டதுடன், அவசரகால சட்டம் போடப்பட்டு ஊரடங்குச் சட்டம் என்பவை பிறப்பிக்கப்பட்டது. பலர் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர்.


சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் (1964-10-30) கொண்டு வரப்பட்டு இந்திய வம்சாவழி மக்கள் பலாத்காரமாக நாடு கடத்தப்பட்டனர். அதே வேளை அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு ஏரிக்கரைப் பத்திரிகை மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது தமிழரசுக்கட்சி அதனை எதிர்த்து வாக்களித்ததைத் தொடர்ந்து அரசாங்கம் பதவி கவிழ்ந்தது.

## டட்லி செல்வா ஒப்பந்தம்

1965 தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடந்தன. ஸ்ரீ.ல.சு.க. வை தோற்கடிப்பதற்காக டட்லி செல்வநாயகத்துடன் ஒரு இரகசிய உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டார்.

www.tamilarangam.net






இவ்வுடன்பாட்டை அறிந்த ஸ்ரீ.ல.சு.க. "டட்லி-செல்வா இரகசிய ஒப்பந்தம்" என தேர்தற் பிரச்சாரம் செய்த டட்லி, ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்க முற்பட்டாலும் இறுதியில் தமிழரசுக் கட்சியின் ஆதரவில்லாமல் ஆட்சியமைக்க முடியாத நிலையில் ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் காட்டி ஆதரவு வேண்டியது. டட்லி பதவியேற்பதற்கு முன்தினம் (மார்ச் 24ஆம் திகதி) இவ்வுடன்படிக்கை பகிரங்கமாக கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தம் அடிப்படையில் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை ஒத்திருந்தது என்று சொல்லப்பட்டாலும் கூட இம்முறை தமிழ்மக்களின் உரிமைகள் சில விட்டுக்கொடுக்கப்பட்டன என்றே சொல்லலாம்.

1. மாகாண சபைகளை அமைப்பது, 2.வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழியை அமுலாக்குவது, 3.சிங்களக் குடியேற்றங்களைத் தடுப்பது. என்பன அடிப்படையாக இருந்தது. மொழி குறித்த விடயங்கள் விட்டுக் கொடுக்கப்பட்டதாகவே இருந்தது.

இவ்வொப்பந்தம் பிரிவினைவாதத்தின் முதற்படியென பிரச்சாரம் செய்தனர் எதிர்க் கட்சியினரும் பிக்குமாரும். அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களே நேரடியாக எதிர்க்கத் தொடங்கியதால் 1968இ[ல் ஒ]ப்பந்தம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மீண்டும் ஏமாற்றப்பட்ட நிலையில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துக்கு வழங்கி வந்த ஆதரவை வாபஸ் பெற்றது.

இதன் பின்னர் தமிழரசுக் கட்சியின் போராட்ட வீச்சும் கீழிறங்கத் தொடங்கவே மறுபுறம் தீவிர போராட்டத்தை நோக்கி இளைஞர் இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

1970ஆம் ஆண்டு சிறிமா தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்டதும்முதலில் செய்தது தரப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தியது தான். அதனைத் தொடர்ந்து 1972ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியலமைப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு இருந்த பெயரளவுப் பாதுகாப்பு கூட இல்லாது செய்யப்பட்டதுடன் சிங்கள பௌத்த கட்டமைப்புக்கு அரச அந்தஸ்து கொடுக்கப்பட்டது. இதே வேளை தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளும் ஆங்காங்கு தொடங்கின. 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடு குழப்பப்பட்டு 9 பேர் கொல்லப்பட்டனர்.

1977 பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டி ஐ.தே.க ஆட்சியிலமர்ந்ததும் நடந்த 1977 இனக் கலவரம் தமிழ் மக்களை அதிளவு பாதித்த கலவரமாக அமைந்தது. பயங்கரவாதத்தடைச் சட்டம், புலிகள் உட்பட தமிழ் இயக்கங்கள் தடை செய்யப்பட்டது. 1978 இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களின் உரிமைகள் பலவற்றைப் பறித்தது. 1981 ஆம் ஆண்டு இன்னொரு இனக் கலவரம் நாடெங்கிலும் இடம் பெற்றதில் தமிழ் மக்கள் மீண்டும் அவலங்களை அனுபவித்தார்கள். 1983 இனக்கலவரம் எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். பலர் சகலவற்றையும் இழந்து இந்தியாவுக்கு அகதிகளாகப் போய்ச் சேர்ந்தார்கள். வெலிக்கடையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

## இணைப்பு "சி" திட்டம்

இந்த நிலையில் தான் கூட்டணி-இலங்கை அரசு-இந்திய அரசு என்பவற்றின் இணக்கத்தின் அடிப்படையில் 1983 நவம்பர் 17இல் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் ஐந்து மாத கால பேச்சுவார்த்தையின் பயனாக "இணைப்பு சி" திட்டம் தயாரிக்கப்பட்டது.

இத்திட்டம் அடிப்படையில் மாகாணங்களில் இயங்கும் மாவட்ட சபைகள் கருத்துக் கணிப்பொன்றின் மூலம் இணைந்து பிராந்திய சபை உருவாக்கப்படலாம், முதலமைச்சர் ஜனாதிபதியால் நியமனம். குடியேற்றங்கள் விகிதாசாரப்படி... போன்ற விடயங்கள் அடக்கப்பட்டிருந்தன. இந்த உடன்படிக்கையை தயாரிப்பதிலும் நிர்ப்பந்திப்பதிலும் இந்திய அரசே கூடிய அக்கறை செலுத்தியிருந்தது. ஜே.ஆர்.உடனடியாக உடன்படாவிட்டாலும் வட்டமேசை மாநாட்டில் இதனை பேசுவதாகக் கூறி 1984 ஜனவரி 10இல் வட்டமேசை மாநாட்டை ஆரம்பித்தது.

இணைப்பு-ஏ:முன்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் பத்திரிகை அறிக்கைகள் அடங்கியது. இணைப்பு-பி:நிகழ்ச்சி நிரல், இணைப்பு-சி: தீர்வுகளைக் கொண்டது. மாநாட்டில் இது குறித்து பேச முன்பே எம்.ஈ.பி. அதிலிருந்து வெளியேறியது. பிரதான எதிர்க் கட்சி பெப்ரவரி 6இல் வெளிநடப்பு செய்தது. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஆதரித்த போதிலும் எதிர்ப்பின் மத்தியில் ஜே.ஆர் கூட கையெழுத்திடாத நிலையில் இது கைவிடப்பட்டது. இந்த ஏற்பாடுகள் தமிழ் தரப்பால் முன்வைக்கப்படாத போதும் தமிழ் தரப்பு பரீசிலிக்கத் தாயாராக இருந்தது. அதனை ஏற்கவும் செய்தது. ஆனால் அழைத்த தரப்பே எதிர்த்து நின்றது.

## வட்டமேசைமாநாடு

இந்தியா-இலங்கை ஆகிய அரசுகள் மேற் கொண்ட முயற்சியின் விளைவாக இரண்டாவது சபைத் திட்டம் ஒன்று வட்ட மேசை மாநாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. 1984 யூலை 23 ஜே.ஆரால் சமர்ப்பிக்கப்பட்ட இத்திட்டத்தின்படி பாராளுமன்றத்தில் 25 மாவட்டங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு இரண்டாவது சபையை அமைப்பது என்றும் இந்த சபைகளுக்கான முதலமைச்சர்களை ஜனாதிபதியே தீர்மானிப்பார் என்றும் இதனுடைய அதிகாரங்களை மாநாட்டில் தீர்மானிக்கலாம் என்றும் பேசப்பட்டது. இத்திட்டத்தையும் மாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க் கட்சிகள் யாவும் "இது தென்னிந்தியாவின் தலையீட்டை ஏற்படுத்தும் முயற்சி" என்று கூறி நிராகரித்தன. இம் முயற்சியும் கைவிடப்பட்டது.

## 1985 திம்பு மாநாடு

இந்தியாவுக்குச் சென்று கூட்டணியினர் ஒரு புறமும் ஜே.ஆர் மறுபுறமுமாக பேச்சு வார்த்தை நடாத்தியதைத் தொடர்ந்து இந்தியாவின் ஏற்பாட்டின் பேரில் பூட்டான் தலைநகரான திம்புவில் 1985 யூலை 8 அன்று ஐந்து தமிழ் இயக்கங்களும் கூட்டணியும் சேர்ந்து இலங்கை அரசின் பிரதிநிதியாக கலந்து கொண்ட ஜே.ஆரின் சகோதரர் எச்.டபிள்யு. ஜயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர். அதன்படி

1.தமிழர்களை ஒரு தனித் தேசிய இனமாக அங்கீகரித்தல்.

2. தமிழ் இனத்தின் தாயகத்தை அங்கீகரித்தல்.

3. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

4. இலங்கையிலுள்ள தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை

இக்கோரிக்கைகள் ஜே.ஆரால் நிராகரிக்கப்பட்டன. அத்துடன் இலங்கையில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் படையினரால் கொலை செய்யப்பட்ட சம்பவமும் வெளியானதைத் தொடர்ந்து தமிழ் இயக்கங்கள் வெளிநடப்பு செய்தன. பேச்சு வார்த்தையும் முறிந்தது.

## டில்லிப்பேச்சுவார்த்தை

திம்புப் பேச்சுவார்த்தை முறிவடையாமல் தொடர்வதற்காக இந்தியா தமிழ் அமைப்புகளுடன் தொடர்ந்து பேச முற்பட்ட போதும் அவை அதனை தட்டிக்கழித்தன. இதே வேளை இலங்கை அரசின் பிரதிநிதி எச்.டபிள்யு.ஜயவர்தனா இன்னொரு திட்டத்தை சமர்ப்பித்தார்.

இத்திட்டத்தின்படி வட பகுதியில் ஒரு மாகாண சபை அமைக்கப்படும். ஆனால் கிழக்கில் மாவட்ட சபைகள் அமைக்கப்படும். வட கிழக்கை துண்டாடும், குறைந்த அதிகாரங்களைக் கொண்டதுமான இந்தத் திட்டத்தை போராளி இயக்கங்கள் நிராகரித்தன. அதே வேளை கூட்டணி வடக்கு கிழக்கு மொழிவாரியாக இணைந்த சமஷ்டி வடிவில்லான மாநிலமொன்று உருவாக்குவது தொடர்பான திட்டத்தை டில்லியில் முன்வைத்தது. 1986 ஜனவரி 30இல் இத்திட்டத்தை இலங்கை அரசு முற்றாக நிராகரித்தது.

## சிதம்பரம்-ஜெயவர்தனா யோசனை

1986 ஏப்ரலில் இலங்கை வந்த இந்திய அமைச்சர் சிதம்பரம் நட்வார்சிங் ஆகியோர் ஜனாதிபதியுடனும் கூட்டணியுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியது. இதன்படி இலங்கை அரசால் உருவாக்கப்பட்டு இந்திய அரசிடம் கையளிக்கப்பட்ட திட்டத்தின சாராம்சமாக...

1. இலங்கையின் ஒற்றையாட்சிக்கும் இலங்கையின் அரசியலமைப்பு வடிவத்தக்கு உட்பட்டதாக அதிகாரப் பரவலாக்கம்.

2. வடக்கு கிழக்கு பரஸ்பரம் அக்கறையுள்ள விடயங்களில் இணைந்து செயற்படுவதற்குரிய அமைப்பு ரீதியான ஏற்பாடுகள். (இதன் உள்ளர்த்தம் வடக்கு கிழக்கு இணைப்பு இருக்காது)

இத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தை இழுபறிப்பட்டு இணக்கம் ஏற்படாத நிலையில் இறுதியில் கைவிடப்பட்டது.

## பெங்களூர்பேச்சுவார்த்தை

1986 நவம்பரில் பெங்களூரில் நடத்தப்பட்ட சார்க் மாநாட்டிற்கு சென்றிருந்த வேளை ஜே.ஆர் ராஜிவுக்கிடையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது இலங்கை அரசு முன்வைத்திருந்த மாற்று யோசனைகளின்படி கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாணங்களாகப் பிரிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது. இவ் யோசனை இணக்கம் கான்பதற்காக பிரபாகரனை அழைத்து எம்.ஜீ.ஆருடனும் ராஜிவுடன் ஜே.ஆரும் பேசிய போதும் (குறிப்பாக் வடக்கு கிழக்கு துண்டாடல்) இதில் இணக்கம் காணப்படாத நிலையில் இம் முயற்சி தோல்வியடைந்தது.

## இலங்கை-இந்திய ஒப்பந்தம்

இலங்கை அமெரிக்காவுடனான உறவை பலப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்தியாவின் கவனத்தை அதிகரித்தது. இலங்கையின் மீது சட்டரீதியான கட்டுப்பாடுகளை விதிக்க தமிழ்த் தேசியப் போராட்டத்தையும் இயக்கங்களையும் பயன்படுத்த விளைந்தது. 1987 மே 26 இல் "ஒப்பரேஷன் லிபரேஷன்" எனும் வடமராட்சித் தாக்குதலையும் பொருளாதாரத் தடையையும் விதிக்கத் தொடங்கிய போது தமிழ் பிரதேசங்களில் யுத்த விமானங்களின் மூலம் உணவுப் பொருட்களைப் போட்டு இலங்கை அரசை எச்சரிக்கை செய்ததோடு இலங்கை அரசு இந்திய அரசிடம் அடிபணிய நேரிட்டது. இதன் விளைவு இனப் பிரச்சினையை தீர்க்கத்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டது இந்தியாவைப் பொறத்தளவில் இலங்கை அரசிடமிருந்து அமெரிக்கா கால் பதிக்காத வண்ணம் இவ்வொப்பந்தத்தின் மூலம் இலங்கை அரசிடமிருந்து கையெழுத்தில் உத்தரவாதம் வாங்கிக் கொண்டதன் மூலம் அதன் நோக்கத்தை நிறைவேற்றியது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தளவில் தென்னிலங்கையில் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்க அவகாசத்தையும் வடக்கில் தமிழ் இயக்கங்களை சரணடையச் செய்வதிலும் வெற்றி கண்டது. தமிழ் இயக்கங்களைப் பொறுத்தளவில் இவ்விரு அரசுகளினதும் தலைமையிலிருந்த நபர்களை நம்பி ஆயுதங்களைக் களைந்து சரணாகதியானது. மாகாண சபையையும் ஏற்றுக் கொண்டது. தாம் ஏமாற்றப்பட்டமையை மாகாணசபை அனுபவமும் இந்திய இலங்கை அரசுகளின் நடவடிக்கைகளின் மூலமும் காலங்கடந்தே உணர்ந்தன. புலிகள் இயக்கம் இவ்வியக்கங்கள் மீது மேற்கொண்ட தடை, வேட்டையாடல் என்பன அவர்களை அரசின் விசுவாசிகளாகவும் பின் புலி எதிர்ப்பாளர்களாகவும் மாறி இறுதியில் போராட்டத்தையே விற்றுப்பிழைக்கும் துரோகமிழைக்கும் கும்பல்களாகிப் போனார்கள்.

மொத்தத்தில் இந்திய-இலங்கை அரசுகள் வெற்றி கண்டன. தமிழ் இயக்கங்கள் மண் கவ்வின.

## பிரேமதாச-புலிகள்பேச்சுவார்த்தை

இந்திய-இலங்கை உடன்படிக்கையின் மூலம் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரை, தான் ஆட்சிக்கு வந்தால் விரட்டி விடுவதாகக் கூறி ஆட்சிக்கமர்ந்த பிரேமதாசா, வடக்கில் இருந்த படையினரை தென்னிலங்கைக்கு திசை திருப்பி ஜே.வி.பி.யினரையு[ம் ஒ]ழித்துவிடக் கூடிய வகையில் போடப்பட்ட திட்ட[ம் தா]ன் புலிகள் -பிரேமதாசா பேச்சுவார்த்தை. பிரேமதாச எதிர்பார்த்தபடி இந்தியாவை ஆத்திரமூட்ட புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடாத்தி, அந்தக் காலப்பகுதிக்குள் படையினரை தென்னிலங்கக்கு வரவழைத்து ஜே.வி.பி.யினரை வேட்டையாடிக் கொன்றொழித்தது. இந்திய படையினரை விரட்டியது. இந்தியப்படையை எதிர்க்கவென பிரேமதாச, புலிகளுக்கு ஆயுதம் பணம் என்பவற்றையும் வழங்கினார்.

பிரேமதாசவுடனான பேச்சுவார்த்தையின் போது முக்கியமாக இந்தியப் படையினரை வெளியேற்றுவது, வடகிழக்கு மாகாண சபை கலைக்கப்படுவது, 6வது திருத்தச் சட்டத்தை நீக்குவது என்பவை முக்கிய கோரிக்கைகளாக இருந்தன. ஆனாலும் இக்காலப்பகுதிக்குள் புலிகள் தங்களை பலப்படுத்திக் கொள்ள சிறந்த அவகாசத்தையும் இந்தியப் படையினரை அனுப்புவதிலும் வெற்றி கண்டது. பிரேமதாசவின் நோக்கமும் நிறைவேறியது. மற்றும்படி மாகாணசபை, 6வது திருத்தச் சட்டம் எல்லாமே ஒரு எதிர்பார்ப்பின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே இரு தரப்பினரதும் நோக்கங்கள் நிறைவேறியதும் பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன புலிகள் ஆயுதத்தை கீழே போடும்வரை மாகாண சபை தேர்தல் நடக்காது என்று மிரட்டினார். இந்த 14 மாத கால பேச்சுவார்த்தை இறுதியில் 1990 மே 7 படையினரின் ஷெல் தாக்குதலினால் 12 மாணவிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து படையினருக்கும் புலிகளுக்குமிடையில் சண்டை மூண்டது. இந்தப் பேச்சுவார்த்தையைப் பொறுத்தளவில் அடிப்படையில் பிரேமதாச அரசாங்கம் கூட தனது நலன்களுக்காகவே இப்பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தியது.

## தெரிவுக்குழு

பிரேமதாசவினால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதனை அமைப்பதற்கான யோசனையைக் கொண்டு வந்திருந்த ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர் மங்கள முனசிங்கவே இதன் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய தமிழ் இயக்கங்கள் கலந்து கொண்ட இக்குழுவின் யோசனகளை எதிர்க்கட்சியும், ஏனைய சிங்கள அமைப்புகளும் பலமாக எதிர்த்து வந்ததினால், இது இரண்டு வருடங்கள் இழுதடிக்கப்பட்ட நிலையில் தமிழ் அமைப்புக்கள் ஒவ்வொன்றாக வெளியேறின. இறுதியில் இவ்வமைப்பு செயலிழந்து போனது தான் மிச்சம்.

## புலிகள்-பொ.ஐ.மு பேச்சுவார்த்தை

பிரேமதாச 1993 மே தினத்தன்று கொல்லப்பட்டதன் பின் பதவியேற்ற டி.பி.விஜேதுங்க தமிழ் மக்களுக்கெதிரான சிங்களப் பேரினவாத பிரச்சாரங்களை செய்து வந்தார். இது 1994 பொதுத் தேர்தலின் போது சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு.வுக்கு சாதகமானவற்றில் ஒன்றாக மாறியது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, பேச்சுவார்த்தை, சமாதானம் என்ற கோஷங்களுடன் பதவியிலமர்ந்த பொ.ஐ.மு புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை தொடக்கியது. இப் பேச்சுவார்த்தையின் போது முக்கியமாக அத்தியாவசியப் பிரச்சினைகள் அரசியல் பிரச்சினைகள் என்ற இரு கட்டங்கள் என்ற வகையில் அமைந்திருந்தது. இது நடந்து கொண்டிருக்கும் போதே அரசு யுத்தத்திற்கான படை சேர்ப்பு, தளபாடக் கொள்வனவு என்பவற்றைச் செய்ததுடன், உறுதி கூறியபடி பொருளாதாரத் தடைகளை முற்றாக நீக்காமல் போக்குக் காட்டியது. அரசின் இந்த அணுகு முறை குறித்து எச்சரிக்கை செய்திருந்தும் சந்திரிகா அரசாங்கம் அலட்சியமாக இருந்ததைத் தொடர்ந்து இப்பேச்சுவார்த்தையும் முறிந்தது. 1995 ஏப்ரல் 24ஆம் திகதி 3வது ஈழ யுத்தம் ஆரம்பமானது.

ஒட்டுமொத்தத்தில் நியாயமான உரிமைகளை வழங்குவது என்ற நோக்கிலல்லாமல் தமது நலன்களுக்காக மாத்திரமே பேச்சுவார்த்தை, தீர்வு முயற்சி, உடன்படிக்கை (அல்லது திணிப்பு) என்றெல்லாம் பம்மாத்து விடுவதும் அதே சந்தர்ப்பவாத நலன்களுக்காக எதிர்த்தரப்பில் இருக்கும் கட்சி ஆளுங்கட்சி கொண்டுவருவனவற்றையெல்லாம் எதிர்ப்பதும் இன்று சலித்துப்போன ஒன்று. இன்றைய நிலையில் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுவந்துள்ள தமிழ் மக்களின் மீது புறையோடிப்போயுள்ள சந்தேகங்களுக்கும், எச்சரிகைக்கும் நியாயமான காரணங்கள் உண்டு தமது கறை படிந்த கரங்கள் இன்று சுத்தமானவை தான் என்பதை நிரூபிக்கவேண்டிய வேண்டிய தார்மீக பொறுப்பும், கடமையும் அரசுக்கே உள்ளது.

கடந்த கால ஏமாற்றங்கள் ஒன்றும் நபர்களால் ஏமாற்றப்பட்டதல்ல. ஒரு பண்டாரநாயக்கவோ, ஜே.ஆரோ, பிரேமதாசவோ அல்ல இங்கு பிரச்சினை. மாறாக இந்த கட்டமைப்பே. இந்த சிங்கள பௌத்த கட்டமைப்புக்கு எவர் தல்லமை தாங்கினாலும் இது தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கப் போகிறது. இதனைக் களைவதே உண்மையில் தீர்வை உண்மையில் நேசிக்கும் சக்திகள் கடக்க வேண்டிய முன்நிபந்தனையான விடயம். இந்த 50வது சுதந்திரப் பொன்விழாவின் போதாவது சிங்களப் பௌத்தம் தன்னை மீட்டுப் பார்க்குமா? தமது குறைகளைக் களையெடுக்குமா? அல்லது சிங்கள தமிழ் மக்களின் இடைவெளி மேலும் விரிசலடைய வழிவகுக்குமா என்பதே இன்றைய கேள்வி.

-கோமதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





''உனரை வாழ்க்கையால் என்னைச் சுமைக்குள்ளாக்காதே. விரைவாக வளர்ந்து வெளியே போய்விடு''

# 47 குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே..

### பாலியல் ரீதியாக கெடுக்கும் பெற்றோர்கள்

**முதிர்ச்சியானதும், நியாயமானதுமான நடத்தையின் தேவை:** சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தம்மை தவறாக நோக்கக் கூடுமென்றோ, தம்முடன் பாலியல் ரீதியாக எதிர்வினையாற்றக் கூடுமென்றோ அறியாமல் இருக்கிறார்கள். தம்மை அறியாமலே அவர்கள் பிள்ளைகளை தம்மை நோக்கிய பாலியல் உந்துதலுக்கு உள்ளாக்குகிறார்கள். தனது மகளின் முன்னாலேயே தனது ஆடைகளையும் தகப்பன், தனது பாடசாலை வயது மகனின் முன்னால் தொடர்ந்து குளிக்கும் தாய் ஆகியோர் தமது பிள்ளைகளின் பாலியல் உணர்வுகளையும், ஆர்வத்தையும் தூண்டி விடுகிறார்கள். சில பெற்றோர்கள் தமது வளர்ந்த பிள்ளைகளை ஒரே படுக்கையில் படுக்க அனுமதிப்பதுடன் அவர்களுடன் அன்பொழுக பேசிச்சீராட்டவும், கட்டி அணைக்கவும் செய்கிறார்கள். சில பெற்றோர் பிள்ளைகளுக்கு வாயில் முத்தமிடுவதையோ, நீண்ட நேரத்துக்கு இறுகத் தழுவிக்கொள்வதையோ தப்பாக நினைப்பதில்லை. வேறு சில பெற்றோர் காதல் செய்யும் போது பாவிக்கக்கூடிய சொற்களையோ, அதற்கு இணையான சொற்களையோ பயன்படுத்தி உரையாடுகிறார்கள். சில பெற்றோர் தமது பிள்ளைகளுடன் காதலர்களைப் போல நடந்து கொள்வதுடன், அவர்களிடமிருந்தும் அப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். சில அம்மாக்கள் தமது மகன்மாருடன் நடனமாட விரும்புகிறார்கள். குளியலுடையுடன் இருக்கும் போது கூட பிள்ளைகளைக் கிள்ளுவதற்கு அவர்கள் தயங்குவதில்லை.

இத்தகைய நடத்தைகள் பிள்ளைகளது பாலியல் வளர்ச்சியைப் பாதிக்கக் கூடியவையாகும். பாலியல் ரீதியான இத்தகைய செயல்களில் ஈடுபடும் தகப்பனது பெண்பிள்ளைகள், வயதானவர்களுடன் பாலியல் உறவு வைத்திருக்கும் தன்மை கொண்டவர்களாக வளரக்கூடும். அவ்வாறே, இத்தகைய தாய்மாரின் ஆண் பிள்ளைகள் தவறான உந்துதலுக்குள்ளாவதுடன், முதிர்ச்சியடைய முன்பாக, முதிர்ச்சியற்ற விதத்தில் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும். மறுதலையாக சிலர், பெற்றோரின் தவறான செயற்பாடுகளால் பாலியல் நடவடிக்கைகளை முற்றாக தவிர்க்கவோ, ஒரு பால் உறவை நோக்கிச் செல்லவோ தூண்டப்படலாம். இத்தகைய இயல்புள்ள பெற்றோருக்கு உளவியல் வைத்தியம் அவசியமாகும்.

### நிராகரிக்கும் பெற்றோர்

**உடல் ரீதியான கைவிடலும் உணர்வு ரீதியான கைவிடலும்:-** பெரும்பாலான பெற்றோர் தமது குழந்தையை ஒரு தாய் வெறுக்கிறாள் என்பதை கற்பனை பண்ணக்கூட முடியாதவர்களாக உள்ளனர். அவர்கள் குழந்தைகள் தவறாக நடத்தப்படுவதைப்பற்றியோ அவர்கள் பெற்றோர்களால் கைவிடப்படுவது பற்றியோ வரும் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்து திடுக்கிறார்கள். உடல்ரீதியான கைவிடல் என்பது நம்பமுடியாத ஒன்றாக இருக்கிறது அவர்களுக்கு.

ஆனால், மறுதலையாக உணர்வு ரீதியான கைவிடல் என்பது பரவலாகக்காணப்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சிக்குத்தேவையான அன்பான பராமரிப்பைக் குறிப்பிடத்தக்களவு தொகையான பெற்றோர் வழங்குவதில்லை. இத்தகைய உணர்வு ரீதியான கைவிடல்கள் பல காரணங்களின் அடியாக உருவாகிறது. முதிர்ச்சியின்மை, தன் அழகின்மீதே தான் விருப்பம் கொள்ளும் இயல்பு, போதாமை, பாலியல் பாத்திரத்தை ஏற்றுக் கொள்ளாமை என்பன அவற்றில் சிலவாகும்.

உணர்வு ரீதியான நிராகரிப்புக்கு பல முகங்கள் உண்டு. இது தொடர்ச்சியான நச்சரிப்பு, திருத்தமான வேலைக்கான வற்புறுத்தல் போன்றவற்றாலும் அக்கறையின்மை, பிரிந்திருத்தல் என்பவற்றாலும் வெளித்தெரியலாம். இது அளவு மீறிய அக்கறை, ஆகக்கூடிய பராமரிப்பு என்பவற்றை மறுப்பதாலும் ஏற்படக்கூடும்.

நிராகரிக்கப்படும் சிறுவர்கள் தமது பெற்றோரிடமிருந்து நோய்க் கூறான செய்தி ஒன்றைப் பெறுகிறார்கள். இத்தகைய பெற்றோர்கள் குழந்தைத்தனம், சிறுபிள்ளைத்தனம் என்பவற்றிலிருந்து விடுபட்டிருப்பதன் மூலம் சந்தோசமாகவும் கடப்பாடற்றும் இருக்கலாம் என்று, நினைக்கிறார்கள். அவர்கள் தமது குழந்தைகட்கு உணவூட்டுவதை ஒரு கடமையாகச் செய்கிறார்கள். அவர்களை கழிவறைப் பழக்கத்துக்கு அவசர அவசரமாக பயிற்றுவிக்க விரும்புகிறார்கள். தாமே கொண்டிராத பொறுப்புணர்ச்சியை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். விரைவாகவே அவர்களை - முதிர்ச்சியடைய முன்பாகவே - சுதந்திரமாக விடுகிறார்கள். இதன்மூலம் பிள்ளைகளை தவறிழைப்போமோ, விமர்சிக்கப் படுவோமோ என்ற பயத்தின் ஆளுகைக்கு உட்படுத்தி விடுகிறார்கள். இதனால் பிள்ளைகள் எப்போதும் குற்றச்சாட்டையும், கண்டனத்தையும் எதிர்பார்க்கிறார்கள். எனவே எப்போதும் தம்மைத் தற்பாதுகாப்பதற்கான தொகையான விவாதத்துக்கு அவர்கள் தம்மைத் தயாராக வைத்திருக்கத் தொடங்குகிறார்கள். தாம் எப்போதும் ஒரு நீதிமன்றத்தில் நிற்பதுபோலவும், எப்போதும் தாம் தம்மை நியாயப்படுத்த வேண்டும் என்பது போலவும் அவர்கள் உணர்கிறார்கள். கடந்த காலத்திய தமது 'பாவங்களை' தொடர்ந்து செய்யக்கூடாது என்பதிலும் எதிர்காலத்தில் வரக்கூடிய அபாயங்களுக்காகவும் அவர்கள் தயங்குகிறார்கள். இதனால் நிகழ்காலக் குறிக்கோள்களை சிறப்பாக நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறார்கள்.

தொடர்ச்சியான பயமும், தற்பாதுகாப்பு உணர்வும் குடிகொண்டுள்ள தன்மையானது பிள்ளைகளை உணர்வுரீதியாக களைத்துப்போகச் செய்வதுடன், உடல்ரீதியாக சோர்வடையவும் வைத்துவிடுகிறது. இத்தகைய குழந்தைகள் கொஞ்சமாவது சந்தோசத்தை அடைய வேண்டும் என்றால், இக் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் நிபுணத்துவ உதவி அவசியமாகும்.

## குழந்தைகளைப் பாதிக்கும் பால் ரீதியான நடவடிக்கைகள் !

டொக்டர் ஜெயிம் ஜீ ஜீனோல்ட்
தமிழில்: அருண்



அடுத்த இதழில் முடியும்

---

## தனிமை இரக்கம்:
# வாழ்வின் மீதான துயரக்கவிதை

01. **போ**ர்வையை உதறி
தலையிறுக்கி
பிரித்து, இமை தள்ளி
விழி மூடும்
முன் இருளில்
எங்கெனத் தேடி
வெறு நிலமாயிற்றே போ!
இந் நிலமென்று துயர
ஒரு - பிரிவு வந்தது.

02. நெஞ்சத்திடை தீய,
பிரிவின் தேவதை
நிர்வாண நாட்டியச் சோடணை செய்தே
வானுக்கும் மீனுக்குமிடையே
சிறகு விரித்தாள்.
காட்டு வாசப் புல்
மழைச் சப்தம்
பிறகும் பல
இருளில் குலாவி எழ
என்னில் - ஓரிமை
ராக்கடந்த பொழுதில்
அவள்.

03. பனி வெளிக்கும்
பாவங்களுக்குமப்பால்
வாலிபக் கோலமாய் கசங்கி எழுந்த
பின்னான வேளை:
தேடிக் கண்களென் நீரிற் கரைந்தும்
நூற்றறு நிமிசங்கள்
இணை பிரிந்து இடை வெளியாயிற்று.

04. என் துக்கத்தின்
கரிய மேலாடை மீது சத்தியமாக
நானோர்
துயரத்தின் அடையாளப் பெட்டகம்.
காற்றில் கலைந்த துயரோடும்
மென் கருணை அபிநயத்தோடும்
அங்கந்த
நிழலூட்டிப் பூங்கந்தில்
இரு பறவைகள் பூத்து நிற்பதேன் ?

05. முன்னோர்,
ஏகாந்தப் பெரு நீல வெளிமீது
இரு பறவைகாள் !
நாம் பூத்து நின்றோம்.
கொந்தளித்தெழு கண்களை
ஒன்றையொன்று தழுவித் துடைத்தோம்.!

06. தூய அலைகளிலே வளிதலித்து
தேஷம் -
அவனுக்கோர்
முட்கிரீடமும் முகமூடியும்
அனுப்பி வைத்தது.
நானோ,
தமிழுக்கும் சிங்களத்திற்குமிடையேயான
நிழற்றிட்டில்
தனித்து விடப்பட்ட இறகானேன்.

1997.06.10

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கினி அவி சக கினி கெலி: சிங்கள சினிமாவின் எதிர்காலம் ?

-ரஜீசன்




திவயினவில் அனுர ஹொராயசினால் தொடராக எழுதப்பட்டு நாவலாக்கப்பட்டதை அடிப்படையாகக்கொண்டு, உதயகாந்த வர்ணசூரியவினால் திரைக்கதை எழுதி நெறியாளப்பட்டு, இவ்வருடத்தின் முதல் சிங்கள சினிமா வெளியீடாக இத்திரைப்படம் வெளி வந்துள்ளது. இலங்கை சுதந்திரமடைந்து 50 வது வருடத்தை கொண்டாடும் வேளையில் அதன் அரசியலில் இரண்டறக்கலந்துவிட்ட வன்முறைக் கலாசாரத்தையும், குண்டர்களின் அரசியல் பிரவேசத்தையும், அப் பிரவேசம் தலைமைப்பீடம் வரை வளர்ந்ததற்கான சூழ்நிலைகளின் வளர்ச்சிப்படிகளினையும் பற்றி இச்சினிமா பேசுகின்றது. ஆயினும் இத்தகைய முக்கியமான அரசியலைப்பேசும் போது ஆழமாகக் கவனிக்கப்படவேண்டிய அம்சங்கள் சில இப்படத்தில் இல்லையெனலாம். அல்லது வேணுமென்றே மறக்கப்பட்டதாகவும் கொள்ளலாம்.

கசிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றதுன்முள்ள பத்மே (ஜக்சன் அந்தனி) பொலிசாரினால் கைது செய்யப்படுகின்றான். பின் உள்ளூர் அரசியல்வாதியினால் விடுவிக்கப்படும் பத்மே தொடர்ந்து தன் வியாபாரத்தை செய்யும் போது இன்னொரு ஊர் சண்டியனான லோகயாவின் (சிறியந்த மென்டிஸ்) போதைப்பொருள் வியாபாரத்தினால் இடைஞ்சலிற்குட்பட பத்மேயும், ரம்போ எனும் இன்னொரு குண்டனும் சேர்ந்து லோகயாவினைக் கொல்கின்றனர். இதற்கிடையில் நகர சபைத்தேர்தல் வருகிறது. ஜயசூரிய எனும் அரசியல்வாதியின் கைக்கூலியாக பத்மே நியமிக்கப்பட்டு அவருக்கான பாதாள உதவிகளைச்செய்யும் போது ஜயசூரியவின் எதிரியான சொய்சாவின் கைக்கூலிகளுடன் மோதல் ஏற்படுகின்றது. இரு பக்கமும் பலர் கொலையாக, பத்மேயின் செல்வாக்கு உயர்ந்து அரசியல் கட்சியின் தலைவருடன் மிக நெருக்கமாகின்றான். பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த பத்மே பெரும் அரசியல் பிரமுகராகின்றான். நகரின் பல அபிவிருத்தி 'கான்ராக்கு'கள் அவனின் கைக்குச் செல்கின்றன. இறுதியில் எதிர் அரசியல் கட்சியின் சதியால் பத்மே கொல்லப்பட, அடுத்தது உங்களின் தெரிவு எனும் ரீதியில் கூறி படம் நிறைவடைகின்றது.

மக்களை அச்சுறுத்தி பயப்படுத்தி வைத்திருக்கும் ஒரு ஊர்ச்சண்டியன் அரசியல் பிரமுகராகுவதும், அவனால் மேற்கொள்ளப்படும படுகொலைகளும் எமக்கு கடந்த கால அரசுகளினதும், இன்றைய அரசினதும் செயல்களை ஞாபகப்படுத்துகின்றன. இலங்கையின் எல்லா அரசாங்கங்களும் தமது அடக்கு முறையைத் திணிப்பதற்கும், தமக்கு எதிரான அரசியல் போக்குகளை பலாத்காரமாக தடுப்பதற்கும் பாதாள கோஷ்டிகளையும், குண்டர்களையும் பயன்படுத்தியமை, பயன்படுத்தி வருகின்றமை தெரிந்த விடயம். சொத்தி உபாலி, களு மாத்தயா போன்றவர்களை பிரமுகர்களாக்கியதும், இன்று வடக்கு, கிழக்கில் தமிழ் கட்சிகளின் மூலம் போலி அரசியல் தலைமையை தோற்றுவிக்க முயல்வதும் இதன் வழி ஒற்றியதே. இந்நபர்கள். ஒன்று மக்களால் வெறுக்கப்படுபவர்களாக, அல்லது மக்கள் பயப்படும் நபர்களாக இருப்பர். அரசாங்கங்கள் மட்டுமன்றி அதன் இராணுவமும் இத்தகையவர்களை வளர்த்து விடுவதில் சளைத்ததல்ல. கிழக்கில் நேற்றைய 'கப்டன் முனாசு'ம், இன்றைய 'ராசிக்'கும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

'கினி அவி சஹ கினி கெலி'யில் ஒரு காட்சி வருகின்றது. பொலிசாரினால் முதலில் வெறுக்கப்படும் பத்மேயிற்கு பின் அவர்களாலேயே ஆயுதப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. இன்னொரு காட்சியில் சண்டியனாக அடையாளப்படுத்தி செய்தி வெளியிட்ட பத்திரிகைகள் பின் அவனை தலைவனாக்கி மகிழ்வுற்று வாழ்த்துகின்றன. (இதன் போது லேக்ஹவுஸ் நிறுவனத்தை காட்டுவது நல்ல பொருத்தம்!) இதன்மூலம் தான் எத்தரப்புடனும் சமரசம் செய்யவில்லையென காட்ட இப்படம் முயல்கிறது. ஆனால் வன்முறை கலாசாரம் தோன்றுவதற்கும், பரவுவதிற்கும் காரணமான விடயங்களைக் காட்டும் போது மிக முக்கியமான ஒரு உண்மை காட்டப்படாததே இப்படத்தின் மிகப்பெரிய தவறாகின்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்துக் கொண்டால் குண்டர் கலாசாரம் அறிமுகப்படுத்தப்படுவது, தமிழ் மக்கள் மீது இனவெறி அடக்குமுறைகளை பிரயோகிக்க தொடங்கும் போதே. இதுவே அதன் ஆரம்பகட்டம், இதில் ருசிகண்ட சிங்கள அரசியல்வாதிகளாலேயே பின் தெற்கிலும் இக்கலாசாரம வளர்க்கப்பட்டது. தமிழர் மீதான அடக்குமுறையின் போதுதான் குண்டர்களின் செயற்பாடுகள் நிறுவனமயப்படுத்தப்பட்டது. இந்நிறுவனமயமாக்கலின் இன்னொரு வடிவமாக இராணுவம் கட்டி எழுப்பப்பட்டது. ஆனால் இங்கு இப்படம் இதுபற்றி எதுவுமே ஆகக் குறைந்தது பாத்திர அமைப்பு ரீதியில் காட்டப்படவில்லை. வன்முறைக் கலாசாரம் அரசியலில் கலந்தது பற்றிப்பேசும் படத்தில் இது இடம் பெறாதது கவனிக்கப் படவேண்டிய விடயமாகின்றது.

அத்துடன் இப்படம் முழுதும் பொலிசாரின் நடவடிக்கைகளே காட்டப்படுகின்றன. இராணுவத்தின் செயற்பாடுகள் காட்டப்படவேயில்லை. மோசமான சமூக, அரசியல் சூழ்நிலையை தோற்றுவிக்கக் காரணமாக இருந்த இராணுவத்தின் பெரும்பங்கு காட்டப்படாதது. இன்றைய யுத்தத்தில் தியாக புருஷர்களாக இருக்கும் அவர்களை எவ்விதத்திலும் அவமதிக்கக்கூடாது என தென்னிலங்கையில் பரவி நிற்கும் பக்கச்சார்பான மனநிலையின் வெளிப்பாடாகவே கருதவேண்டி உள்ளது. மற்றும் ஜே.வி.பியினர் பற்றிக்கூட எதுவும் இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு சினிமா தரமான, ரசிப்புத்தன்மை மேலோங்கியதாக இருக்கக்காரணமான இரு அடிப்படை விடயங்களான அதன் அரசியலும், அதைச்சொல்லும் அழகியலும் அமைகின்றன. இங்கு இதன் அரசியல் கேள்விக்குள்ளாவதுடன், அழகியல் என்பது முற்றிலும் இல்லாத ஒன்றாகவே காணப்படுகின்றது. இதனால் சாதாரண விவரணப் படம் ஒன்றை, படுகொலைகளை செய்வது எப்படி எனும் விவரணத்தை பார்ப்பது போன்ற உணர்வையே இது தருகின்றது. ரசிகனை உணர்வுபூர்வமாக ஒன்றிடச் செய்ய முடியாது உள்ளது.

இன்னொரு அவதானத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். சிங்கள சினிமா தொடங்கி 50 வருடம் நிறைவடைந்த வேளையில் பழம் பெரும், திறமை மிக்க இயக்குனர்களான லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ், தர்மசேன பத்திராஜ போன்றவர்களிடம் இருந்து இச்சினிமா இளைய தலைமுறை ஒன்றுக்கு கையளிக்கப்படும் நிகழ்வே இது. ''சிஹினதேசயென்'' இயக்கிய விஸ்வநாத் புத்திகவும், கினி அவி சஹ கினி கெலி இயக்கிய உதயகாந்த வர்ணசூரியவும் புதிய தலைமுறை இயக்குனர்களாகும். எனினும் பல நல்லதரமான படங்களை தந்துபோன பழைய தலைமுறையினர் தந்த நம்பிக்கையை இவர்களால் தர முடியுமா என்பது கேள்விக்குறியாகவே அமைகின்றது.

# இலத்திரனியல் சாதனங்களில் பெண் சித்திரிப்பு

ரத்ணா

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் ஜனவரி 21, அன்று பால் நிலை சமத்துவ விழிப்பூட்டல் கருத்தரங்கொன்றை நடாத்தியது. இலத்திரனியல் ஊடகங்களில் பெண்கள் எவ்வளவு தூரம் அசமத்துவமாகவும், இழிந்த நிலைகளிலும் சித்திரிக்கப்படுகின்றனர் என்பது தொடர்பான விழிப்பூட்டலை ஏற்படுத்துவதே கருத்தரங்கின் நோக்கமாகும். இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பான ஒழுக்கக் கோவை ஒன்றை, இலத்திரனியல் ஊடகப் பணியாளர்களுக்கென தயாரிக்கும் நோக்கத்தின் அடிப்படையில், இந்நிறுவனத்தால் 97 ஜனவரி மாதத்தில் தொடக்கப்பட்ட இத்திட்டம் மூன்று கட்டங்களாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. முதலாவது, ஆய்வாளர்கள் குழுவைத் தெரிந்தெடுக்கும் கட்டம். இரண்டாவது, ஆய்வாளர்கள் ஆவண ஆய்வில் ஈடுபடும் கட்டம். மூன்றாவது ஒழுக்கக் கோவை தயாரிப்பு கட்டம். தற்போது இச் செயற்திட்டம் மூன்றாவது கட்டத்தில் உள்ளது.

இலத்திரனியல் ஊடகங்களில் தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான அனைத்து தமிழ் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாக கருத்தரங்கு ஒழுங்கமைப்பாளர்கள் குறிப்பிட்டனர். எனினும், எம்.ரி.வி. தனியார் தொலைக்காட்சியைச் சேர்ந்த தமிழ் நிகழ்சசிகளுக்குப் பொறுப்பான எழில்வேந்தன் அவர்களும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த யமுனா சர்வானந்தா அவர்களுமே கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் இடம்பெற்ற இக்கருத்தரங்கு, ஆங்காங்கே பெண்ணிலைவாதிகளும், சமூகப் பிரக்ஞை கொண்டோரும் முன்வைக்கும் ' அனைத்து ஊடகங்களிலும், அரசியல், பொருளாதார, கலாசார விடயங்களில் பெண்கள் இழிந்த நிலையிலேயே சித்திரிக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஆதரவான ஒரு கருத்தாக்கத்தை உருவாக்குவதன் முதல்படியாக அமைந்ததெனலாம். பலராலும், பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இலத்திரனியல் ஊடகங்களில் பெண்கள் பாலியல் பண்டங்களாகவும், பழமைக்கும், பின்தங்கிய கலாசார நடவடிக்கைகளுக்கும் துணை நிற்போராகவும், பலவீனமானோராகவும் சித்திரிக்கப்பட்டு வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். மாற்று நிகழ்ச்சிகளாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் ஒரு சில நிகழ்ச்சிகளிலும் இத்தன்மை மறைமுகமாக வெளிக்கிளம்புவதும் சுட்டிக் காட்டப்பட வேண்டியது.

தற்போது மிகப் பிரபலமாக இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருக்கும் மியூசிக் டி.வி , சுவர்ணவாஹியில் சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு ஒளிபரப்பாகும் வானவில் எனும் பாடல் தொகுப்பு நிகழ்ச்சி என்பன முறையே ஆபாசத்திற்கும், பெண்கள் சமையலறைக்குரியவர்கள் என்பதற்கும்; மறைமுகமான ஆணாதிக்க திணிப்புக்கும் உதாரணங்களாக உள்ளன.

இந்த அடிப்படையில் செல்வி திருச்சந்திரனின் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் 1.4.97 தொடக்கம் 30.6.97 வரை சண்தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், ரூபவாஹினி செய்தி அறிக்கைகளிலும், இலத்திரனியல் ஊடகங்கள் முழுவதிலும் இடம்பெற்ற விளம்பரங்களிலும் காணப்படும் பால் நிலை அசமத்துவத்தை கள ஆய்வாளர்களான பிரபா தேவராஜா, வாசுகி சோமசேகரம் ஆகியோர் முன் வைத்தனர். இவர்களது கள ஆய்வுகள் வீடியோ தொகுப்புகளாக கலந்து கொண்டோருக்குக் காண்பிக்கப்பட்டது.

'தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒரு கண்ணோட்டம்' என்ற தொனிப் பொருளில் அமிர்தநாயகம் நிக்ஸன், 'கலாசாரத் தடைகளும், தொடர்பு சாதனங்களில் அவற்றின் பிரதிபலிப்புகளும்' என்ற தொனிப்பொருளில் ஷிராணி மில்சும் உரையாற்றினர். இவ் உரைகள் யாவும் இலத்திரனியல் ஊடாகங்களில் பெண்களின் இழிந்த நிலை சித்திரிப்புகளையே வெளிக்காட்டின. பிரபா தேவராஜாவினதும் வாசுகி சோமசுந்தரத்தினதும் முயற்சி பாராட்டத்தக்கது. எனினும் இன்னும் கூடுதலாக கவனத்தைப் செலுத்திக் கட்டுரையை வடிவமைத்திருக்கலாம்.

பெரும்பாலும் இலங்கை தொலைக் காட்சிகளில் தமிழ் நிகழ்ச்சிகள் எனும் போது தென்னிந்திய திரைப்படங்களும், திரைப்பாடல்களும், ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. தென்னிந்திய திரைப்படங்கள் கதையை நம்பியன்றி பெண்களின் சதையை நம்பியே உள்ளன. இது தொடர்பான எதிர்ப் புணர்வுகள், தென்னிந்தியாவிலும் ஆங்காங்கே பல்வேறு ஊடக, பெண்கள் அமைப்புகள் மூலம் எழுப்பப்பட்டு வந்துள்ளன, வருகின்றன.

அதேபோல் விளம்பரங்களும் யதார்த்தச் சித்திரிப்பு என்கிற பேரில் பெண்களை இரண்டாம் நிலைப் படுத்தியே விளம்பர முகவர்களால் தயாரிக்கப்படுகின்றன. தொடர்பூடக அதிகாரிகள் இவற்றினை கட்டுப் படுத்துவதில் உள்ள சாத்தியப்பாடு ஐயத்திற்கிடமானதே. விளம்பரத் தயாரிப்பில் முற்போக்கான பெண்கள் ஆதிக்கம் செலுத்துவது பால் அசமத்துவமான விளம்பரங்களைத் தயாரிப்பதைத் தவிர்க்க உதவக் கூடும்.
குறிப்பாக, அதிகாரம் எதுவுமற்ற அதிகாரிகள் ஒழுக்க கோவைகளை பெற்றுக் கொண்டு பெண்களுக்கெதிரான இந்த இழிந்த தன்மைகளை நீக்க முற்படுவார்களா? கருத்தரங்கில் பங்கேற்றவர்களின் குறைவான எண்ணிக்கை தொடர்பூடகங்களில் ஏற்படுத்தும் தாக்கம் தான் என்ன? என்பனவும் எழும் கேள்விகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாயத்திலிருந்து விடுபட்டு வாழ்வுடன் ஒன்ற வைக்கிறது வீதி நாடகம்

---வீதி நாடகக் கலைஞர் **தீபானி சில்வா**

தமிழில் - ரத்னா

*துன்பப்படும் மனிதர்களுக்கிடையில் சென்று, அவர்களது கலாரசனையை விரிவுபடுத்த எந்நேரமும் முயற்சிக்கும் ''திறந்த வீதி நாடகக் குழு''வின் ஆரம்ப கால உறுப்பினரான தீபானி சில்வா, 23 வருடங்களாக வீதியில் பலதரப்பட்ட பாத்திரங்களை ஏற்றவர். வீதியில் மட்டும் சிறைப்படாமல், தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம், திரைப்படத்துறை எனப் பல துறைகளில் தடம்பதித்து தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.*

*1997 OCIC திரைப்படத்துறையினருக்கான விருது வழங்கல் விழாவில், ''துன்வெனி எஹ'' திரைப்படத்தின் சிறந்த துணை நடிகைக்கான விருதைப் பெற்றுக்கொண்டார். தற்போதைய பொ.ஐ.மு. அரசாங்கம் பதவியேற உதவிய சுதந்திர கலை அமைப்பின் ஆரம்பகால உறுப்பினரான தீபானி, தமது நோக்கங்கள், எதிர்பார்ப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக சிதைந்து வருவதாக குறிப்பிட்டார்.*

***நீங்கள் எவ்வாறு முதன் முதல் கலைத் துறையில் ஈடுபட்டீர்கள்?***

நான் முதன்முதல் ஜாகொடவின் நாடகக்குழுவின் மூலமாக கலை செயற்பாடுகளில் ஈடுபட்டேன். பாடசாலைக் கல்வி முடிந்தவுடன் ஏதாவது பிரயோசனமான வேலைகளில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நாடகங்களில் ஈடுபட நேர்ந்தது. அச்சந்தர்ப்பத்தில் காமினி ஹத்தட்டுவேகம நாட்டியம் தொடர்பான பயிற்சிக் கல்லூரியில் சேவை புரிந்து கொண்டிருந்தார். அச் சந்தர்ப்பத்தில் அவரால் சொந்த வீதி நாடகக் குழுவொன்றும் கட்டியெழுப்பப்பட்டுக்கொண்டிருந்தது. 1975ல் நானும் அக் குழுவில் பங்கேற்றேன்.

நாடகப்பயிற்சி மண்டபத்தில் பயிற்சிகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில், காமினி ஹத்தட்டுவேகம என் நடிப்பைக் கவனித்துள்ளார். எனது நடிப்பில் சுதந்திரத் தன்மை காணப்படுவதாகக் கூறி வீதி நாடகங்களில் பங்கேற்குமாறு என்னை அழைத்தார். உண்மையில் அவ் அழைப்பை ஏற்கும் சந்தர்ப்பத்தில் கூட வீதி நாடகம் தொடர்பாக நான் எதையுமே அறிந்திருக்கவில்லை. அக்காலத்தில் வீதி நாடகக் குழுவில் பராக்கிரம நிரியெல்ல, எச்.ஏ. பெரேரா போன்றோரும் அங்கம் வகித்திருந்தனர். அதன்பின், ஹத்தட்டுவேகம அவர்கள் பாஸ்கு நாடகத்தை இயக்கினார். எனது முதல் நடிப்பும் அதுவே. அந்நாடகம் பௌத்தாலோக்க மாவத்தையில் உள்ள கற்கோயிலில் அரங்கேறியது. வீதி நாடகத்தின் ஓர் கொண்டாட்டத்திற்காக தம்புள்ளை செல்ல தீர்மானித்ததும் அச் சந்தர்ப்பத்தில் தான். நானும் ,அறியாத பல விடயங்களுடன் செல்ல முனைந்தேன். குறிப்பிட்ட அந்நாடகத்தில் நடிக்கவிருந்த நடிகை சுகவீனம் காரணமாக சமூகமளிக்காததால் அப்பாத்திரம் என்னை வந்தடைந்தது. தம்புள்ளை செல்வதற்கு முன்னர், 'லயனல் வென்ட்'ல் என்னை பயிற்றுவித்தனர். பராக்கிரம நிரியெல்ல, நிமல் சந்திரசிறி, எச்.ஏ. பெரேரா ஆகியோர் என்னை பயிற்றுவித்தனர். மறுநாள் தம்புள்ளையில், நடுப்பகல் வேளையில் வீதி நாடகம் ஆரம்பமானது. மனதில் பயமிருந்தாலும் அந்நிகழ்வு எனக்கு பல அனுபவங்களைக் கற்றுத்தந்தது. முதலில் 'இது என்ன புதுமையான நாடகம், மக்கள் விருப்புடன் ரசிக்கின்றனர், காசும் பெற்றுக்கொள்வதில்லை' என்று ஆச்சரியமாகவிருந்தது. இவ்வண்ணமே எனது கலைப்பயணம் தொடங்கிற்று.

***உலக நாடக முன்னேற்றத்தின் ஒரு அங்கமாக' இலங்கையில் வீதி நாடகங்கள் 1974ல் ஆரம்பமாகின என்பதனை ஏற்றுக்கொள்வீர்களா?***

உலக நாடக முன்னேற்றம் எவ்வாறாயினும், அன்றைய காலகட்டத்தில் காணப்பட்ட ஒரு சில நெருக்கடித் தன்மையே இலங்கையில் வீதி நாடகத்தின் வளர்ச்சிக்கு உதவியது. இவ் ஊடகம் மக்களைச் சென்றடையும் என நாடகவியலாளர்கள் பெரிதும் . நம்பினர். வேறு நாடுகளிலும் இவ்வளர்ச்சியைக் கண்ணுறலாம். பராக்கிரம நிரியெல்ல வீதி நாடகங்கள் பற்றி அறிந்து கொண்டு ஆர்வத்துடன் தொழிற்படத் தொடங்கினார். அந் நடவடிக்கைக்குரிய நபர் ஹத்தட்டுவேகமவே என அவர் எண்ணியிருந்தார். இவர்கள் இருவரும் ஒன்றிணைந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்கத்தொடங்கினர்.

***வீதி நாடகத்தின் தோற்றம், இலங்கையின் சமூக அமைப்புக்கு அவசியமானது எனக் கருதின், 1971 இளைஞர் கிளர்ச்சி போன்ற சமூக அரசியல் விடயங்களும் இதற்கு காரணமாக அமைகின்றதல்லவா?***

ஆம், அக்காலத்தில் நிலவிய பொருளாதாரப் பின்னணியின் கீழ் வீதி நாடகத்தின் தேவை அதிகரித்தது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

***நீங்கள் சுமார் 23 வருடகாலமாக கலைத் துறையில் ஈடுபட்டு வருகிறீர்கள். மேடை யிலும், வீதி நாடகத்திலும் நீங்கள் காணும் வேறுபாடு?***

உண்மையில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. பிரதானமான விடயம் ,வீதி நாடகத்தை ரசிக்க பணம் அறிவிடப்படாமை, பெரியோர், சிறியோர் அனைவரும் சரிசமமாக இரசிக்க முடிந்தமை. மேடை நாடகத்தை விட வீதிநாடகம் சுதந்திரமானது. வீதியில், ஒளி போன்ற ஆடம்பர அலங்காரங்கள் இல்லை. மாயத்திலிருந்து விடுபட்ட நிலை, வாழ்வுடன் ஒன்றிய நிலை வீதி நாடகம். இவை தாம் பிரதான வேறுபாடு.



சட்டத்தரணி நிமல்கா பிரணாந்துவுடன் தீபானி சில்வா தொடர்பூடக சுதந்திரத்திரத்தின் மீதான அடக்குமுறைகளுக்கெதிரான ஆர்ப்பாட்டமொன்றின் போது.

***நீங்கள் அங்கத்துவம் வகிக்கும் வீதிநாடகக் குழுவின் மூலம் மக்களுக்கு சிறந்த சேவை வழங்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும், இன்று உங்கள் குழுவைப்பலரும் விமர்சனத்துக் குட்படுத்துகின்றார்கள். வீதி நாடகம் ஒரே போக்கைக்கொண்டிருக்கின்றது என்பது பிரதான குற்றச்சாட்டு. மேலும், வீதி நாடகம் வீதியிலிருந்து விலகி உள்ளதென்றும் குறிப்பிடுகின்றனர். இது பற்றிய உங்கள் கருத்து?***

வீதி நாடகக் குழுவில் இருப்பவர்கள் அவ்வாறு கூறவில்லை எனலாம். நானும் அக்குற்றச் சாட்டுதல்களை ஏற்றுக்கொள்ளமாட்டேன். நாம் இன்னும் வீதி நாடகத்தை காண்பித்து வருகின்றோம். அவற்றை கண்டு கழித்து எங்களை அரவணைத்து கொள்ளும் மனிதர்களும் உள்ளனர். மாதத்துக்கு ஏழு, எட்டு வீதி நாடகங்கள் இடமபெறுகின்றன. இதுவே வீதி நாடகத்தின் நிலைமையை விளக்குமல்லவா?

***காட்சி அமைப்புகள் எவ்வாறிருப்பினும், தயாரிப்பு, இயக்கம் ரீதியில் ஏதேனும் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதா?***

தயாரிப்பு, இயக்கம் ஆகியவற்றில் குறைகள் ஏதும் தென்படவில்லை. நாடகம் காண்பிக்க வேண்டும் என்பதற்காக அதனை கடமைக்காகச் செய்ய முடியாது. நாடகத்தயாரிப்பு என்பது ஒரு பொருளல்லவே. தேவைக்கேற்ப நாடகத் தயாரிப்புகளை மேற்கொள்கின்றோம்.

ஒரே தயாரிப்புகளை மேற்கொள்கின்றீர்கள் என எவராவது குறிப்பிடின் அதையும் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஒரே தயாரிப்பாயினும் நாம் வெவ்வேறு மாற்றங்களின் அடிப்படையில் அவற்றை முன் வைக்கிறோம். நாம் முதல் காலங்களில் காட்டிய ''ரஜதெக்ம'' நாடகத்தை வெவ்வேறு அரசியல், பொருளாதார மாற்றங்களின் கீழ் தற்போதும் காண்பிக்கின்றோம். சிறு சிறு வேறுபாடுகளின் கீழ் நிலவும் சமூக யதார்த்தத்தை தெளிவுபடுத்த முடியும். எமது நாடகம் ஒரே இடத்தில் எப்போதும் குவிவடைவதில்லை.

***இன்று பல இளைஞர் குழுக்கள் ஒன்றி ணைந்து வீதி நாடகங்களை நிகழ்த்தி வருகின்றனர். இது பற்றி உங்கள் அபிப் பிராயம் என்ன?***

முன்னோடி வீதி நாடகப்பங்காளர் என்ற ரீதியில் எனக்கு அது சந்தோஷமான விடயமாகும். இன்று வீதி நாடகம் தொடர்பான அக்கறை அதிகரித்துள்ளது. அதன்மூலம் தத்தமது பிரச்சினைகளை வெளிப்படுத்த அவர்கள் முயற்சிக்கின்றனர். இன்று அது எவ்வளவு தூரம் முற்னேற்றம் கண்டுள்ளதென்பதற்கு சிறந்த சான்று, அரசு மக்களை அறிவுறுத்த பிரபல தொடர்பூடகமாக வீதி நாடகத்தை பயன்படுத்தத் துணிந்துள்ளமையைக் கூறலாம். வீதி நாடகங்கள் வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு கொள்கைகளுக்காக பயன்படுத்தலாம். என்னால், எங்களைப்போலவே வீதி நாடகங்கள் தயாரியுங்கள் என்று கூற முடியாது. நாம் திறந்த வீதி நாடகக்குழுவினர் . அதைப் பயன்படுத்தும் முறையிலேயே முக்கியத்துவம் தங்கியுள்ளது. எண்ணெய் மருந்து விற்பவர்கள் கூட தமது விற்பனைக்காக வீதி நாடகத்தை பயன்படுத்தலாம்.

***பொ.ஐ.மு. அரசாங்கம் ஆட்சிபீடமேற கலையுலகத்துடன் தொடர்பு கொண்ட வர்கள் பெரும் உபகாரம் செய்தனர். எனினும், இறுதியில் அவர்களனைவரும் மறக்கப்பட்டு விட்டனர். இவ்வாறான நிலைமையின் கீழ் நீங்கள் அரசாங்கத்துக்கு எந்த அடிப்படையில் உதவப்போகின்றீர்கள்?***

இவ்விடயம் இந்த அரசாங்கத்தினால் மட்டும் மேற்கொள்ளப்பட்டதல்ல. அன்றும் , இன்றும், என்றும்கலைஞர்களை அரசாங்கம் தனது தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்ளவே பயன்படுத்தியது. ஆனால், எமது ஒரே நோக்கம் மக்கள் சேவையே. நான் ''சமாதான தவளமவுக்கு'' சென்றிருப்பின் அன்று காட்டப்பட்ட நாடகங்கள் வேறு பட்டிருக்கலாம்.

***உங்களது இக் கருத்தின்படி கலைஞர்கள் சுய தன்மையை இழந்தவர்கள் என்று எண்ணத் தோன்றுமல்லவா?***

இந்த அடிப்படையில் தவளமவுக்கு செல்லாதிருந்ததைப் பற்றி மகிழ்வுறுகிறேன்.

***நீங்கள் வீதி நாடகத்தில் மட்டுமன்றி மேடை நாடகம், தொலைக்காட்சி நாடகம், திரைப் படத்துறை ஆகியவற்றில் பணியாற்றி யுள்ளீர்கள். இது தொடர்பாக உங்களது அனுபவங்கள்?***

1975 நான் மேடை நாடகத்துடன் தொடர்பு கொண்டேன். சோமரத்ன திசாநாயக்கவின் 'வெடிக்காரயோ' மற்றும் பாரக்கிரம நிரியெல்லவின் 'வினிஷ்ய' போன்ற நாடகங்களில் பங்காற்றினேன். எவ்வாறாயினும், நான் கலந்து கொண்ட மேடை நாடகங்கள் 15 மட்டுமே.

***தொலைக்காட்சி நாடகங்களில் நீங்கள் பங்குபற்றியது எங்ஙனம்?***

'லூஷன்', 'பராக்கிரம' போன்றோர் தொலைக்காட்சி நாடகங்களுக்காக மேடை நாடக நடிகர்களையே தெரிவு செய்தனர். எமது பொருளாதாரம் பலம் பெற்றதும் இதன் கீழாகும். தொலைக்காட்சி நாடகங்கள் பற்றி என்னால் கருத்துத் தெரிவிக்க முடியாது. தொலைக்காட்சி நாடகங்கள் மூலம் வரும் வருமானத்தை நான் வீதி நாடகங்களுக்காகப் பயன்படுத்துகிறேன். திரைப் படத்துறை, தொலைக்காட்சி ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டாலும் நான் வீதி நாடகங்களைக் கைவிடவில்லை. வீதி நாடகங்களில் நடிப்பதையிட்டு நான் வெட்கமடையவும் இல்லை.சிலர் வீதியில் சென்று நடிக்க உனக்கு வெட்கமில்லையா எனக்கேட்கின்றனர். நான் அதை ஏற்றுக்கொள்ளமாட்டேன். மேடை, தொலைக்காட்சி நாடகங்களில் பெரும்பான்மையாக நடுத்தர, பணக்கார சமூகத்தையே கணக்கிலெடுக்கின்றனர். எனினும் அதில் ஈடுபடும் நபர்கள் அவ்வாறானவர்களா என்பது சந்தேகமே.

***தொலைக்காட்சி நாடகங்களில் உங்களது பாத்திரங்கள் ஒரே மாதிரியாக அமைந்திருப்பதன் காரணமென்ன?***

ஆம், ஒரே மாதிரியான பாத்திரங்களே கிடைக்கின்றன. நான் ''தூதருவோ'' நாடகத்தில் 'ஞானவத்தி' பாத்திரத்தை வெறுக்கிறேன் என்றில்லை. நான் அவ்வாறே வரையறுக்கப்பட்டு விட்டேன். அதற்கான காரணம் எனது உருவம் போலும். நாம் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற ரீதியிலேயே பாத்திரப்படுத்தப்பட்டுள்ளோம். எமது உருவத்துடன் வேறுபட்ட பாத்திரங்கள் எமக்கு தரப்படுவதில்லை. எனினும், எனக்கு அவ்வாறானதொரு சந்தர்ப்பம் கிடைத்தது, ஒரே ஒரு திரைப்படத்திலாகும். அது ''துன்வெனி எஹ'' நான் நடித்த முதல் திரைப்படம் மீஹரக்கா அதன்பின் தெஹன அதன் பின் 'துன்வெனி எஹ'. நான் எனது முழு நடிப்பாற்றலையும் வெளிப்படுத்தியது இப்படத்திலேயே. அத்துடன் பிரதான பாத்திரத்தை ஏற்றதும் இப்படத்திலேயே.

***'துன்வெனி எஹ' திரைப்படத்தில் நீங்கள் ஏற்ற பாத்திரம் பல விமரிசனங்களுக்குள்ளாகியது. அவ்வாறான பாத்திரத்துக்காக நீங்கள் எவ்வாறு உங்களைத் தயார்படுத்தினீர்கள்?***

நடிகர்கள் என்ற வகையில் நாம் எந்தப் பாத்திரத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பாத்திரம் உளவியல் ரீதியில் அங்கவீனமானது. கணவனை விட வயது கூடிய மனைவி பாத்திரம். எனக்கு அவ்வாறான பாத்திரங்கள் தொடர்பாக ஓரளவு விளக்கம் இருந்தது. சுற்றுப்புறச்சூழலிலும் அவ்வாறான பாத்திரங்களைக் கண்டறியலாம். அனுரசந்திரசிறி, சுகதபால சில்வா போன்றவர்களும் அப் பாத்திரத்தை சிறப்பாகக் கையாள எனக்கு உதவினர். நான் யாரையும் குறை கூறவில்லை. அதிலும் எனக்கு

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவலட்சணமான பாத்திரமே கிடைத்தது. எனினும் நான் அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டேன்.

**உங்களது திறமைக்கு இம்முறை OCIC விழாவில் விருது வழங்கப்பட்டது. இம்முறை சிறந்த நடிகைக்கான விருது யாருக்கும் வழங்கப் படவில்லை. இவ்வாறான நிலைமையின் கீழ் நீங்கள் பெற்ற விருதைப் பற்றி உங்கள் கருத்து?**

நான் போட்டி தொடர்பாக அக்கறை கொள் வதில்லை. தீர்ப்பு தொடர்பாகவும், அவ்வாறே. எவ்வாறெனினும் துன்வெனி எஹ மூலம் பெரும் மக்கள் அபிமானம் கிடைத்தது. அவ் அபிமானம் என் கண்களில் நீரை வரவழைத்தது.

**நாம் அரச நாடக விழா பற்றியும் சிறிது கதைப்போம். சில கலைஞர்கள் விருதைப் பெற்றுக்கொண்டவுடன் விருது தொடர்பாக அதிருப்தியுறுகின்றனர். நடுவரை விமர்சிக் கின்றனர். மீண்டும் அவ் விருதை பெற நாடகம் தயாரிக்கின்றனர். இந்தச் சம்பிர்தாயம் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

நாம் சம்பிரதாயத்தை வெறுக்கின்றேன். போட்டித் தன்மையை நிராகரிக்கின்றேன். இன்று இலங்கையில் விமர்சனத்துறை என்று ஒன்றில்லை. சில நடிகர்கள் உயிரைக்கொடுத்து நாடகம் நடிக்கின்றனர். ஆனால் நாடகம் படுதோல்வி அடைகின்றது. சிலவேளைகளில் பிரதானமற்ற பாத்திரத்தில் நடிப்போர் திறைமயாக செய்திருப்பர் எனினும் இவை நடுவர்கள் பார்வைக்கு உட்பட்ட தில்லை.

எமது நாட்டில் கலைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. நாம் இளம் கலைஞர் களுக்கு ஏற்படும் அசாதாரணங்களை பற்றி கதைக்கும் போது எங்களைக் குறை கூறுவர். இளம் சமுதாயத்தினருக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். .

தற்போது டவர் ஹோல் நிறுவனம் மூலம் நாடக பாடசாலை (Drama School) நடாத்தத் திட்ட மிட்டுள்ளனர். இது வரவேற்றக்கத்தது. எனினும் இதுவல்லவே பிரச்சினை. இதற்கு பின்னரான மாற்று என்ன? இதுவே பிரச்சினை. எம்முடன் கலாசார திணைக்களத்தில் நாடகப் பயிற்சி பெற்றவர்களைத் தேட வேண்டியுள்ளது. இன்று நாடக பாடசாலை கொழும்புக்குள் மட்டுமே வரையறுக்கப்பட்டு விடும். இளைஞர் சேவை மன்றம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

> சந்திரிக்காவின் அரசாங்கம் தொடர்பாக நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். இந்த அரசாங்கம் ஏதாவது செய்யுமென்று எண்ணியிருந்தேன். இப்போது நான் பெரும் நம்பிக்கையீனத்தில் இருக்கிறேன். கலைத்துறைக்கு மட்டுமன்றி பிற எந்தத் துறைகளுக்கும் நன்மை ஏற்படவில்லை.

**அழகியல் பல்கலைக்கழக பிரச்சினை தொடர்பாகஇடம்பெற்ற கலந்துரை யாடலில் நீங்கள் இது நாம் நியமித்த அரசாங்கம் என குறிப்பிட்டீர்கள். உண்மையில் பிறரைப்போல் நீங்களும் இது 'மக்கள் அரசாங்கம்' என எண்ணுகிறீர்களா?**

உண்மையில் நான் அவ்வாறே நம்பினேன். இவர்கள் வந்தால் மாற்றம் ஏற்படும் என திடமாக நம்பினேன்.

**பொ.ஐ.மு. அரசாங்கத்தை பற்றி உங்கள் அபிப்பிராயங்கள்?**

துன்பம், கவலை, அரசாங்கத்தை நியமித்தன் மூலம் நாம் பிரதிபலனை எதிர்பார்க்கவில்லை. எனது குடும்பத்தில் பலர் அரசியல் பழிவாங்கலுக் குள்ளானார்கள். எனது தந்தை ஒரு தொழிற்சங்க தலைவர், அவரது தொழில் கடந்தகால அரசாங்கத்தால் பறிக்கப்பட்டது.

சந்திரிகாவின் தலைமைத்துவம் தொடர்பாக நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். இந்த அரசாங்கம் ஏதாவது செய்யும் என எண்ணியிருந்தேன். இப்பொழுது நான் பெரும் நம்பிக்கையீனத்தில் இருக்கிறேன். கலைத்துறைக்கு மட்டுமன்றி பிற எந்தத் துறைகளுக்கும் நன்மை ஏற்படவில்லை.

நன்றி - *சித்திஜய*

---

சங்கமனின் — இது ஒரு அலசல்

# பெண்ணியத்தின் ஒழுக்கம் என்ன?

''பெண்ணிலைவாதிகள் இன்று ஒரு முக்கிய சக்தியாகத்திகழத் தொடங்கியுள்ளார்களே, அதன் காரணம் என்ன?'' -நான் இக்கேள்வியால் என் உள் விமர்சகனைத் தட்டி விட்டேன்.

''திடீரென பெண்ணிலைவாதிகள் பக்கம் திரும்பியுள்ளீர், காரணம் என்னவோ?'' - அவன் திருப்பிக் கேட்டான்.

''காரணத்திற்குப் பிறகு வருகிறேன். இப்போது நான் கேட்டதற்கு பதில் சொல்''' - நான் தூண்டினேன். ''பெண்ணிலைவாதத்தின் எழுச் சிக்குக் காரணம் என்ன?''

''காரணம் நிறைய இருக்கு. உலக வளர்ச்சிக்கான உழைப்பில் அரைவாசிக்கும் மேலாக பங்களிக்கும் பெண்கள் இன்றுள்ள ஆணாதிக்க முனைப்புக் கொண்ட அரசியல், சமூக, பொருளாதார நோக்கால் பின்தள்ளப்படும் போது, அதற்கெ திராகத் திரள வேண்டாமா? உண்மையில் இப்படி ஆண் வர்க்கத்தால் படுபாதகமாகச் சுரண்டப்படும் பெண்கள் தங்களை இப்படி ஒரு சக்தியாக உருவாக்கிப்போராடுவது அவசியந்தான்'' - அவன் விளக்கினான்.

''இந்த ஆண் வர்க்கச் சுரண்டல் பற்றி மார்க்சீயம் என்ன சொல்கிறது?'' நான் இன்னொரு கோணத்திற்கு இதை இழுத்தேன்.

''மார்க்சீயம் என்ன சொல்லும்? அதுவும் ஆண் ஆதிக்க முனைப்புக் கொண்ட தத்துவம் தான். அது மட்டுமல்ல மார்க்ஸ் மாதிரி தன் மனைவியைச் சுரண்டியவர் வேறுயாரும் இருக்க முடியாது. முழுநேரத்தையும் பிரிட்டிஷ் மியூசியத்தில் கழித்த மார்க்ஸ், தன் உடல் இச்சையைத் தீர்ப்பதற்காகத் தான் மனைவியிடம் வந்தார். அவளை தொடர்ந்து கர்ப்பவதியாக்கினார்; வறுமையில் வாடவிட்டார். அதுமட்டுமல்ல, தன் உடல் இச்சையைத் தீர்த்துக்கொள்ள ஒரு 'வைப்பாட்டி'ச்சியை வேறு வைத்துக்கொண்டார். இதையும் விடக்கேவலமான சுரண்டல் தான் தன் மூலம் வைப்பாட்டிச்சிக்குக் கிடைத்த குழந்தைக்கு தான் அப்பனென ஏற்றுக் கொள்ள மறுத்தது. அப்படிப்பட்டவரின் தத்து வத்தில் பெண்களை ஆண்கள் சுரண்டுவது பற்றிய பேச்சை எதிர்பார்க்க முடியாது'' - அவனுடைய பேச்சில் ஒருவித சினம் தெறித்தது.

''ஆனால் இப்போ பெண்ணிலைவாதத்தையும், மார்க்சீயத்தோடு இணைக்கும் போக்கும் உருவாகித்தானே உள்ளது?'' -நான்.

''உண்மை- மார்க்சீயம் பற்றி எத்தனை எத்தனையோ வியாக்கியானங்களும், வெட்டு ஒட்டுக்களும் நடந்து கொண்டிருக்கும் இக்காலத் தில் பெண்ணியமும், மார்க்சீயத்துள் சேர்த்துக் கொள்ளப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதனால் மார்க்சீயமும் பலமுறும். அத்தோடு பெண்ணியமும் பலமுறும்'' - அவன்.

''எப்படி?'' நான் குறுக்கிட்டேன்.

''தனிச்சொத்து குடும்பம் என்பவையெல்லாம் மான்யகால தந்தை வழிச்சமூகத்தின் உருவாக்கம். உண்மையான பொதுவுடமை மலர்ச்சியில் அரசு வாடுவதுபோல் இவையும் அற்றுப்போய் விடும் என்கிறது மார்க்சீயம். கூடவே இப்பார்வையில் பெண் என்பவள் ஆணொருவனின் சொத்தாகவே, போகப்பொருளாகவே கொள்ளப்படுகிறாள். இந்த சொத்தென்ற ஒன்றிலிருந்தே 'கற்பு' போன்ற பல ஆணாதிக்கக் கோட்பாடுகள் பெண்மேல் திணிக்கப்படுகின்றன. இல்லையா? இவற்றின் மூலமே பெண்ணின் அடிமைச்சாசனம் எழுதப்பட ஏதுவாகிறது. மார்க்சீயத்தில் இத்தகைய கருத்துக்கள் இருந்தபோதும் பெண்ணிய நோக்கு அதில் பிரக்ஞைபூர்வமாக இடம் பெறாமையால் அதில் பல முன்னுக்குப்பின் முரண்பட்ட. கருத்துக்கள் உள்ளன.''

''இப்போ இவற்றின் நிலை என்ன?'' - நான் துருவினேன்.

''சோஷலிஸ நாடாக இருந்த பல இடங்களிலேயே மார்க்சீயக் கருத்துக்கள் வலுவிழந்து போயிருந்தாலும், உலகெங்கும் பெண்ணிய நோக்குக்கு, சாதகமான நிலைகளே உருவாகி வருகின்றன. இப்போ மேற்கில் 'குடும்பம்' என்று பெண் களைக்கட்டிவைத்த கட்டுக்கள் அறுபடுகின்றன. அங்கு பெண்களுக்குள்ள தொழில் வசதிகள், விவாகரத்து முறைகள், கல்வி, ஒரு பாலுறவு போன்றவை எல்லாம் அவளை ஆணாதிக்கம் விரித்த தளைகளில் இருந்தெல்லாம் விடுதலை அளித்துள்ளன.'' அவன் விளக்கினான்.

''குழந்தை பெறவேண்டும் என்ற ஆசை அவளுக்குத் தடையாக இருக்காதோ?'' - நான்.

''அதுவும் எதிர்காலத்தில் தேவைப் படாது. செயற்கை குழந்தை உருவாக்கம் அதையும் தேவையற்றதாக்கிவிடும்.''

''அப்படியானால் எதிர்காலத்தில் ஆண் - பெண் உறவென்பது என்ன விதத்தில் இருக்கும்? காதல், இனக்கவர்ச்சி, உடலுறவு என இருபாலாரும் சங்கமிக்கும் நிலைகள் எவ்வாறிருக்கும்? மரபு வழிவந்த விவாகச்சடங்கு விவாகப்பதிவுகள் தான் முன்பு அவர்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஒன்றாக இணைத்தன. இவை இப்போ பெருமளவில் தூக்கியெறியப்பட்டபின் அவர் களை ஒன்றாக வைத்திருப்பதற்கு உதவுவதாய் எது இருக்கும்?'' - நான்.

''கட்டற்ற சுதந்திரம்?'' அவன் சட்டென பதில் அளித்துவிட்டுத்தொடர்ந்தான். ''ஆண் - பெண் இருபாலாரையும் ஒருவரோடு ஒருவர் சேர்த்து வைக்கும் ஒழுக்கக்கோட்பாடும் எதிர்காலத்தில் இதுவாகவே இருக்கும்''

''எப்படி?'' - நான் விளக்கம் கோரினேன்.

''அதாவது ஆண் -பெண் இருபாலாரையும் ஒருவர் மற்றவரின் சொத்தாக, போகப் பொருளாக நினைக்கவைப்பதும், அதனால் ஏற்படும் நோக்கால் ஒருவரை மற்றவர் விவகாரங்களில் தலையிட வைப்பதும் இக்கட்டற்ற சுதந்திரத்தால் இல்லாமல் போகிறது. எஞ்சியிருப்பது அன்பு மாத்திரமே. கட்டற்ற சுதந்திரம் என்பது கட்டற்ற அன்பாக (காதலாக?) மாறலாம்...''

''ஆனால் இங்கு ஒரு ஆபத்தும் உண்டல்லவா?'' - நான்.

''என்ன ஆபத்து?'' அவன்.

''அதாவது மனித நாகரிகத்தின் ஆரம்பகாலத்தில், அதே கட்டற்ற சுதந்திரம் நிலவிய காலத்தில் தாய் - தனயன் உடலுறவு, தங்கை சகோதரன் உடலுறவு (Incestuous) என்ற கட்டற்ற போக்கு இருந்தது. இப்போதும் அதன் எச்ச சொச்சங்கள் இருந்து வருகின்றன. இந்நிலையில் மனித நாகரீகம் எதுவாக இருக்கும்?'' - நான்.

''நீ கூறுவது மனித நாகரீகம் குழந்தைப்பருவ காலத்தில் இருந்தபோது ஏற்பட்ட ஒழுக்க முறைகள். இப்போ நாம் யார் என எம்மை நாம் பிரக்ஞைபூர்வமாக உணர்ந்து வைத்திருக்கும் காலத்தில் பழைய நிலைக்கு திரும்பிப்போதல் ஏற்படாது, ஒரு சில புறநடையைத்தவிர!'' அவன்.

''அதனால்தானா 'சரிநிகரில்' வெளியான கோணேஸ்வரியின் கவிதையை பெண்ணிலை வாதிகள் ஆபாசம் என எதிர்த்தனர்.?'' -நான்.

''இந்த இவர்களின் எதிர்ப்பு பெண்ணியத்தின் புதிய ஒழுக்கக்கோட்பாட்டின் வழிவந்ததல்ல. இவர்களின் எதிர்ப்பு காலாகாலமாக வந்த, சமய ஆசார வழிவந்த ஒழுக்கத்தின் அடிப்படையில் வந்தது. இதற்கும் பெண்ணியத்திற்கும் தொடர் பில்லை. உலகம் தழுவிய பெண்ணிய ஒழுக்கக் கோட்பாட்டின் வழிவந்ததல்ல இது! அந்த ஒழுக்கக் கோட்பாட்டின் படி கோணேஸ்வரி கவிதை ஆபாசமாகத் தெரிந்திருக்காது'' அவன் கூறினான்.

''அந்த உலகறிந்த ஒழுக்கக் கோட்பாடு என்ன?''

''அதுதான் ஏற்கெனவே கூறிய கட்டற்ற விடுதலையும், அதன் வழிவரும் கட் [illegible] அன்பும்! இந்தப்பார்வையில் பெண்ணின் எ [illegible] அங்கமும் போகப்பொருளாகவும், ஆபாசமா [illegible]வும் பார்க்கப் பட மாட்டாது. மாறாக, எல்லாம் அன்பின் உயிர்ப் பாகப் பார்க்கப்படும்'' - அவன் கூறி முடித்தான். ○

---

9 →

## நாடு சுதந்திரம்...

வன்முறைகளால் வதைக்கப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு துரத்தப்பட்டவர்கள் அங்கு எல்லைக்கிராமங்களில் குடியேற்றப்பட்டு சிங்கள இராணுவத்தால் சீரழிக்கப்பட்டு அகதி முகாம்க ளில் அவதிப்படுவதையும், அடிமைக் கூலிகளாய் சீரழிக்கப்படுவதையும் வரலாறு பதிவு செய்திருக் கிறது.

இனி மலையக தமிழரின் இருத்தலுக்காக நாடோடி களாக முடியாது. நாங்கள் எம்முன்னோர் வளப்படுத்திய மண்.

அரசியலமைப்பு, சீர்திருத்தம், அதிகாரப் பரவலாக்கல் பற்றிய பேச்சுக்களில் மூழ்கியுள்ள இப்பொன்விழா ஆண்டில் மலையகத் தமிழரின் இருத்தலுக்கான உத்தரவாதம் வெறும் யாப்பிலும், சரத்திலும், உதட்டிலும் தேவையில்லை.

நடைமுறை சாத்தியமிக்க, சுயநிர்ணய உரிமை யுடன் கூடிய அரசியல் சுயாட்சிக்கான கோரிக் கையை ஆள்வதற்காகவல்ல; மக்கள் வாழ்வதற் காக ஒரு ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் அதன் ஆற்றலை வளர்க்கவும், சிந்தனையை மேம்படுத்தவும் தேவையான களம் என்ற வகை யில் மிக மிக அழுத்தமாக முன்வைக்க வேண்டியது இன்றைய வரலாற்றுத் தேவையாகின்றது.

வன்முறை வடிவில் அமைக்கப்பட்ட இராணுவ கட்டமைப்பிற்குற்பட்ட பெருந்தோட்ட சமூக கட்டமைப்பை தகர்த்தெறிவதும், தவிர்க்க முடியாதவாறு அந்த அமைப்பின் நிலங்களின், உற்பத்தியும், உடமையாளர்களாக மக்களை அங்கீகரிப்பதும் தினக்கூலி தொழிலாளப் பட்டா ள.மாகவன்றி ஒரு நிலையான சமூக பாதுகாப் புக்கான காப்பீட்டைக் கொண்ட மக்கள் சமூகமாக மாற்றியமைப்பதும் உடனடி அவசியமாகிறது.

ஆண்டுக்கொரு சம்பளப்போராட்டம் நடத்தாமல் மலையகத்தின் இயங்கு சக்திகள் மக்களுக்கான அடிப்படை வாழ்க்கை வசதிகளை விரைவாக பெற்றுக்கொடுக்க ஒன்றுபட்டுப் போராட வேண்டும்.

சக்திமிக்க போர்க்குணம் மிக்க, அணிதிரட்டக் கூடிய, மிக திறன்வாய்ந்த பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை உரிமைகளை விலைபேசி அற்ப சலுகைகளை பெறுவது மிகக்கொடிய துரோகத் தனமானதாகும்.

சுதந்திரப் பொன்விழா ஆண்டு மலையக மக்களுக்கு அடிமட்ட ஆண்டுகளை மீட்டுப்பார்க்க வேண்டிய ஆண்டு இதுவரை வரலாற்றில் பெற்ற படிப்பினைகளோடு முன்னோக்கி நகர வேண்டு மானால் இவ்வாண்டு இந்த நாடு எங்களுக் கிழைத்த அவமானங்களை மீட்டுப் பார்ப்பதோடு எதிர்காலத்தை மிகக் கவனமாக, மிக நிதானமாக, உறுதியாக முன்னெடுக்க எல்லா முற்போக்கா ளர்களும், மானிட விடுதலையை நேசிக்கும் சக்திகளும் இவ்வாண்டில் சபத மேற்க வேண்டும்.

புதியதோர் உலகை நம்பிக்கையோடு எதிர் கொள்ள மக்களை தயார்படுத்தும் ஆண்டாக இவ்வாண்டை மலையக மக்கள் கொள்ளல் வேண்டும். வரலாற்றின் எல்லாவிதமான கட்டுத் தளைகளையும் தகர்ப்போம். ●

---

19 →

## சனநாயக...

யுத்தத்தை முடிக்க முன்வருகின்ற மத்தியஸ்தத்தை விரும்பாத அரசிடம் எமக்கும் புலிகளுக்கும் இடையில் பிரச்சினைகள் உண்டு. அதனைத்தீர்த்து விடுங்கள் என நாம் கேட்டோமா? புலிகளைப் பயங்கரவாதிகளாக காட்ட முற்படுகின்ற அரசு முதலில் தனது பயங்கரவாத செயற்பாடுகளை நிறுத்தி இந்த நாட்டில் உண்மையான சனநா யகத்தை ஏற்படுத்த முன் வரவேண்டும். இந்த சனநாயகமற்ற அரசியல்தான் 1971ல் இலட்சக் கணக்கான சிங்கள மக்களை புதைகுழிக்கு அனுப்பியது. தென்னிலங்கையில் பல அரசியல் கொலைகளை நடாத்தியது. ஆயுதக்கொள்வனவு மூலம் உள்ளூரிலும், வெளியூரிலும் முதலாளிகளை வளர்த்தது, ஐம்பதாண்டு சுதந்திரம் பற்றிப் பார்த்தால் மக்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறார்களா? திருப்தியாகச் சாப்பிடுகி றார்களா? வேலைவாய்ப்பும் குந்தியிருக்க இடமும் கிடைக்கும் என மக்கள் நம்புகிறார்களா? வெளிநாட்டில் கூலித்தொழிலும், அகதிப்பணமும் இல்லையென்றால் நமது நாட்டில் பலர் ஐம்ப தாண்டு அரசியலின் ''பயனைக்'' காணாமலே கண்ணை மூடியிருப்பர் எனக்கூறுவது மிகையான கூற்றல்ல.

**ஏ.டி.இராயப்பு, மாங்குளம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நஸ்ரத் பதே அலிகான் :

# இடைவெளிகளை விரவிச் செல்லும் மகாநதி

யமுனா ராஜேந்திரன்



5

நஸ்ரத்தின் கவாலிப்பாடல்களின் தனித்தன்மை அதனது சமகாலத்தான். (i) இசைவடிவம் எனும் அளவில் அவர் கவாலிமரபையும், இந்துஸ்தானி மரபையும், கர்நாடக மரபையும், மேற்கத்தைய பாப் இசைமரபையும் கலந்து ஒரு கலப்பிசை தருகிறார். (ii) கவாலிப்பாடல்களின் உள்ளடக்கம் எனும் அளவில் அதன் இஸ்லாமிய மத உள்ளடக்கத்தையும் தருவதோடு, அதனைத் தாண்டி மதச்சார்பற்ற தன்மையுள்ள பாடல்களையும் கஸல்களையும் சமகாலத் தன்மையுடன் தருகிறார்.

நஸ்ரத்துக்கு மட்டுமல்ல, கவாலி மரபுக்கும் மிகமிகமுக்கியம் பங்கேற்பாளர்கள், பாடகர்களின் இணைவு. நஸ்ரத்தின் விரல்கள் காற்றில் அலைவுறும் வேளை பங்கேற்பாளர்களின் கரகோஷமும் கால்களின் நடனதாளமும், ஒரே தளத்தில் இணைவதை நாம் பார்க்க முடியும். இந்தச் சங்கமம் மனிதனை மனிதனுக்குள்ளும், ஆணைப் பெண்ணுக்குள்ளும், ஆன்மாவை கடவுளுக்குள்ளும் கொண்டு போகும் பரவசமாக ஆகிவிடுகிறது.

கவாலிப்பாடல் மரபின் இன்னொரு அம்சம்: பாடகனும் பங்கேற்பாளனும் ஒரே தளத்தில் அமர்வது. ஒளிமேடை இருட்டுச் சூழல் எனும் அசமத்துவம் தவிர்க்கப்பட வேண்டும். மேடை தரை என்ற பாகுபாடு இருக்கக்கூடாது. ஆனால் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொள்ளும் நவீன நிகழ்ச்சிகளில் இம்முறையைக் கையாள்வது மிகவும் சிரமம். ஆனாலும் நஸ்ரத் பங்கேற்பாளர்களுடன் வேறுவழிகளில் இணைவைச் சாதிக்கத்தான் செய்கிறார். பங்கேற்பாளர்கள் பரவசம் எய்தும் சில சொற்களையும், வரிகளையும், தாளங்களையும் அவதானிக்கும் அவர், பங்கேற்பாளர்களின் அனுபவத்தை உன்மத்தம் நோக்கி உயர்த்தும் பொருட்டு அச்சொற்களை, வரிகளை தாளலயங்களைத் திரும்பத் திரும்ப உச்சஸ்தாயியில் பாடிக்கொண்டு போகிறார். அவர் கையிலிருக்கும் கைக்குட்டை காற்றில் அலைவுறுகிற மாதிரி ஆன்மாவையும் உடலும் கால்களும் காற்றில் கரையும் இசை அனுபவம் அவரது நிகழ்ச்சி தரும் அனுபவம்.

கவாலிப்பாடகர்கள் அடிப்படையில் எளிமையாகவும், துறவிகளுக்கான மனநிலை பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். அன்புடனும் மரியாதையுடனும் ஒருவர் தரும் சல்லிக்காசை பெருமதிப்புடன் ஏற்றுப் பாடுவதற்கு பொறுப்புள்ளவர்கள் கவாலிப் பாடகர்கள். எத்தனை தான் புகழும் பணமும் வந்து குவிந்தாலும் கூட நஸ்ரத்திடம் அந்த எளிமை இருந்தது. ஒரு சிலருக்காக கவாலிமரபின் படி சிறு குழுச்சங்கத்தில் அவர் அடிக்கடி பாடவும் செய்தார் என்பதுதான் அவரது மேன்மை.

6

நஸ்ரத்தையும் அவரது தந்தையையும் குறித்து நிறைய ஐதீகங்களும் பரவசமூட்டும் கதைகளும் கூட உண்டு.

இரண்டு சம்பவங்கள்.

1. ஒரு முறை ஒரு மனிதர் நஸ்ரத்தின் தந்தையிடம் வந்தார். தன்னிடம் ஒரேயொரு ரூபாதான் இருப்பதாகவும், தனக்காகப்பாடவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். தந்தையும் ஒப்புக்கொண்டார். இருவரும் ஊரின் ஒதுக்குப் புறமான திறந்த வயல் வெளிக்கு வந்தனர். தந்தை பாடத்தொடங்குகிறார். கொஞ்ச நேரம் கழித்துப் பார்க்கும் போது எங்கெங்கும் மனிதர்கள் பரவசத்துடன் நின்று கொண்டிருந்தனர். இது தான் சூபியின் மகிமை. அவரது தந்தை பணத்தின் மீது காதல் கொண்டவரல்ல, இசையின் மீது காதல் கொண்டவர். அதற்காக அவர் தன்னை இழந்தார். என்பது வரலாறு.

2. நஸ்ரத் அடிக்கடி ஒரு கனவு கண்டார். ஒரு சூபி ஞானியின் சமாதியில் தான் கவாலி பாடுவதான கனவு அது. நஸ்ரத்தின் விவரணங்களின்படி அச்சமாதி ராஜஸ்தானின் ஆஜ்மீர் நகரத்திலிருக்கும் சூபி துறவி ஒருவரின் சமாதி எனக்கண்டார்கள் நஸ்ரத்தின் இரண்டு மாமன்மார்களும்.

1979ஆம் ஆண்டு அந்தச் சமாதிக்குச் சென்று பாடும் முதல் கவாலிப் பாடகராக நஸ்ரத் மரியாதை செய்யப் பட்டார். அந்தச்சமாதி மாபெரும் பாடகரும், கவாலிக் கவிஞரும், துறவியுமான ஹஸ்ரச்ஜா குவாஜா மொகுதின் இஸ்மயிலின் சமாதியாகும்.

சூபிமரபில், சில துறவிகளின் சமாதியில் அந்தந்த மரபில் வந்தவர்களே பாடமுடியும். ஆண்டுதோறும் அத்தகைய நிகழ்ச்சிகளும் நடக்கும். அந்த நிகழ்ச்சிகளில் வேறு மதங்களைச் சார்ந்தவர்களும், கவாலிப்பாடல் மரபில் ஞானமுள்ளவர்களும் கூடப் பாட முடியும். அவ்வாறானவர்கள் அழைப்பாளர்களாகப் பங்கு பெற முடியும். அவ்வாறு சூபித்துறவிகளின் சமாதிகளில் சீக்கியப் பாடகர்கள் இந்து பாடகர்கள் போன்றோரும் பாடினார்கள். கிறிஸ்தவர்களும் , பார்ஸிகளும் கூட இத்தகைய யாத்திரிகர்களாக இருந்திருக்கிறார்கள். சிஸ்டியின் தொடர்மரபில் வராத நஸ்ரத்தும் இவ்வாறுதான் விசேச அழைப்பாளராகச் சென்று அவரது சமாதியில் பாடினார்.

கவாலி மரபு மக்கள் இசைக்கு மிகப் பெரிய பங்களிப்புகளைச் செய்திருக்கிறது.

1. கவாலிமரபில் பாடகனுக்கும், பங்கேற்பாளனுக்கும் இடையில் இருக்கும் உரையாடல் (Dialogue) மிக முக்கியம்.

2. மிதத்தல் அல்லது பறத்தல் (Flight) என்கிற காலம், இடம் கடந்த இணைவும் பரவசமும் அவசியம்.

3. விவசாயிகளின் வாழ்க்கை - துறவிகளின் கலக மரபு - கடவுளை உடல்ரீதியான பரவச அனுபவத்தின் மூலம் எட்டுவது போன்ற அனைத்துமே பூமியில் சொர்க்கத்தையும் கடவுளையும் காணும் நடைமுறை நோக்கம் கொண்டது.

4. வட இந்திய - தென் இந்திய - நாட்டுப்புற மேற்கத்திய இசை மரபுகளை இது இசைக்கிறது.

இசை அனுபவம் என்பதில் இருக்கிற இன்று நிலவுகிற - சனாதன சொல்லியல் மரபில் இருக்கிற உன்னத இசை, பாமரனின் இசை என்கிற இடைவெளிகளை நஸ்ரத்தின் நவீன கவாலி இசைப்பாணி உடைத்தெறிகிறது. கூட்டுணர்வை ஒரே தளத்தில் படைக்கவும் செய்கிறது.

நஸ்ரத்தின் இசை ஒரே சமயத்தில் மானுட வாழ்வின் இன்றைய அவலங்களையெல்லாம் தனது இசைக்குள் உள்வாங்கி விடுகிறது.

மனிதனின் அன்றாட வாழ்வனுபவத்தில் விளையும் பரவசம் மூலம் மனிதனுக்குள் கடவுள் உணர்வையும், அன்பையும் மனித சங்கமத்தையும் தோற்றுவிக்கிறது. நஸ்ரத்தின் இசை மொழி, மரபு, தேசங்கள், சொல்லின் அர்த்தம் போன்ற எல்லைகளைக் கடந்து செல்லும் ஒருமை வெளிக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. எல்லைகளுக்குள் செயல்படுகிறவை தரும் அர்த்தங்களைத் தாண்டிய அனுபவப் பரவசப் பொதுமையை இவரது இசை தொடுகிறது. ஆகவே தான் அவரது குரலைக் கேட்கிறபோது நம்மனம் கதறுகிறது, நெகிழ்கிறது, நடனமாடுகிறது, பரவசமும் கொள்கிறது.

இன்னொன்று நஸ்ரத்தின் சில பாடல்களைக் கேட்டபிறகு அந்தப் பாடலின் ஆதார மொழி சார்ந்த நண்பர்கள் எனக்கு நெருக்கமான சிநேகிதர்கள் ஆகியிருக்கிறார்கள். பரவசத்தின் உள் இருக்கும் அர்த்தங்களைத் தேடிச் செல்லும் போதும் நமக்கு சங்கமமும் அன்பும் கிட்டுகிறது. இவ்வகையில் நஸ்ரத்தின் குரல் உலகின் எல்லைகளை இன்மையில் கரைந்து போகச் செய்கிறது.

7

''கவாலியின் செய்தியென்பது முஸ்லிம் மக்களுக்கு மட்டுமே உரியது அல்ல. எல்லா மதங்களிலும் மகத்தான மனிதர்கள் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள், இந்துக்கள், சீக்கியர்கள் என இவர்கள் அனைவருமே மாபெரும் சூபித்துறவிகள் தான். சூபிக்களின் செய்தி அனைத்துமே ஒன்றுதான்: கடவுளை எவ்வாறு எட்டுவது என்பதுதான் அது. ஆனால் பாதைகள் தான் வேறு வேறு.''

என்றான் நஸ்ரத் படே அலிகான். மதச்சார்பற்ற தன்மையில் இருந்து அவன் கடவுளை அணுகுகிறான். மதங்களால் இனங்களால் அரசியல் நம்பிக்கைகளால் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் இன்றைய உலகின் பிணக்குவியலுக்கிடையில் அன்பின் செய்தியை ஏந்தி நடந்தவன் நஸ்ரத் படே அலிகான்.

ஜியோப் நயர் சொல்கிறபடி மேற்கத்திய மதமரபு இசையென்பது காவுபற்றிய இரங்கல்தான். நஸ்ரத்தின் இசையென்பது கரகோசத்தின் எக்காளத்திலும் புழுதிபறக்கும் தபேலாவின் முழக்கத்திலும் கணிந்து அதற்குள்ளேயே ஜீவனுடன் சுடர் விட்டு எரிந்துகொண்டிருப்பது. பதின்மூன்றாம் நூற்றாண்டு சூபித்துறவி ரூமியின் வார்த்தைகளில்:

**நான் ஒரு குரல் அல்ல**<br>
**நான் கனலின் இசை**<br>
**நெருப்பு பாடிக்கொண்டிருக்கிறது.**<br>
**நீ கேட்டுக்கொண்டிருப்பது**<br>
**உனக்குள் தீயின் வெடிப்புறும்**<br>
**ஓசை.**

தாரிக்அலி தனது கண்ணீர் அஞ்சலியின் இறுதி வரிகளில் சொல்லியிருப்பது தான் பூமியின் கானமாகத் திரிந்த நஸ்ரத்படே அலிகானுக்கு மிகச் சிறந்த அஞ்சலியாகும்.

*''நஸ்ரத் இப்போது இல்லை. சொர்க்கத்திலும் பூமியிலும் பிரசித்தமாயிருந்த ஒரு குரல் இப்போது இல்லை. ஆனால் வானம் பூமியெனும் பிரிவு நிஜம் இல்லை. அவரது இசையும் குரலும் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும். சமயத்தில் நமது இதயங்களை ஈரப்படுத்தும் உப்புக்கரிக்கும் ஒரு துளி கண்ணீரின் வழி''*

நஸ்ரத் வானம் பூமியெனும் இடைவெளிகளை, மேற்கு கிழக்கெனும் உலக இடைவெளிக்ளை, செவ்வியல் இசை, மக்கள் இசை எனும் இடைவெளிகளை, உன்னத இசை, நாடோடி மக்களின் இசை எனும் இடைவெளிகளை, புனிதர்களின் இசை, பிச்சக்காரர்களின் இசை எனும் இடைவெளிகளை நிரவிச் சென்ற மனித மகாகவி.

அவனது குரல் ஜனசமுத்திரத்தில் என்றென்றும் ஒலித்துக்கொண்டிருக்கும் மறுபடி மறுபடி வரும் ஜீவ அலைகளின் குரல்.

கடவுளை நோக்கிச் சென்ற மனிதனின் பரவசக் குரல், மானுடவாழ்வுக்கான கதறலாக நிரந்தர சோகத்தையும் கொண்டிருந்த குரலும் அந்த நித்தியக் குரல்தான்.

●

குறிப்புக்கள்

I. ஆதாரக் கட்டுரைகள்:


1. Songs of Praise: Sufi devotinal music of Pakistan

Jamila Siddiqi and Helen Jeromme. world music: The Roushi guide.

Penguin Books/ London/ 1994.

2. Tender voice of devotion: Tariq Ali

The Guardian /Monday/1997

3. Nasratt Fatah Ali khan; by Geoff Nyer.

The Independent/ 18 August/1997.

4. Facts about the Qawwali king; A selection

Eastern Eye/ August 22/1997

5. Tribute to the Qawwali king

Asian Times/August 26/1997.

6. Dictionary of Indian classical Music by Rashar Menon / penguin/ India/UK.


II. அ. பொதுவாக இஸ்லாமிய மரபில் பெண்கள் ஆண்களுக்கு முன் பொது இடங்களில் பாடுவதில்லை. அடிப்படைவாத முஸ்லிம் நம்பிக்கையாளர்கள் இதனை ஒப்புக்கொள்வதில்லை.

சூபிக்கள் இதை மறுத்தவர்கள். பெண்கள் பாடுவதையும், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதையும் இவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

நஸ்ரத் படே அலிகானுக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றார்கள். ஆண் இல்லை. பாகிஸ்தான் கவாலி ஆண் பாடகர்கள் பெண்கள் பாடுவதை ஒப்புக்கொள்வதில்லை.

நஸ்ரத் படே அலிகானும் தன் மகள்களை பாடவைக்க முயலவில்லை.

பெண்களுக்கு இத்தனை சிரமப்படக் கூடிய உடல் ஆற்றலும் மன ஆற்றலும் இல்லை என்று குறிப்பிடுகிறார் அலிகான்.

அநேகமாக தமது மருமகன் ரலத்தான் தமது வாரிசாக வரக்கூடும் என்றும் சொல்கிறார்.

தமது மகள்களுக்கு கவாலி சொல்லித்தரும் உத்தேசம் எதுவும் அவருக்கு இருக்கவில்லை.

ஆனால் பர்வீகு சுல்தான் எனும் பாகிஸ்தானின் புகழ்பெற்ற பெண் பாடகியின் நிகழ்ச்சியை, ஆண்கள் கருவிகள் வாசிக்க கேட்டிருக்கிறேன்.

நஸ்ரத் அலிகான் இந்த விசயத்தில் இஸ்லாமிய ஆண்களின் மனத்தடையைத் தாண்டிவர முடியாதது ஒரு முரண்நகை.

2. அலிகானின் பாடல்கள் இசைத்தட்டுக்களிலும், ஆடியோ கேசட்டுக்களிலும் கிடைக்கிறது. அவரது புகழ்வாய்ந்த பாடல்களின் தொகுப்புக்களும், சில தேர்ந்தெடுக்கப்பட்ட கவாலி நிகழ்ச்சிகளும் விடியோவில் கிடைக்கிறது.

அவருடைய பெரும்பாலான இசைத்தொகுப்புக்களை வெளியிட்ட நிறுவனம்: (Oriental Records) எனும் இலண்டன் ஆசிய நிறுவனம்.

மேற்கத்திய குலைஞர்களுடன் சேர்ந்து அவர் கொடுத்த பாடல்களை Womad நிறுவனம் வெளியிட்டிருக்கிறது.


பெரும்பாலான இசை விற்பனை நிலையங்களில் அவரது படைப்புக்கள் கிடைக்கிறது.

இக்கட்டுரை தேடிச்செல்வதற்கான/ இசைகேட்பதான தூண்டுதலைத் தரும் என்று நம்புகிறேன். அதுவே எனது இறுதி நோக்கமும் ஆகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கோவேறு கழுதை

திசேரா

அந்த இடத்துக்குப்போகும் போது

அல்லது போகலாம், போக வேண்டும் எனும் போதெல்லாம் பிடரியில் முடி வளர்ந்து குதிரை மூஞ்சியையும் கழுதைக் கட்டையையும் நினைவுபடுத்தும் கோவேறு கழுதைகள் பற்றியும் அதனூடாக வரலாறு என்றோ தோற்ற வடிவமைப்பென்றோ ஏதோ உள் நுழைந்து, கண் நரம்புக்கூடாக அரைந்து அரைந்து மனதுள் பாவப்பட்ட ஜீவனெனவும், அதைப்போன்ற பலரையும் கொணர்ந்து எனை வசம் கொண்டு, நிலை, சூழல், நோக்கு என்று எதுவுமே இல்லாமல் நிர்வாணமாக்குகின்றதாய் பல தடவை கண்ணீர் கன்ன வழியிறங்கி மீசை முடிக்கிடையால் கடந்து சிகரட் சுட்டு கறுப்பான உதட்டில் ஊர்ந்து நாக்கில் பட்டு உப்புக்கரிக்கும் போதுதான் பிறந்து வளர்ந்து மண்வெட்டியும், கவ்வாத்துக் கத்தியுமாகபிடித்து காப்புக்காய்த்ததும் முரடு கட்டியுமாக வக்கிர தன்மையுடைய நிலைக்கு வருகிறேன்.


லயமாய் நீண்டு நூற்றுக்கணக்காய் ஆண்டுகளை சுமந்து ஆறடிக் காம்பராவாய் கிடந்து மனிதனாக எவரையும் முக்கித் தள்ளாமல் மலட்டுத்தனமாய் சூரியக்கம்பு புகவும், மழைநுழைந்து பீச்சியடிக்கவும் அதிர்வுகால இடைவெளியில் சொட்டும் மழைத் துளிக்குமாக ஓட்டைத்தகரத்தைக் கொண்ட தோட்டத்து ஒவ்வொரு லயமும், காம்பராவும், கான்சுமக்கும் மூத்திர முட்டை, மலப்புழுக்கையென அசிங்கத்தையும் ''அ''கூட தெரியாமல் அந்தப் பொட்டை கோவேறு கழுதை தள்ளும் சாணத்தைப்போல பெருவிரலை அழுத்திப் போட்ட அச்சைத்தவிர எதுவுமே தெரியாமல் எல்லாம் இழந்து கடல் கடக்க முடியாமலும் வாழ்வை சுமக்க முடியாமலும் கிடக்கும். அந்த மேட்டுலயத்து ஆயா என மலடுதட்டிப் போய் கிடக்கும் தோட்டத்து பாடசாலையையும் அதன் குறுகிய தோற்றமும் சாதாரணத்துக்குக் கூட் யாரையும் அனுப்பாமல் சாபப்பட்ட சேர்க்கையில் அலங்காரத்தனமாய் மேலாய் உயரமாயும், நீண்டும் தோற்றத்துக்கு ஏதோ குதிரையைப் போல பொன் பறக்க பளபளக்கும் மேனியர் இருப்பது தெரியும். உள்ளே எதுவும் இல்லாத இருட்டுத்தனமாய் கழுதைபோல வெற்றுக் கடதாசியோ அரசியல், தேர்தல்கால போஸ்ரர் தின்றோ அலைவதையும் பார்க்க. குதிரை வேலையில் தனித்துவமாய் இல்லாமலும் கழுதையாய் மூட்டை சுமந்து சிரமப் படாமலும் கலப்புற்ற பிறப்பாய் சிறு சல்லி உழைப்புக்காக சவுக்கு மரவீதியிலும், பச்சைப்புல்லும் கட்டிடமும் கொண்ட மைதானத்தை சுற்றி பிள்ளைகளை சுமக்கும்.

இந்த நினைப்புகள் தான் பாடசாலையையும் அதன் எண்ணக்கருக்களையும் கலைக்கின்றது. ஆனால் அப்பா அம்மாக்களது முடிவு அது எந்தக் கலப்புமில்லாமல் காலை அகட்டியும் உயரமாயும் பாயும் குதிரை என்பதுதான். இது கூட ஒப்பிட்டுப்பார்க்காமல் அரசபடையினதோ, வெள்ளைக்கார துரைமார்களதோ சீமைக் குதிரைகளையோ பார்க்காமல் எடுக்கப்பட்ட முடிவுதானென்பது என்னையும் பலரையும் பயமுறுத்த முடியாமல் போய் விட்டது. பத்தாமாண்டு படித்து பாடசாலை வசூலிப்புக்கு ''கொள்ளைப் பணம்'' செலுத்த முடியாததனால் கரைக்கே மீண்டேறிய அண்ணனது சேர் கருத்துப்படி அது கழுதையேதான். தோட்டம் கொத்த, தண்ணி ஊத்த, டீச்சரின் உடுப்புக்கழுவ (உள்ளாடை முதல்), பிள்ளை தூக்க என அழுக்குமூட்டை சுமைதாங்கவும், அடிமைத்தனப்பட்ட கழுதைத்தனமானது என்பது. சர்வதேச தனமான குதிரை அரபிக்குதிரைகள் என இனங்காணும் தன்மையில் அறிவார்த்த ரீதியில் நோக்கியே இதைக் கூறியிருக்கின்றார். உள்ளூர் நகரக்குதிரைகளின் அறிமுகப் படுத்தலுடன் நானும் எனது சகாக்களும் ஆராயத்தான் தெரிந்தது சூட்டியீன முடியாத கோவேறு கழுதையென்று. சிலருக்கு ஏறிச்சவாரி செய்ய ஏற்ற குதிரையாயும், அடிமைத்தனத்தை அடக்கி வைத்திருக்கும் கழுதை கட்டுமிடமாகவும், சில சுமப்புக்கு மாத்திரமான்தாகவும் தெரிந்தது.

இவைகளெல்லாம் மறக்கவென்றோ அதன் நினைவிலிருந்து திரும்பவுமாக சாய்ந்திருந்த தூணை விட்டு தலையெடுத்து மறுபக்கம் திரும்பினால் வெள்ளையும் கறுப்புமான புள்ளிகளுடன் காற்று நிரம்பிய பந்து காலால்படும் ஒவ்வொரு அடியும் கூட மீண்டும் அடையப்போகும் காலை அல்லது விழப்போகும் வலையை கண்கள் ஓடி மொய்ப்பினும் கூட மைதானத்தை சுற்றிவளையமாக அடிக்கப்பட்ட குதிரை ஓட்டப்பாதையை ஞாபக மூட்டி அதன் வாயிலாக மீண்டும் கோவேறு கழுதையையே கொண்டு வருகின்றது. அந்த ஓடுபாதைக்கு அந்தப் பக்கமாக வினோ அக்காவின் வீடு. பாசமாய் மனிதத்தனமாய் நட்புடன் பழகும் வினோ அக்காவும் தம்பி, அப்பா, அம்மா என எல்லோரும் நினைவுக்கு வரினும் ஓட்டப் பாதையை கடக்க குதிரைகள் எனை விடவில்லை. தலையாட்டியாட்டி கேட்டுக்கனைக்கும் குதிரையையும் எதிர்முகமாய் உப்புமூட்டையை ஆற்றாமல் சுமக்கும் கழுதையையும் இழுத்துக்கொண்டு வருகின்றன. சில வேளைகளில் நானும் கோவேறு கழுதைத்தனமாகவே இருக்கிறேன். எதையும் கருக்கட்டாமல் குதிரையைப் போல் பாயவும் பளபளக்கவும் முடியாமல், கழுதையைப் போல் சுமக்கவும் முடியாமல் கிடப்பது மட்டுமல்லாமல், என்னவள் பஸ்சுக்குள்ளாக வெளியிடமானாலும் மறை விடமாக நின்று பார்த்து சிரிக்காமல், கதைக்காமல் குதிரையாக கருதாமலும் ஏற்காமலும் துள்ளி ஓடவிடாமலும், கழுதையாக புறக்கணிக்காமல் ஒதுக்கித் தள்ளாமல் எதையும் நிரந்தரமாக தராமல், கூறாமல் இரண்டினதும் கலப்பாய், எதையும் எந்த விதமான கற்பனைக் கனவுகளையும் கருக்கட்ட விடாமல் கோவேறு கழுதைத் தனமாகவே நினைப்பது புரிகிறது.

நான் மட்டுமல்லாமல் எனது கூட்டுக் குடும்பமான சமூகமும் எல்லோரும் மக்த்தாக அழைத்து விரும்புகின்ற, தடவிக்கொடுக்கின்ற எப்போதும் ஆசையாக கவனமெடுத்துப் பார்த்து வளர்ச்சியை ரசிக்கின்ற உயர்த்தி சித்திரிக்கின்ற குதிரைப்போக்கு இல்லாமல் போகினும் நாட்டுக்கு தேவைப்படுவதற்காகவும் நாட்டை சுமக்கும் தேவையதிகரித்ததுவாக கடதாசியை தின்றுகிடக்க தனியான கழுதைத்தனமாக ஒதுக்கி வைக்க முடியாத இக்கட்டுக்கு குதிரையாய் இருக்க வேண்டியவர்கள் கோவேறு கழுதைத் தனமான வன்மத்துள் வைக்கப் பட்டிருப்பது யாருக்கு, எப்போது புரியப்போகுமென்பதும் அதன் நடக்கப் போவதுமே எ ிர்கால இருப்பின் எல்லோருமே பி ரிபொன பறக்க பாய்ந்தோடலாம்.





ஓலைக்குடிசையின் கிடுகுமுகட்டில்
தீமூளும்-
வதுவைக்கனவுமென்று,
விதவையும், இன்னும், விரிந்த மலர்களும்
அனல் மூட்டும்.

நீள் வரிசை,
வசையோதும் கழிப்பிட அவஸ்தைகள்.
'மரவட்டை' வாழ்விதனை-
உள்ளிழுத்த மனப்போரில்-
மலட்டு எஜமானே - உன்
'கறை' படிந்த கரங்களை நீட்டாதே

என் நெஞ்சே
என்னை அவமானப்படுத்திய, அக்கணத்தில்
பொட்டலங்களுள் மாற்றுடையும்
அவரிட்ட பிச்சையாகின
அந்திமத்தை நீயறிவாய்.

என் மண்ணே
ஏனெம்மை இழிவு படுத்தினாய்
தோடுபிய்க்க, காதறுந்த சரிதங்களை -
ஏனங்கு எழுத வைத்தாய்.

முறிந்த கவிதைகள்
சிறகடிக்கவியலா
போர் மேகம் தவழ்கின்ற மண் என்னதா?

சிறு நெஞ்சே
உன் துயரங்களைக் கவிழ்த்துக்கொட்டு.
உவர்க்காற்றில் - நீ
குருத்தோலைகளை தவறவிட்டாய்,
அலையாடும் கடல்மடியில்
கைநழுவிச் செத்தவுடன்
இளங்குயிலின் ஒப்பாரியை உரத்துப்பாடு.

வனாந்திரங்களில்
உன் சத்திரமிருந்தது
நிலவிலிருந்து பிரகாசமொழுக,
இருளுறைந்த இறுசல் நிழலில்
புதிய 'வரவு' கள் கண் விடுத்தன
உன் யாத்திரையின் சுவடுகளில்
புதைகுழியும் முளைத்தது.

என் நெஞ்சே
பொருமித் துயரெடுத்து
பெருங்குரலில் உரத்துப்பாடு

உனக்குரிய மணமகளை
யாருனக்குத் தேர்ந்தபாவி
அவள் உன்னித்துடையாளில்லை
அவள் மொழியும் உன்னுடையதாயில்லை
அவளே உன் வனப்பினைப் பருகவியலா
அந்தகள்.

உன் கவிதையைப்பாடவியலா
ஊமைக்குயில்;
உன் முதுமைதாங்கவும்
இளமை தணிக்கவுமியலா
ஓர் அரூபியை யாருனக்குத் தேர்ந்தபாவி

ஓ.... என் மணப்பெண்ணே.
நீ என்னவளல்ல;
என் தொப்புள்கொடி விழுந்து
முதுசெங்களின் உயிர்விளைந்த
மண்தான் என்னது.

மலட்டு எஜமானே
எனக்கென பெண் தேடாதே
நான் துயரெடுத்துக் கடந்துவந்த
வனாந்திரத்தை மீளவும் தாண்ட வேண்டும்
புதரடியில் புதையுண்ட
பிச்சலங்களின் காதில் விழ-
கத்திச் செல்வேன்

ஓ... மைந்தர்களே
தாயகம் மீள்கிறோம்
சாந்தி கொள்க
என் நெஞ்சே
யார்க்கினி அஞ்சுகிறாய்
என் ''குவாக்குவா'' சத்தம் விழுந்து
அழகுருவாய் மதர்த்த நிலம் எனதில்லையா

என்னிறைவா
நிலமேறிக் களித்துலாவ
எவரிடம் நான் இரந்து நிற்பேன்

ஓட்டமாவடி அறபாத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நூல் அறிமுகம்

**இலங்கை தென்கிழக்கு ஆய்வுமையத்தின் ஏற்பாட்டில் பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் துறை முதுநிலை விரிவுரையாளரும் கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழகங்களின் மெய்யியல்துறை ஆலோசகருமான எம்.எஸ்.எம். அனஸின் ''இஸ்லாத்தின் தோற்றம் - ஒரு சமூக அரசியல் பண்பாட்டியல் ஆய்வு'' நூல் அறிமுக விழா அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலாநிதி எம்.ஏ.நுஃமான் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கத்தை இங்கு தருகிறோம்.**

**இவ்விழாவுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழக பீடாதிபதி கலாநிதி கே.எம்.எச்.காலிதீன் தலைமை வகித்தார். இலங்கை தென்கிழக்கு ஆய்வுமையத் தலைவர் இக்பால் அலி வரவேற்புரையையும், பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளரும், அமையத் தவிசாளருமான பி.எம்.ஜமாஹிர் அறிமுகவுரையையும், தென்கிழக்குப் பல்கலைக்கழக இணைப்பதிகாரியும், விரிவுரையாளருமான அமையச் செயலாளர் ஏ.அஸ்கர் நன்றியுரையையும் நிகழ்த்தினார்.**

தொகுப்பு : இக்பால் அலி

# இஸ்லாமிய வரலாற்றை அக்கால சமூகப் பின்னணியில் ஆராயும் நூல்

பொதுவாக ஒரு பல்கலைக்கழகத்திற்கு மூன்று முக்கியமான பணிகள் இருக்கின்றன என்பார்கள். முதலாவது- அறிவைத்தேடுவது, இரண்டாவது- அறிவைப் பரப்புவது, மூன்றாவது- அறிவைப் பிரயோகிப்பது. பல்கலைக்கழகம் என்பது அறிவுடன் சம்பந்தப்பட்ட விடயம். அறிவைத் தேடுவது என்பது மற்றைய இரண்டுக்கும் அடிப்படையானது. அறிவைத்தேடுவது என்பது என்ன? அது பழைய குறிப்பு கொப்பிகளுக்குள் மட்டும் இல்லை. புதிது புதிதாக ஆராய்ந்து புதிய புதிய உண்மைகளைக் கண்டறிவதுதான் அறிவைத்தேடுவது என்று கருதப்படுகிறது. பல்கலைக்கழகத்தினுடைய மிகப்பிரதானமான பணி இந்த ஆராய்ச்சியாகும். அது இல்லாமல் புதிய அறிவில்லை. அது இல்லாமல் முன்னேற்றம் இல்லை. பண்பாட்டியல் மறுமலர்ச்சி இல்லை. ஆகவே, ஆராய்ச்சி என்பது பல்கலைக்கழகத்தினுடைய மிக அடிப்படையான அடித்தளம் ஆகும். அந்த வகையில் தான் பல்கலைக்கழகம் அதி முக்கியத்துவம் பெறுகின்றது.

இரண்டாவது அறிவைப்பரப்புதல் என்பது, மாணவர்களுக்கு கற்பித்தல். மாணவர்களுக்கு புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட விடயங்களை அவர்களுக்குச் சொல்வது மட்டுமல்ல. புத்தகங்கள் எழுதுவது, ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவதெல்லாம் இந்த அறிவைப்பரப்புதல் என்ற இரண்டாவது அம்சத்திலே வருகிறது.

மூன்றாவது, அறிவைப்பிரயோகித்தல். அதாவது கண்டறிந்த அந்த அறிவைப்பயன்படுத்தி புதிய விடயங்களை சமூக முன்னேற்றத்திற்கான அடித்தளங்களை அமைப்பது. அது பொருளாதார முன்னேற்றங்களுக்கான அபிவிருத்திகளாக இருக்கலாம். பண்பாட்டு அபிவிருத்திகளாக இருக்கலாம். அல்லது ஆராய்ச்சி, பரப்புதல் அடிப்படையிலான விடயங்களைக் கொண்டுள்ளனவாக இருக்கலாம். அந்த வகையிலே நண்பர் அனஸ் அவர்கள் ஒரு பல்கலைக்கழக ஆசிரியர் என்ற வகையில் இந்த அறிவைத்தேடுதல் என்பதில் பசி கொண்ட ஒருவராக இருப்பதை நான் அவதானிக்கின்றேன். இவர் இது காலவரை மிக அதிகமான கட்டுரைகள் எழுதியிருக்கிறார். ஆறு புத்தகங்கள் வெளியிட்டிருக்கின்றார். அவை வரலாறு, தத்துவம், இலக்கியம் என்று பல்வேறு வகையாக உள்ளன. அந்த வரிசையிலே ஆறாவது நூலாக ''இஸ்லாத்தின் தோற்றம் -ஒரு சமூக பண்பாட்டியல் ஆய்வு'' என்ற நூலை எமக்குத் தந்துள்ளார்.

இது இஸ்லாமிய வரலாறு சார்ந்த ஒரு நூல். அனஸ் அவர்கள் தத்துவத்தை தனது துறையாகக்கொண்டவர். அவரது துறை வரலாறு அல்ல. மெய்யியல். ஆனால் அவருடைய பார்வை மிகவும் விசாலமானது. ஏனென்றால்,




அவர் தனது பரப்புக்குள் மட்டும் நில்லாது பல்வேறுபட்ட அறிவைப் பயன்படுத்தி இந்நூலை உருவாக்கியுள்ளார். மெய்யியல், வரலாறு இவையெல்லாம் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ள விடயங்கள் தான். இது தத்துவம், வரலாறு என்று நாங்கள் பிரித்துப் பகுப்பாய்வு பண்ண முடியாது.' இலக்கியம், கலை, தத்துவம் ஆகியவையெல்லாம் ஒன்றோடு ஒன்று ஏதோ ஒரு வகையிலேயே பின்னிப்பிணைந்தவைதான். அறிவுக்கு நாங்கள் எல்லை போட முடியாது. இவையெல்லாம் பரஸ்பர உறவு உடையது என்ற வகையிலே, குறிப்பிட்ட துறையில் மட்டும் வரையறுத்துக் கொள்ளாமல் அனஸ் திகழ்கின்றார்.

அதுவும் இஸ்லாமிய வரலாறு தொடர்பான இந்த நூல் பல்வேறு அம்சங்களிலே மிகவும் முக்கியமானது என்று நான் கருதுகின்றேன். தமிழ் மொழியைப் பொறுத்தவரையிலே இஸ்லாமிய ஆய்வு நூல்கள் பொதுவாக மிகவும் குறைவு என்று சொல்லலாம். அதுவும் குறிப்பாக ஆராய்ச்சி சம்பந்தமான நூல்களைத் தவிர்ந்த ஏனைய சமயத்தொடர்பான நூல்கள் ஆதிகாலத்திலே இருந்து இன்றுவரை எழுதப்பட்ட நூல்கள் ஆயிரக்கணக்கிலே இருக்கின்றன. ஆனால் ஆராய்ச்சி நூல்கள் மிக மிக அபூர்வம். பற்றாக்குறையாகவே இருந்து வருகின்றன. அத்துடன் இஸ்லாமிய வரலாறு தொடர்பான நூல்களும் அந்தப் பொருள் நிலைகளிலே தான் இருக்கின்றன. பல ஆங்கிலப்புத்தகங்களும் வந்திருக்கின்றன. இஸ்லாமிய நாகரீகம் உயர் கல்வி மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மட்டத்தினருக்கும் ஒரு பாடநூலாக இருப்பதாலும், சிலர் சில பாடநூல்களை வெளியிட்டு இருக்கிறார்கள். சில அறிமுக நூல்கள் வந்திருக்கின்றன. ஆனால் மிகவும் சீரியசான ஒரு ஆராய்ச்சி நூல் என்ற வகையிலே சொல்லக்கூடிய நூல்கள் என்று என்னுடைய சிற்றறிவுக்குத் தட்டுப்படவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் பல நூற்றுக்கணக்கான நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இஸ்லாமிய வரலாறு, பண்பாடு, தத்துவம் ஆகிய துறைகளில் நவீன காலத்திற்கு ஏற்றவாறு பல்வேறு வகையான நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அனஸ் அவர்கள் இந்த நூலை எழுதுவதற்கு 86 துணை நூல்களை பயன்படுத்தி இருக்கின்றார், அதனுடைய பட்டியலைத் தந்திருக்கின்றார். அவற்றில் பெரும்பாலும் ஆங்கில நூல்கள்தான் உள்ளன. தமிழில் இம் மாதிரியான நூல்களைக் காண்பது அரிதிலும் அரிது.

பல்கலைக்கழக மட்டத்தில் இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீகம் ஒரு பாடமாக கற்பிக்கத்தொடங்கி நீண்ட காலமாகின்றது என நினைக்கின்றேன். குறிப்பாக 20 வருடத்திற்கு அதிகமானதாக இருக்குமெனக் கருதுகின்றேன். ஆனால் இந்த இஸ்லாமிய வரலாறு இந்த இஸ்லாம் சம்பந்தமான ஆய்வு நூல்கள் என்று சொல்லக் கூடியதாக ஒன்றைக் கூட தூக்கிப்போட முடியாமல் இருக்கின்றது. இதற்குக்காரணம் என்ன? ஏன் அவ்வாறு வரவில்லை. இதற்கு சில காரணங்களைச் சொல்லலாமென நான் யோசித்துப் பார்க்கின்றேன். ஒரு சமயத்தை அல்லது மதத்தை நாங்கள் வெறுமனே ஒரு மத நம்பிக்கையாகப் பார்க்கின்றோமே ஒழிய ஒரு சமூக நிறுவனமாக, ஒரு ஆராய்ச்சிக்குரிய பொருளாக நாங்கள் இன்னும் பார்க்கத் தொடங்கவில்லை. ஏனைய மதங்களைப் பொறுத்தவரையில் அந்த மாதிரி வெளியே நின்று ஒரு ஆராய்ச்சிப் பொருளாக, ஒரு சமூக நிறுவனமாக அதை ஆராய்வதற்கான முயற்சிகள் நடக்கின்றன. ஆனால். எங்களைப் பொறுத்தவரையிலே அந்த மாதிரியான வாய்ப்பு முயற்சிக்கு நாங்கள் இன்னும் வரவே இல்லை. மதத்தை மத வழிபாட்டுக்குரிய ஒரு அம்சமாக மட்டுமே கருதுவது ஒரு காரணமாக இருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன். மதங்கள் பற்றி ஆராயும் அளவுக்கு ஊக்கமளிக்கக் கூடிய பட்டப்பின் கற்கைநெறிகள் எங்களுக்கு இன்னும் வரவில்லை. இப்பொழுதுதான் இந்த எம்.ஏ. போன்ற துறைகள் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. அதனையும் ஒரு காரணமாகச் சொல்லலாம். மற்றையது சூழ்நிலைகளையும் எடுத்துக் கொள்ளலாம். குறிப்பாக மத உணர்வு கூடுதலாக எமது முஸ்லிம் மக்கள் மத்தியிலேயே இருக்கின்றது. இதனாலேயே ஆய்வாளர்கள் ஆராய்ச்சித் துறையில் நுழைவதற்கு ஒரு பயம் இருக்கின்றது. எப்படியும் எங்களை ஏதாவது ஒன்றுக்குள்ளே தள்ளிவிடுவார்கள் என்ற அச்சம் எமக்குண்டு. எனவே எங்களுக்கு இது போன்ற ஒரு வரலாறே இருக்கின்றது.

இங்கே ஒரு குறிப்பிட்ட சாரார் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தைச் சொன்னால் உடனே அவர்கள் 'பத்வா'க் கொடுத்து விடுவார்கள். இது செய்யத் அஹமத் கானுக்கும் நடந்தது தான். அறிஞர் சித்திலெப்பைக்கும் நடந்தது தான். எல்லோருக்கும் இதேகதி தான் நடந்தது. ஏனென்றால் எங்களுக்குள் ஏராளமான மதக்குழுக்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு குழு ஏதோ வகையிலே மறுகுழுவுடன் முரண்படும்பொழுது நீங்கள் ஆராய்கின்ற விஷயத்தைக் கொண்டு வந்தால் அதற்கு உடனே எதிர்ப்புக்கொடி காட்டிவிடுவார்கள். ஆகவே இம் மாதிரியான நிலைமைகள், மற்ற சமூகங்களுக்கு இல்லாத பிரச்சினைகள் நமக்கு இருக்கின்றன.

இதனை நமது வரலாற்று பின்னணியுடன் சேர்த்துப் பார்க்க வேண்டும். அதை குறையாகச் சொல்லவில்லை. ஒரு நிலைமையாகவே இருக்கின்றது. உதாரணமாக சமீபகாலமாக நடந்த சம்பவங்களைப் பார்க்கலாம். சல்மான் ருஷ்தியினுடைய வேறொரு நூலை இங்கே படமாக்கத் தொடங்கிய உடனே முஸ்லிம் அரசியல்வாதிகள் பலர் சேர்ந்து எதிர்ப்புக்கொடி காட்டி வழியனுப்பி வைத்துவிட்டார்கள். இத்தனைக்கும் அந்த நூலுக்கும் இஸ்லாமிய சமூகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இந்த நூலை எழுதிய ஆசிரியர் சல்மான் ருஷ்திக்கு ஏற்கெனவே பிரச்சினை இருக்கின்றது. அவருக்கு இன்னொரு மதத்தலைவர் பத்வாக் கொடுத்திருக்கின்றார். ஆகவே அவரை எங்களுடைய விரோதியாகக் கருதுகிறோம். அதனால் நாங்கள் அவர் சம்பந்தப்பட்ட விடயங்களை நிராகரிக்கிறோம். இம்மாதிரியான பல பிரச்சினைகள் வரலாற்று ரீதியாக நமக்கு இருக்கின்றது.

வேறு வேறு தேவைகளுக்காக அதுவும் முக்கியமாக அரசியல் லாபத்திற்காக சிலர் தாங்கள் அவர்களுடைய சார்பிலே நிற்கின்றோம் என்று காட்டிக்கொள்வதற்காக அறிக்கை விடுவதிலே முந்திக்கொள்வார்கள். அந்த நூலை இவர்கள் படித்திருக்கமாட்டார்கள். இந்த மாதிரியான தைரியத்துடன் ஈடுபட முடியாததற்கும் காரணம் என்று நான் நினைக்கின்றேன்.

மற்றொரு முக்கியமான காரணம் எமது கல்வி நிலை வரையறுக்கப் பட்டதாக இருப்பதாகும். பல்துறை சார்ந்த ஒரு கல்விமுறை இல்லை. கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகியவைகளுக்குள் எந்தவிதமான தொடர்புகளும் இல்லாமல் உள்ள நிலை. ஒருவர் சிறப்புப்பாடம் செய்ய வேண்டுமா? அல்லது மெய்யியல் செய்ய வேண்டுமா அல்லது வர்த்தகம் செய்ய வேண்டுமா இவைகளில் ஒன்றுக்குள் மட்டும்தான் நிற்பார். மற்றொன்றுமே தெரியாது. நாம் ஒன்றுக்குள்ளேயே வரையறுத்துக் கொள்வதும் அரசியல் முறைப் படுத்தப்பட்ட ஒரு குறுகிய கல்வி முறைக்குள் திணிக்கப்பட்டு இருப்பதும் இந்த ஆய்வுமுறையில் தேக்கம் இருப்பதற்கு ஒரு காரணம் என்று எனக்குத் தோன்றுகின்றது.

இப்பிரச்சினை இவற்றிற்கு மட்டுமல்ல இஸ்லாமிய பாடநூல்களிலும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையிலும் இந்தப்பிரச்சினை இருக்கிறது. இந்தியாவில் அஸ்ஹர் அலி இன்ஜினியர் என்ற ஒரு எழுத்தாளர் அவர் வித்தியாசமானவர். இவர் இதைப் போல Original Developement in Islam என்ற ஒரு முக்கியமான நூலை எழுதியிருக்கின்றார். இது சமீபத்தில் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டும் வந்திருக்கின்றது. அது இஸ்லாமியர் மட்டுமல்ல பொதுவாக எல்லோருமே படிக்க வேண்டிய ஒரு நூல். அவர் அந்த நூலின் முன்னுரையில் சொல்லுகின்றார். ''முஸ்லிம் அறிஞர்களைப் பொறுத்தவரையில், நவீன சமூக விஞ்ஞான அடிப்படையிலே இஸ்லாமிய வரலாற்றை ஆராய்கின்றபோக்கு இல்லாமல் இருக்கின்றது. ஆகவே இது முதல் முயற்சி'' என்று. சில சிக்கலான கருத்தியல் வேற்றுமைக்குள்ளே தன்னை இணைத்துக் கொள்ளாமல் ஒரு பல்துறை ஆய்வு நோக்கைப் பயன்படுத்தி இந்நூலை அவர் எழுதியிருக்கின்றார். அந்த வகையிலேயே ஒரு முக்கியமான கருத்தை நாங்கள் சொல்ல வேண்டும்.

இது இஸ்லாமிய தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்த அக்காலத்திற்குரிய சமூகப்பின்னணியை விரிவாக ஆராய்கின்ற ஒரு நூல். நாங்கள் உதாரணமாக இஸ்லாமிய வரலாற்றை ஐயாமுல் ஜாஹிலிய்யாக் காலம்'' என்று வரையறுத்துக்கொள்கின்ற காலத்தை எடுத்துக் கொள்வோம். அது உண்மையாக எந்தளவில் இருந்தது? அது உண்மையிலே இருண்டது தானா? அதற்குள்ளே தெரியக்கூடிய திடீரென்ற திடகாத்திரமான ஒரு வெளிச்சம் எவ்வாறு வந்தது என்பது போன்ற கேள்விகள் வரலாற்று ஆய்வாளர்களுக்கு வரும்.

அந்தக்கேள்விக்குரியவிடை இந்நூலிலே பொதிந்திருக்கின்றது. இஸ்லாத்தின் தோற்றத்திற்குப் பின்னணியாக அமைந்த சமூகப் பொருளாதார, பண்பாட்டுக்காரணிகளை இவர் கண்டறிய முயன்றிருக்கின்றார்.


இதிலே எட்டு அத்தியாயங்கள் இருக்கின்றன. முதலாவது அத்தியாயத்திலே அணுகுமுறைகளைப் பற்றிச் சொல்லுகின்றார். அவர் என்ன அணுகுமுறையிலே இஸ்லாமிய வரலாற்றை ஆராய்கிறார் என்று. அதிலே அவர் மார்க்ஸிய அணுகுமுறைபற்றிச் சொல்லுகின்றார். இஸ்லாமிய ஆராய்ச்சித் துறையிலே இந்த முறையைப் பயன்படுத்தியோர் சிலரே. இந்தியாவிலே அஸ்கர் அலி இன்ஜினியர் அவர்கள் அதைப்பயன்படுத்தியிருக்கின்றார். அதிலுள்ள சில அம்சங்களை உள்வாங்கி அனஸ் அவர்கள் தன்னுடைய நூலை ஆக்கி வைத்துள்ளார். ஆனால் முழுக்க முழுக்க மார்க்ஸிய அல்லது பொருள் முதல் வாத கண்ணோட்டத்தில் இந்நூல் அமைந்துள்ளது என்று சொல்லமாட்டேன். ஆனாலும் சில விஷயங்களை உள்வாங்கித் தேவைக் கேற்றவாறு இந்நூலை அமைத்திருக்கின்றார் என்பது முக்கிய அம்சமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாசகர் செவ்வழி



# கலை வியாபாரிகள்

இதழ் 136ல் வெளிவந்த கா. சிவபாலன் அவர்களின் ''பட்டிமன்ற வியாபாரம்'' பார்த்தேன். மிக லாவகமாக - எமக்குத் தற்போது தேவையான விடயத்தை குறுகத்தரித்துக் கூறியிருந்தார். அவருக்கு வாழ்த்துக்கள். சிலருக்கு இதில் முரண்பட்ட கருத்துக்கள் தோன்றினாலும் வட-கிழக்கு அனர்த்தங்களில் நேரடியாக அனுபவப்பட்ட பலருக்கு உடன்பாடு இருக்கும் என்பதை மறுக்க முடியாது.

இந்தியாவை 'எமது இரட்சகர்'களாக தொடர்ந்து இதுவரைக்கும் எண்ணியிருந்திருப்போம். ஆனால் இவ் யுத்தத்தைத் திசைமாற்றி தமக்கு சாதகமாக்க முனைந்து அதனால் கண்ட வடக்கு கிழக்கு 'அகதிகளாக்கலால்' புலம் பெயர்ந்தவர்கள் - எம்மவர்கள் தமிழ் நாட்டின் அகதி முகாம்களில் வாழாதிருந்திருந்தால் மட்டுமே.

இவைகளை நேரடியாய் பெற்ற அனுபவத்தைக் கொண்டு எழுத விழைகின்றேன்.

1990ம் அனர்த்தத்தில் அகன்று மண்டப முகாமில் (தமிழ்நாடு) எம்மவர்கள் அகதிகளாகக் குவிந்து வாழ்ந்த வேளையில் திரைப்படக் கலைஞர்களும், தயாரிப்பாளர்களும் முகாமிற்கு விஜயம் செய்திருந்தார்கள். எம்மவர் பலருக்கு தங்களின் அபிமான கலைஞர்களைக் கண்டதும் 'கண்மண்' புரியாமல் மகிழ்வுடன் ஆர்ப்பரித்தார்கள். தங்கள் நலனில் அக்கறை கொண்டு 'வெட்டுவார்கள் - பிடுங்குவார்கள்' என எண்ணிய நாதியற்ற எம்மவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

அகதிகள் முகாமிற்கு விஜயம் செய்திருந்த 'ஏமாற்றுவதையே' பிழைப்பாகக் கொண்டிருந்த கலைஞர்கள் - குறித்து ஐந்தாம் மாதத்தில் எமது பிரச்சினையை மையமாகக்கொண்டு இரண்டு படங்கள் தயாரிக்கப்பட்டன. எமது நிஜங்கள், நிழலாக - அதாவது அதிக வசூலுடன் கூடிய திரைப்படங்களாகியது. அதை எம்மவர்கள் முதல் காட்சி பார்ப்பதிலும் ஒரு பெருமை.

அண்மையில் சிவாஜி கணேசனுக்கு பொன் மகுடம் சூடிய சம்பவம் எம்கண் முன் நிற்கிறது. நடிப்பின் மேதை என்பதை மறுக்கவில்லை. இருபபினும் எம் நாட்டின் அழியா சொத்தான நடிகமணி வைரமுத்துவை நாம் ஏன் இப்படி நினைப்பதில்லை. நுழைவாயில் கட்டணமே ஆயிரம் ரூபாக்கணக்கில் சிவாஜி கணேசனைப் பார்க்க விழைகிறோம். கண்ணருகே இருக்கும் இமை கண்ணுக்குத் தெரிவதில்லைத்தான்

இந்த பொன் கிரீடம் சூட்டப்பட்டவர்கள், இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்த, வாழுகின்ற தமிழ் மக்களுக்கு என்ன பங்களிப்பைப் புரிந்தனர்.

இந்தக்கோளாறு இன்று நேற்று ஏற்பட்டதல்ல! இதிகாச காலம் தொடங்கி இன்றுவரை அதாவது, இராவணனை அரக்கனாகவும், அட்டூழியக் காரணாகவும், இராமனை தெய்வமாகவும் இந்தியப்புலவர்கள் சித்திரித்த காலம் தொட்டு, இலங்கை வானொலியில் ஈழத்துத் தமிழ்ப் பாடல்கள் ஆரம்பமாகும் போது வானொலியை நிறுத்தும் இக்காலம் வரை - இந்தியக் கலைஞர்கள் மட்டும் தான் கலைஞர்களாகவும், கவிஞர்களாகவும் ஏற்றுக்கொள்ளும் பண்பு எமக்குண்டு.

நமது ஒலி, ஒளி தொடர்பு சாதங்கள் கூட எம்மவர்களின் தரமான கலை இலக்கிய, விழுமியங்களை வெளிக் கொணரத் தயங்குவதையும் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

காலை 6.30, 11.00 மணிக்கும் இலங்கை வானொலியின் (வர்த்தக சேவை) எம்மவர் பாடல்களை செவிமடுங்கள். இந்தியப்பாடல்களை விஞ்சும் வகையில் இசையும், கவித்துவமும், குரல்வளமும் எழில் காட்டி நிற்பதை!

இறுதியாக ஒன்று! ஈழத்தமிழர்களின் துயர்கண்டு பதறும் இந்தியக்கலைஞர்கள் இல்லாமலில்லை. அவர்களை இனம்கண்டு கௌரவியுங்கள்! மதியுங்கள்! அதற்காக மகுடம் சூட்டாதீர்கள். பல கோடிக்கணக்கான ரூபா செலவில் தமிழ் நாட்டில் ஓர் வரலாறு காணாத திருமணவிழா நடந்ததென்றால், கண்முன்னே வருவது செல்வி ஜெயலலிதா ஆகும். ஆனால் திரைமறைவில் தெரியும். கோடீஸ்வரர் சிவாஜி கணேசனை யாரும் கரிசனை கொண்டதுமில்லை. எண்ணிப்பார்த்ததும் இல்லை!

இது புரிந்தால், பொன் மகுடம் தேவைதானா என்று புரிந்து விடும். குடும்ப ரீதியாக அந்தக் கலைஞரோடு பல காலமாக நாங்கள் நெருக்கம் எனக்காட்டுவதற்காக படம்பிடித்துக் காட்டும் 'மேட்டிமை'க் காரர்களே! சுயவிளம்பரங்களை உதறுங்கள்! இதை உணருங்கள்!

எம்நாட்டில் நாள்தோறும் எம்மவர்களுக்கு ஏற்படும் இம்சைகளுக்கும், அழிவுகளுக்கும், வல்லுறவுகளுக்கும் காரணமானவர்களின் நாட்டில் தான் உங்கள் வயதுவந்த பெண்பிள்ளைகளுடன் குடும்பமாய் - சுகமாய் வாழ்கின்றீர்கள் என்பதை.

***கனகசபை தேவகடாட்சம், மூதூர்***

# சனநாயக வழி ?

சனநாயக வழிக்கு வரும்படி அவ்வப்போது புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவது யாவரும் அறிந்ததே. இவ்வித அழைப்பினை விடுப்போர் எந்தச் சனநாயகத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்பதுதான் எமக்குக் குழப்பமாக இருக்கிறது. ஏனெனில், இந்த நாட்டில் இப்போது நடைமுறையில் உள்ள சனநாயகம் தமிழ் மக்களுக்கெதிரான சகல விதமான அநீதிகளையும் அனுமதிக்கின்றது.

அவர்கள் மீது குண்டு வீசிக்கொல்லவும், அவர்களது சொத்துக்களை அழிக்கவும், அவர்களுக்கு உணவு மற்றும் மருந்து போன்றவற்றைத் தடை செய்யவும், தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்திருக்கவும், கண்டபடி கைது செய்து தடுத்து வைத்திருக்கவும், சிறைக்கூடங்களில் வைத்து அவர்களைக் கொலை செய்யவும், பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கவும், வழிபாட்டிடங்கள், பாடசாலைகள் என்பவற்றை அழிக்கவும் எமது ''சனநாயகம்'' தாராளமாக இடமளிக்கிறது. அத்துடன் தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவத்தினர் ஆட்சி செய்யவும் இந்த ''சனநாயகத்தில்'' இடமுண்டு.

1948 அரசியலமைப்பின் 29ம் அதிகாரம் 2ம் பிரிவில் கூறப்பட்டதற்கு எதிராகச் ''சிங்களம் மட்டும்'' சட்டத்தை நிறைவேற்றவும், இங்குள்ள பாராளுமன்ற சனநாயகம் இடமளித்தது என்பதனையும் நாம் நினைவிற்கொள்ளல் வேண்டும்.

2. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க கால் நூற்றாண்டுகட்கு மேலாக எமது பாராளுமன்றம் இடமளிக்காதபடியால் ஆயுதப் போராட்டம் உருவாகி பத்தாண்டுகட்கு மேலாகிறது. இந்நிலையில் புலிகளைத் தவிர ஏனைய ஆயுதக் குழுக்கள் ''சனநாயக வழி''க்குத் திரும்பி விட்டனராம். அவர்கள் இவ்வாறு திரும்பி பல வருடங்களாயின. இவர்களால் மேலே 1ம் பகுதியில் கூறப்பட்டுள்ள கொடுமைகளில் எதனையாவது தடுத்து நிறுத்த முடிந்ததா? (தமிழ் மக்களுக்கெதிரான சகல கொடுமைகளும் இங்கு விபரிக்கப்படவில்லை. உதாரணத்திற்கு ஒரு சிலவே தரப்பட்டுள்ளன) முந்திய தற்போதைய ஆளும் கட்சிகளுடன் கைகோர்த்துள்ள போதிலும், இவர்களால் தமிழ் மக்களின் உரிமைகளில் ஒன்றைத்தானும் பெற முடிந்ததா?

நிலைமை இவ்வாறிருக்கையில் புலிகளும் இந்தச் ''சனநாயக'' வழிக்குள் வந்து என்ன செய்ய முடியும்? 25வருடங்கட்கு மேலாக தமிழ்ப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மக்கள் தமது மொழியுரிமையையும், நிலத்தையும் இழந்து போனார்கள் என்பதனை நாம் மறக்கவில்லை. புலிகளின் கையில் ஆயுதம் இருப்பதால்தான் தீர்வு பற்றி அரசாங்கம் பேசுகிறது. இதுதான் யதார்த்த நிலை. இது புலிகளை விமர்சிப்போருக்கும் நன்கு தெரியும்.

ஆக முதற்கண் எமது நாட்டில் சனநாயகத்தைச் சீர்படுத்த வேண்டும். நாட்டு மக்கள் அனைவரினதும் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதி செய்கின்ற ஒரு சனநாயகத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அவ்விதம் கட்டியெழுப்பினால் புலிகளின் ஆயுதங்களுக்கு வேலை இராது. இப்போது செய்வதைப்போன்று பெரும்பணத்தையும் பெறுமதிமிக்க உயிர்களையும் இழந்து புலிகளுக்கெதிராகப் போர் செய்ய வேண்டிய அவசியமும் இல்லாமல் போய்விடும்.

சரியாக தமிழ்பேச முடியாவிடினும் சிறுபான்மையினரான ஒருவரை வெளிவிவகார அமைச்சராக்கி அரசு தனது பிரச்சாரத்தை நடாத்திக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கெதிராக புலிகள் செயற்படுகிறார்கள் என அரசு கூறுவதாயின், தமிழ் மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதிசெய்ய அது முன்வர வேண்டும். அவ்வாறில்லாமல் இந்த விடயத்தைப்பற்றிப்பேச அரசுக்கு எவ்வித தார்மீக அதிகாரமும் இல்லை. புலிகளும் தமிழ் மக்களும் தமக்குள் ஏதும் முரண்பாடுகள் இருப்பின் தாமே தீர்த்துக் கொள்வர்.

→15

# உண்மை சொல்ல வேண்டும்!

புதிய உத்தேச அரசியலமைப்பு ஆலோசனைகள் பாராளுமன்றத்தில் அண்மையில் நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவ்வறிக்கையிலே, பிராந்தியங்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் என்ற விடயம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

அதிகாரப்பரவலாக்கத் திட்டத்தின் கீழ் பிராந்திய சபைகள் அமைக்கப்படும். வடபகுதியின் 5 நிர்வாக மாவட்டங்கள் மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களுடன் இணைக்கப்படும்.

ஆனால், இந்த இணைப்பு குறித்து ஆலோசனையில் இரண்டு கட்ட வாக்கெடுப்பு மாத்திரமே எனக் குறிப்பிட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

கிழக்கு மாகாணத்தின் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியதான தென் கிழக்கு பிராந்திய அமைப்பிற்கான வாக்கெடுப்பு என்ற பதம் ஏனோ காணப்படவில்லை. அந்நடைமுறையானது தவறுதலாக விடுபட்டுள்ளதா அல்லது பகிரங்கப் படுத்தப்பட்ட விடயத்திலே 'தொக்கி' நிற்கின்றதா?

கிழக்கு மாகாணத்தின் மொத்த வாக்காளர்கள் 7,77,787,ஆகும். திருகோணமலை மாவட்டத்தில் 195, 867ஆகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 269,914ஆகவும் (1996ம் ஆண்டின் கணிப்பு) அம்பாறை மாவட்டத்தில் 312, 006ஆகவும் (1994) காணப்படுகின்றது. இக்கணிப்பீட்டினைத் தொகுதி அடிப்படையில் இனவிகிதாசார ரீதியாலாகப் பின்வருமாறு காணலாம்.

| தொகுதிகள் | மொத்தம் | தமிழர்கள் | முஸ்லிம்கள் | சிங்களவர்கள் |
|---|---|---|---|---|
| திருகோணமலை | 75,103 | 45,148 | 14,312 | 15,643 |
| மூதூர் | 64,230 | 17,339 | 44,520 | 2,371 |
| சேருவில | 56,534 | 8,595 | 535 | 43,584 |
| வீதம் | | 36.19 | 30.43 | 31.44 |
| மட்டக்களப்பு | 1,23,489 | 80,296 | 42,005 | 1,188 |
| பட்டிருப்பு | 69,524 | 67,026 | -- | 786 |
| வீதம் | | 72.09 | 25.09 | 1.02 |
| அம்பாறை (1989) | | | | |
| திகாமடுல்ல | 92,901 | | | |
| சம்மாந்துறை | 44,453 | | | |
| கல்முனை | 43,537 | | | |
| பொத்துவில் | 82,231 | | | |

இத்தரவுகளின் பிரகாரம் தனித்தனியான பிராந்திய சபைகள் தோற்றுவிக்கப்பட்டால் கிழக்கு மாகாணத்திலே முஸ்லிம்களின் வீதாசாரம் உயர்வாகவே காணப்படும். ஏற்கெனவே முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட 'தென்கிழக்குப் பிராந்தியம்' என்ற அமைப்பு தொடர்பாக ஸ்ரீ.ல.மு.கா. கட்சி தீவிர கவனம் செலுத்தியமையினை யாவரும் நன்கு அறிவர். அண்மையிலே பகிரங்கப் படுத்தப்பட்டுள்ள ஆலோசனையின் படி அவ்வாறான அம்சம் தொடர்பாக எவ்விதமான சைககள் கூடக்காணப் படவில்லை. மேற்படியான ஆலோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு மாதமும் முடிவயடையப்போகின்றது. ஆனால் இதுவரையிலும் முஸ்லிம்களுக்காகவெனத் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறும் கட்சிகளினதும், தாமே முஸ்லிம்களின் தலைமைத்துவம் எனக்கூறும் தலைவர்களிடமிருந்தும் எவ்விதமான அசைவுகளும் அற்ற நிலைமையே (அறிக்கைகளும் உள்ளடங்கலாக) காணப்படுகின்றது. இணைந்த பிராந்தியத்தில் அல்லது தனித்தனியாக்கப்படவுள்ள பிராந்தியத்தில் முஸ்லிம்களின் நிலை தொடர்பான முடிவுகள் தான் என்ன...? யாராவது அறிந்தவர்கள் இது தொடர்பான உண்மைகளை எமக்குப் புரிய வையுங்களேன்...

திருகோணமலை, மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு எடுக்கப்படும். இம்மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு இந்த இணைப்பில் சம்மதமா என்பதை ஆராயவே இவ்வாறு அபிப்பிராய வாக்கெடுப்பு எடுக்கப்படும்.

இதில் பொது மக்கள் அதிகப்படியான வாக்குகள் மூலம் சம்மதம் தெரிவிப்பின் வடக்கு - கிழக்கு பிராந்திய சபை அமைக்கப்படும். சம்மதம் தெரிவிக்காது போயின், தனித்தனியான பிராந்திய சபைகள் அமைக்கப்படும்.

வடக்கு - கிழக்கு (இணைந்த) பிராந்திய சபை அமைக்கப்படும் பட்சத்தில் அம்பாறை மாவட்டத்தில் தனியானதொரு பிராந்தியம் அமைப்பது குறித்து அம்பாறைத் தொகுதி வாக்காளர்கள் மத்தியில் பொதுஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்படும்.

தனியான பிராந்தியமாக அமைய வேண்டும் என்று பெரும்பான்மையான வாக்காளர்கள் கருத்துத்தெரிவித்தால், அம்பாறை மாவட்டத்தில் தனியான பிராந்தியம் செயற்பட அனுமதிக்கப்படும். அதிகப்படியான வாக்குகள் கிடைக்கப் பெறாவிட்டால் அம்பாறைத் தொகுதி ஊவா பிராந்திய சபையுடன் இணைக்கப்படும்.

ஏற்கெனவே 1997.01.02ம்திகதிய பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சர் ஜி.எல் பீரிஸ் அவர்கள் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பானது மூன்று கட்டங்களாகவே நடைமுறைப்படுத்தப்படும் என்பதாகக் கூறியுள்ளார். ஆனால், சமர்ப்பிக்கப்பட்டுள்ள 'அரசியலமைப்புத் திருத்தத்திற்கான அரசியல்

***தி. சமூகன், திருகோணமலை***

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

# சரிநிகர்

## யாருடைய சுதந்திர...

இலங்கை 'சுதந்திரமடைந்து' ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியடைந்ததைக் கொண்டாடும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் ஒழுங்கு செய்துள்ள விழா இந்தச் சுதந்திரப் பொன் விழா.

கண்டி மாநகரில் கோலாகலமாக, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவை மிஞ்சிவிடுகின்ற விதத்தில் டாம்பீகமாக இவ்விழாவை கொண்டாட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டங்களை, சுதந்திரமாக நீங்கள் கொண்டாட விடமாட்டோம் என்று அறிவிப்பது போல வரலாற்றுப் புகழ் பெற்ற தலதாமாளிகையில் புலிகள் நடாத்திய தற்கொலைத் தாக்குதலையும் உதாசீனம் செய்துவிட்டு அதைக் கொண்டாட முனைந்து நிற்கிறது அரசு.

கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவில் சொகுசு கார் வண்டிகளும், ஒவ்வொன்றும் இரு மில்லியன் ரூபா விலையில் இருபதுக்கு மேற்பட்ட குதிரைகளும் விழாக் கொண்டாட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கண்டி மாநகர் முழுவதும் வெள்ளை வெளேரென வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. பொலிஸ், இராணுவம் என பாதுகாப்புக் கெடுபிடிகள் தீவிரமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அவ்வளவும் ஏன், முக்கிய அமைச்சர்கள் அனைவருமே தமது மற்ற வேலைகள் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு கண்டியிலேயே தங்கியிருந்து விழா ஏற்பாடுகளை கண்காணித்து வருகிறார்கள்.

இவ்வளவு தடல்புடலான ஏற்பாடுகளுடன் நடக்கவுள்ள சுதந்திர விழா குறித்து நிச்சயம் இந்த நாட்டு மக்கள் அனைவரும் பெருமைப்பட்டுத்தான் ஆக வேண்டும்; 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று' ஆடிக் களிக்கத்தான் வேண்டும்; ஐம்பது ஆண்டு காலச் சுதந்திரக் காற்றைச் சுவாசித்த பெருமிதம் அவர்களின் முகத்தில் மின்னத்தான் வேண்டும்.

ஆனால் இங்கே நடப்பது தான் என்ன?

அரசாங்க தகவல் தொடர்பு சாதனங்களையும், அரசாங்கத்தின் உறுப்பினர்களையும் தவிர வேறு யாரும் இது பற்றி அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. எந்த மக்களின் முகத்திலும் சுதந்திரப் பொன் விழா மகிழ்ச்சி பூத்துக்குலுங்கவில்லை.

வடக்கு கிழக்கிலே வாழ்கின்ற மக்கள் தமது அன்றாட வாழ்வுக்கான சுதந்திரம் பறிபோனவர்களாய், தாம் பிறந்து வளர்ந்து புழுதி அளைந்து விளையாடிய மண்ணில் சுதந்திரமாக நடக்க முடியாமல் முடக்கப்பட்டிருக்கிறார்கள். படலையைத் திறந்தால் ஒரு காக்கிச் சட்டையும் துப்பாக்கியும் அவர்களை எதிர் கொள்கிறது. வீட்டிலே வெளிச்சம் இல்லை. இருட்டுக்குள்ளேயாவது நிம்மதியாகப் படுத்துறங்கி விடலாம் என்றால், எந்த நேரம் கூரையைப் பிய்த்துக் கொண்டு குண்டு வந்து விழுமோ என்ற அச்சம். சுதந்திரத்தை மனதுள்ளும் தொலைத்துவிட்ட நிலை அவர்களுக்கு. காலங்காலமாய் வாழ்ந்த பூமி, சிறுகச் சிறுகச் சேர்த்துக் கட்டிய வீடு எல்லாம் இழந்து, நடுத்தெருவிலும், உலகத்தின் கடைகோடியெங்கும் அகதிகளாக அவர்கள்.....

வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற சிறுபான்மையின மக்களுக்கோவென்றால் கணத்துக்கு கணம் அவர்களை இந்த நாட்டவர்கள் அல்ல என்று முத்திரை குத்தும் விசாரணைகள்... கைதுகள்... சிறைவாசங்கள்... உரிமைப் பாதிப்புக்கள்....

தேசத்தின் புத்திரர்கள் என்றும் மண்ணின் மைந்தர்கள் என்றும் அரசியலாளர்களால் மகுடம் சூட்டப்பட்டு வரும் சிங்கள மக்களும் கூட, சுதந்திரம் என்றால் என்ன என்பதை அறிந்து வைத்திருப்பதாக தெரியவில்லை. காணாமல் போன தமது பிள்ளைகளை தேடி அவர்கள் அலைகிறார்கள்; கொல்லப்பட்ட தம் குழந்தைகளின் எலும்புத் துண்டுகளையாவது பார்க்கவென புதைகுழிகளை தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்; தமது உழைப்பும் உதிரமும் உறிஞ்சப்பட்டுக் கொண்டிருப்பது குறித்து ஓயாமல் கதறிக் கொண்டிருக்கிறார்கள்; தமது செல்வங்கள் சூறையாடப்படுவது குறித்து திகைத்துப் போய் நிற்கிறார்கள். அவர்களின் பெயரால், அவர்களது இனத்தின் பெயரால், அவர்கள் சார்ந்த மதத்தின் பெயரால் அவர்களது சுதந்திரங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டுவிட்டன. கொலை வெறியும், யுத்த நியாயமும் பௌத்த தர்மங்கள் என்ற விதமாக அவர்களது சரித்திரம் முழுவதுமே நஞ்சூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆக, இந்த சுதந்திரப் பொன் விழா யாருடைய சுதந்திரத்தைக் கொண்டாட நடாத்தப்படுகிறது!நாட்டு மக்கள் அனைவரும் சோபையிழந்த முகத்துடன் திகைத்திருக்கும் ஒரு சூழலில் நடாத்தப்படும் இந்த விழா யாருக்காக நடாத்தப்படுகிறது?

1948ல் 'சுதந்திரம்' என்ற பெயரில் பிரிட்டிசாரின் கையிலிருந்து அதிகாரம் உள்நாட்டு கறுப்பு வெள்ளைக்காரர்களின் கைக்கு மாற்றப்பட்ட போதே இந்த நாட்டு மக்களின் 'சுதந்திரத்திற்கு என்றென்றைக்குமான அடிமைச் சாசனம் எழுதப்பட்டு விட்டது.'

சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு,அது சுதந்திரமாக வளர்வதற்கான உரிமை இந்தச் சாசனம் மூலம் பொறிக்கப்பட்டது. அரசியல் யாப்பு ரீதியாகவும், அதிகார மையப்படுத்தல்கள் மூலமாகவும் கருக்கொண்ட இந்த சுதந்திரம், வேகமாக வளர்ந்தது. இன்று இந்த நாடு பௌத்த நாடு என்றும், சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமேயான நாடு என்றும் நிறுவன ரீதியாக உறுதிப்படுத்தும் விதத்தில் அது வளர்ந்திருக்கிறது. நாட்டின் சிங்கள பௌத்தர்கள் அல்லாத அனைத்து மக்களும் இனரீதியாக 'அடிமை' நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார்கள். தமது உரிமை பற்றியும், தமது சுதந்திரம் பற்றியும் பேசிய அனைவரும் ஆயுதமுனையில் நசுக்கப்பட்டார்கள். அவர்கள் மீது படுகொலை யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் மீதோ இதே இனவாதம், அவர்களை காப்பதாகக் கூறிக் கொண்டு உயிரோடு விழுங்கி வருகிறது. பௌத்த மதத்தின் பெயரால் அவர்கள் அனைவரும் நயவஞ்சகமாகக் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமது குழந்தைகளை யுத்த யாகத்திற்கு அவிப்பாகமாகச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சாத்வீக வழியையும் அன்பு மார்க்கத்தையும் போதித்த புத்தபகவானின் பேரால், அவர் பரிசுத்த நிர்வாணம் பெற்ற போதிமர நிழலின் பேரால் படுகொலை வரலாறு இம்மண்ணில் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பௌத்த சிங்கள பேரினவாதம் தனது சுதந்திரத்தை பரிபூரணமாக, சட்டபூர்வமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறது; அதைக் காக்கவும் வளர்க்கவும் என்று மாறி மாறி வந்த அரசாங்கங்கள் போட்டி போட்டுக் கொண்டு இயங்குகின்றன.

கொழும்பிலே, இலங்கையின் சுதந்திர நினைவாலயமாக நிறுவப்பட்ட சுதந்திரச் சதுக்கம் இருக்க கண்டி தலதா மாளிகையில் சுதந்திரப் பொன் விழா கொண்டாடப்பட வேண்டுமென இன்றைய அரசாங்கம் எடுத்த முடிவு எவ்வளவு பொருத்தமான ஒரு முடிவு என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

பௌத்த சிங்கள பேரினவாதத்தின் சுதந்திர பொன்விழா பௌத்த ஆலயத்தருகே நடாத்தப்படுவது முற்றிலும் பொருத்தமானதுதான்.

ஆம், இந்தப் பொன்விழா அவர்களுக்கு உண்மையில் ஒரு பொன்விழா நாள்.

மற்றையவர்களுக்கு இது ஒரு அடிமை சாசனம் எழுதப்பட்ட நினைவு நாள் மட்டுமே......

சுதந்திர தினம் என்றால் ஏற்றப்பட வேண்டியது கறுப்புக் கொடிதான் என்று பள்ளிப்பராயமுதல் பயின்றுவந்த ஒரு பரம்பரை இன்று தன் இழந்த உரிமைக்காக உயிர் விட்டுக் கொண்டிருக்கிற நிலையில், இந்தப் பொன்விழா கொண்டாடப்படுகிறது. சுதந்திரம் என்றால் சிறுபான்மை இனங்களை அழிப்பதற்கான சுதந்திரம் தான் என்ற புதிய வரலாறு சிங்கள சிறார்களுக்கு பாலுடன் கலந்து ஊட்டப்பட்டு வருகிறது......

இந்த நிலையில் இது இலங்கை மக்களின் சுதந்திர விழா என்று இந்தப் பொன் விழா கொண்டாடப்படுவதை எந்தவகையான விழா என்று சொல்வது?

கொலை வெறியின் பொன் விழா என்றோ. அல்லது, முழுநாட்டு மக்களையும் 'கறுப்பு வெள்ளையர்' அடிமை கொண்ட நாளின் பொன்விழா என்றோ அல்லது, இந்த நாட்டு மக்களின் உரிமைகளும் இறைமையும் புதைக்கப்பட்ட நாளின் ஐம்பதாண்டு நிறைவு விழா என்றோ சொல்லலாமா?

சொல்ல வேண்டி இருப்பதுதான் இன்றைய நமது நிலை! ○

# தலதா மாளிகை சம்பவமும், பிறகும் !

இலங்கையின் வரலாற்றுப் புகழ் பெற்ற பௌத்த பீடமான ஸ்ரீ தலதா மாளிகை மீது ஜன.25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட லொறிக் குண்டுத் தாக்குதல் இலங்கையின் இன்றைய யுத்தமயப்படுத்தப்பட்ட அரசியல் வன்முறைப் போக்கில் ஒன்றும் அதிசயிக்கத்தக்க விடயமல்ல.

சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாட வரியற்ற இரண்டு கோடி ரூபா பெறும்தியான இரண்டு பென்ஸ் கார்கள் (ஒன்று இளவரசர் சார்ள்ஸ்க்கு, மற்றையது ஜனாதிபதி சந்திரிகாவுக்கு), ஒவ்வொன்றும் 2 மில்லியன் ரூபா பெறுமதியான பிரான்ஸிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 24 குதிரைகள், யாழ்ப்பாணம் சுமுகம் என்று காட்ட அவசர அவசரமான உள்ளூராட்சித் தேர்தல். மில்லியன் கணக்கான ரூபாய்கள் செலவில் கண்டியை அழகு படுத்தும் திட்டம், பாதகாப்புப் பலப்படுத்தல், தமிழர் சுத்திகரிப்பு என எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டது போல இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கண்டி ராஜ வீதி வழியாக நுழைந்த இக்குண்டு லொறியில் இருந்தவர்கள் வீதியின் இடை நடுவேயிருந்த பொலிஸ் சோதனைச் சாவடியின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபடி முன்னேறி தலதா மாளிகையின் நுழைவாயில் எதிரே வெடிக்க வைத்துள்ளார்கள்.இச் சம்பவத்தில் 3 தற்கொலைப்படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தற்கொலைப் படையினரின் 3 மேலங்கிகள், ரண்டு ரீ 56 துப்பாக்கிகள், ஒரு ஆர்.பி.ஜி, 2 வானொலிக் கருவிகள், 10 சுற்று 1 மில்லி மீற்றர் தோட்டாக்கள் என்பவற்றைப் படையினர் கைப்பற்றி உள்ளதாக அறிவித்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்பினால் தலதா மாளிகையின் நுழைவாயில், முன்புற எண்கோண மண்டபக்கூரை மதில் என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் தலதா மாளிகையின் உள்ளேயும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கண்டி குயின்ஸ் ஹோட்டல் கிறின்ட்லேஸ் வங்கி, இந்திய உதவித் தூதுவராலயம், 150க்கு மேற்பட்ட கடைகள், பலவீடுகள் என்பனவற்றின் யன்னல் கண்ணாடிகள் சிதறுண்டும் சிறு சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இக்குண்டு வெடிப்பின் அதிர்ச்சியினால் குயின்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்த 50க்கு மேற்பட்ட உல்லாசப்பிரயாணிகள் ஹோட்டலை விட்டு வெளியேறியதாகவும் தெரியவருகிறது.

குண்டு வெடித்த இடத்திலிருந்து 200 யார் தொலைவிலேயே ஜனாதிபதியின் வாசஸ்தலமான ஜனாதிபதி மாளிகை உண்டென்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்குண்டு வெடிப்பினால் இதுவரை 14 பேர் பலியாகியிருப்பதுடன் 30க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஆனாலும் காயமடைந்தோரின் எண்ணிக்கை இதைவிடக் கூடுதலாக உள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குண்டு வெடிப்பின் சத்தத்தை 10 மைல் சுற்றுவரையான தூரம் வரை கேட்கக் கூடியதாகவிருந்ததாகவும், அவ்விடத்தில் 10 அடிஆழமானகுழி ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

'நான் தலதா மாளிகை சோதனைச் சாவடியில் இருந்தேன். காலை 6 மணிக்கு மாளிகையின் கதவுகளைத் திறந்து பக்தர்களை உட் செல்ல அனுமதித்தோம். சிறிது நேரம் சென்ற பின்பு லைட் வெளிச்சத்துடன் ஓர் லொறி மாளிகைப் பக்கம் வருவதை நான் கண்டேன். ஏன் இந்தக் காலை வேளையில் லொறி இந்தப் பக்கம் வருகிறது என்று நான் சந்தேகித்தேன். அதே வேளை லொறி வந்து கேட் அருகிலுள்ள படிக்கட்டுடன் மோதியது.அவ்வேளை லொறிச் சாரதிக்கருகிலிருந்த நபர் துப்பாக்கியொன்றை எடுப்பதை நான் கண்டேன். இவர்கள் புலிகள் தான் என்பது எனக்கு விளங்கி விட்டது. எனது கையில் ஆயுதம் எதுவும் இல்லாதபடியால் எனது பக்கத்திலிருந்தவர்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு சத்தமிட்டுக் கூறிக் கொண்டு நான் ஓடினேன். அதே நேரம்லொறியும் வெடித்துச் சிதறியது' என்கிறார் தலதா மாளிகைக் காவல் பிரிவு உத்தியோகத்தரான ஜயசிங்க பண்டார.

குண்டு வெடித்த உடனேயே இராணுவத்தினரும் பொலிசாரும்அப்பகுதிக்குள் எவரும் நுழையாதவாறு தடைகளை ஏற்படுத்தினர்.

மதியம் போல் திரண்டு வந்த ஆயிரக் கணக்கானோர் சிங்கக் கொடிகளை ஏந்திய வண்ணம் தமிழர்களுக்கும், புலிகளுக்கும் எதிராகக் கோஷமிட்டனர்.

சிங்கக் கொடிகளை ஏந்திய வண்ணம் ஊர்வலமாகச் சென்ற 3000க்கு மேற்பட்டோர் முதலில் கட்டுகலை ஸ்ரீசெல்வவிநாயகர் ஆலயத்துள் புகுந்தனர். மதில்களை உடைத்தனர். 24க்கு மேற்பட்ட ஆலயத்தின் விக்கிரகங்கள், ஏனைய பொருட்கள் என்பன உடைத்து நொருக்கப்பட்டன. உண்டியல்களை உடைத்து பணத்தையும் அள்ளிக் கொண்டனர். கோயிலை உடைத்து பலத்த சேதம் விளைவித்து வெகு நேரத்திற்கு பின்னரே பொலிஸார் அவ்விடம் வந்து கண்ணீர்ப்புகை அடித்து அவர்களை வெளியேற்றினர். இவ்வளவுக்கும் கோயில் கண்டி பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு அண்மையிலேயே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே போல் குருதெனிய குருத்துவத்த முத்துமாரியம்மன் கோயிலின் சித்திரத்தேரும் ஞாயிறு இரவு கோயிலை முற்றுகையிட்ட நூற்றுக்கு மேற்பட்ட காடையர்களால் எரிக்கப்பட்டுள்ளது. இத்தேரின் பெறுமதி பத்துலட்சம் ரூபாவாகும்.

இதே போல் இன்னுமோர் கோஷ்டியினர் இந்துகலாசார மண்டபத்துக்குள் நுழைந்து அங்கு திருமணத்திற்கு வந்திருந்தவர்களின் நகைகளை கொள்ளையிட்டதுடன் அங்கிருந்தோர் மீது தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர். அதே நேரம் இந்து கலாசார மண்டபத்தின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு வான்கள், ஒரு மோட்டார் சைக்கிள் என்பன தீமூட்டி முற்றாக எரிக்கப்பட்டன.

இவ்வாறே சிங்கக் கொடிகளை ஏந்திய இக்கோஷ்டியினர் கட்டுக்கலை, பேராதனை வீதிகளிலுள்ள தமிழ்க்கடைகள் மீது கல்வீச்சுக்களை மேற்கொண்டதுடன் பெயர்ப் பலகைகளையும் அடித்து வீழ்த்தினர். பஸ்நிலையத்திலும் வீதிகளிலும் சென்ற பல தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டனர். இதே போல் கண்டி நகரிலுள்ள தமிழர்களின் வீடுகளை நோக்கி இக்கும்பல் கற்களால் தாக்கி சேதப்படுத்தியது. ஞாயிறு இரவு சுதுபொல பகுதியிலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான 20 வீடுகள் மூற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன.

கண்டியிலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஹந்தான தோட்டத்தில் நுழைந்த காடையர்குழு அங்குள்ள தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளைத் தாக்கி சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளது.

இதேவேளை குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கண்டிநகரை குறிப்பாக தமிழர்கள் வாழும் பகுதியை சுற்றி வளைத்த படையினர் 20க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களை கைது செய்ததுடன் அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலரை பல மணிநேரம் தடுத்து வைத்து துருவித்துருவி விசாரித்ததாகவும் தெரியவருகிறது.

தொடர்ந்தும் காடையர்களின் தாக்குதலுக்கு இலக்காகி வரும் கண்டி தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து பேசவிருந்த கூட்டம் 30 திகதிவரை பின் போடப்பட்டுள்ளதாகக் கண்டி மாவட்ட இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.இராஜரெட்ணம் அறிவித்துள்ளார்.

தம்மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் சேதவிபரங்கள் பற்றி கண்டி பொலிஸ் நிலையத்துக்கு முறையிடச் சென்ற பல தமிழர்கள் பொலிசாரினால் உதாசீனப் படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

தமிழ் மக்களுக்கெதிரான இத்தனை வன்முறைச் சம்பவங்களும் காடையர்களால் மேற்கொள்ளப்படுகின்ற வேளை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கண்டியில் தான் தொடர்ந்தும் தங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் குண்டு வெடிப்பால் சேதமுற்ற தலதாமாளிகையை பார்வையிட்ட ஜனாதிபதி சந்திரிகா திருத்த வேலைகளை மேற்கொள்ள 2 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார். அதே போல் அமைச்சர் அஷ்ரஃப், மக்கள் வங்கி என்பனவும் திருத்த வேலைகளுக்குப் பெருந்தொகை பணத்தை உதவ முன்வந்துள்ளனர்.

இவற்றிற்கிடையே 'அரசாட்சிக்குப் பொருத்தமானவர்கள் தலதா மாளிகையைப் பாதுகாக்கக் கூடியவர்கள் மட்டுமே' என்கிறார் மல்வத்தை மகாநாயக்கதேரர்.

மறுநாள் திங்கட்கிழமை கொழும்பு பௌத்தலோக மாவத்தையிலுள்ள அகில இலங்கை பௌத்த சம்மேளனத்திலிருந்துஅலரி மாளிகை வரை ஒரு பாதயாத்திரையை நடாத்தியிருக்கிறார்கள் பௌத்த பிக்குகள். கூடவே ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.அவர்களுடைய பிரதான கோரிக்கையாக இருந்தது பொன் விழாவைத் தடை செய்! அரசியல் தீர்வைப் பூட்டிவை! என்பனவாகும்.

சிங்கள பௌத்த பேரினவாதம் தோற்றுவித்த இன்றைய யுத்தமானது அதன் அதிகார பீடமாக விளங்கும் தலதாமாளிகையின் வாசற்கதவு வரை வந்துள்ளது என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு சமூகவியலாளர். ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்